Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර්


ஜன.05-11, 2003

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 493

## உயர் பாதுகாப்பு வலயம் புலிகளின் வியூகம் என்ன?





## கிரைம் ஸ்டோரி
## அசத்தல் தொடர் ஆரம்பம்

## வாசகர்களுக்கு புத்தாண்டுப் பரிசாக குறுக்கெழுத்துப் போட்டி

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## ஆன்மீகம்



### விரதத்தின் தூய்மை

இந்துக்களாகிய நாம் பலர் கட்டாயம் விரதம் இருக்க வேண்டும் என்று பெயரளவில் இருக்கின்றோம். திருவிழாக் காலத்தில் மட்டும். விரதம் இருந்துவிட்டு முடிந்தவுடன் ஆடு வெட்டி உண்பதால் இறை அருளைப் பெறமுடியாது. பலருக்குக் கஷ்டம் ஏற்படும் போதுதான் இறைவன் ஞாபகம் வருகிறது. எந்நேரமும் இறைவனைத் துதிப்போமானால் ஒரு கஷ்டமும் நேராது.

எம் மத்தியில் துன்பப்படும் அனைவருக்கும் நாம் ஆறுதலாகவும், அவர்களுக்கு உதவியாகவும் இருந்தால் இறைவன் எம் விரதத்தின் மூலம் எமக்குப் பலன் அளிப்பார். வயிற்றுப் பசிக்காக இறைவன் எம் விரதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஆன்மாவின் சுத்தத்திற்காவே விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆகவே, நாம் இறைவனுடன் சேர்ந்து அயலவரையும் நேசிப்போமாயின் எம் விரதம் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிதிபன் – யாழ்ப்பாணம்.

### தேவ சமாதானம்

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்".

**ஏசாயா: 41:–10**

நாங்கள் நடக்க முடியாத வேளைகள் வரும்போது அன்புடன் எம்மைத் தூக்கி தமது தோள்களில் சுமக்கும் தகப்பன் எங்களோடிருக்க நாம் ஏன் பயம் கொள்ள வேண்டும்? சோதனைக் காலங்களில் அவர் கூட இருந்து வழி நடத்துவார். ஒரு போதும் நாங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்பட விடமாட்டார். தாங்கிடும் பெலன் தருவார். அல்லது தப்பிச் செல்ல வழி தருவார். தமது நீதியின் கரத்தினால் எம்மைத் தாங்கி இதயத்தில் சமாதானம் தருவார். அவர் கொடுக்கும் சமாதானம் இந்த உலகத்தால் கொடுக்க முடியாது. அது தேவ சமாதானம். ஜீவசமாதானம். நித்திய சமாதானம்.

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்.

**யோவான்: 14:–6.**

விஜயா பிரான்சிஸ்.

### அல்லாஹ்வின் அச்சத்தால் அழுபவன் கண்ணீர்

ஒருவன் அழுவதற்கு ஏழு காரணங்கள் இருக்கின்றன. அவை ஆனந்தம், பைத்தியம், வாதனை, பீதி, நடிப்பு, போதை, அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் ஆகியவை.

இவைகளுள் இறுதி அச்சத்தினால் வெளிப்படும் ஒரு துளிக் கண்ணீர் நரக நெருப்பைக் கூட அணைத்துவிடும்.

இந்தக் கண்ணீர் பற்றி இறை தூதர் கூறுவதாவது:

* அல்லாஹ்வின் அச்சத்தால் ஒருவன் அழுது அந்தக் கண்ணீர் அவனுடைய முகத்தில் விழுமாயின் அல்லாஹ் அந்த முகத்தை நரக நெருப்புத் தீண்ட விடமாட்டான்.

* அல்லாஹ்வின் அச்சத்தால் அழுபவன் நரகம் புகுவது கறந்த பால் மடியில் புகுவது போலாகும்.

தாம் செய்த குற்றங்களை நினைத்து அதற்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி அழுவது மானிடர் பாவங்களைத் தொலைக்கும் அருமருந்தாகுமென அண்ணல் நபி அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**ஆதாரம்: இஹாபா.**

எம்.சி. கலீல் – கல்முனை – 05.

## கவிதைப் போட்டி இல. 490

**பரிசுக்குரிய கவிதை**

### நம்பிக்கை

நம்பிக்கை
யுத்தம் இவர்களை
முத்தமிட்ட போது
அத்தனையும்
இழந்தார்கள்
நம்பிக்கை
ஒன்றைத்தவிர.

பெ. சுப்ரமணியம்,
மஸ்கெலியா.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### வீரத்தாய்

நொருங்கிய வாழ்வை நொந்து
சோர்ந்து படுக்கும் சோம்பேறியில்லை
சரிந்து போன வாழ்வை நிமிர்த்திவிட
பிறரை நாடும் பேடியில்லை
தீனிக்காக அலையும்
பிச்சைக்கார வேடதாரியுமில்லை
தன் கன்றுக்குட்டியைக் காளையாக
வளர்த்தெடுக்க
தீரத்துடன் போராடும் வீரத்தாய் இவள்.

கௌசிகா மகேந்திரன், உடுவில்.



### அ(வ)கதி வாழ்க்கை...

காணி உள்ளது-அதில்
கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ளது...!
வீடும் உள்ளது-ஆனால்
வசிக்கத் தடை போடப்பட்டுள்ளது...!
அதனால்..
"வானமே கூரை
வீதியே.. வீடு"-எம்
வாழ்க்கையோ... பெரும்பாடு...!

எஸ். தமிழாம்பிகை ஜெகன், நானாட்டான்.

### மானம் மேலானது

மானத்தை விற்று இந்த
மண்ணில் வாழ்வதைவிட,
மரக்கறி விற்றாவது
மானத்தோடு மடிவது மேலானது!

கோட்டைமுனை, ஆரிப்சராவுதீன்.

### வழியுண்டு வாழ

"புதுவாழ்வில் திளைக்கையிலே
பூனையும் நாயும் எங்கள் மடியில்.
புயலடித்து ஓய்ந்த பின்னே
அயலவரும் ஓடிவிட்டார்!
வயிறு வளர்த்திட காய்கனிகளுண்டு!
வாழ்ந்து காட்டிட காய்கறிகளுமுண்டு!"

நா. ஜெயபாலன், பிபிலை.

### கலங்காதிரு!

உடைந்த வளையலும்,
உதிர்ந்த மல்லிகையும்,
தொலைந்த வயதும்,
இனி தேடிப் பயனில்லை.
பசிகளின் சந்தையில்
இதயம் கூட
நிர்வாணமாகிப் போகிறது.
அதனால்...
துணிவு கொண்டு
துணிச்சலுடன் செயற்படு.

க. பரமேஷ்வரி, தலவாக்கலை.

### பொறுப்புக்கள்

கண்ணிவெடிகளை அகற்றி
கத்தரிக்காய்களை விதை
வெடிமருந்துகளை அழித்து
பசளையாக்கி புதை
ஒற்றுமையை வளர்த்து
வேற்றுமையை சிதை
போர்க்கொடி தூக்கும்
பொல்லாதோரை உதை.

தாரிக் அல்தாப்,
சீனன்கோட்டை.

### வித்தியாசம்

நீ! பொருட்களை குவித்து
கடைவிரித்திருக்கிறாய்
உள்நாட்டில்!
அரசாங்கமோ
கைகளை மட்டுமே ஏந்தி
கடைவிரித்திருக்கிறது
வெளிநாட்டில்!

முஹமட் மஜீஸ்,
மீராவோடை-04.

## கவிதைப் போட்டி இல. 493



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 11.01.2003

கவிதைப் போட்டி இல.493
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### எதற்காக?

கொளுத்துகின்ற வெயிலிலே
பழுத்துவிட்ட பழம் ஒன்று
அழுத்துகின்ற துயரங்களோடு
பிழைப்புக்காகவே இங்கு
உழைக்கின்றது-ஆம்! தன்
தழைகள் தளிர்ப்பதற்காக,
விளைவை இரசிப்பதற்காக.

ப. சைந்தவி, சாவகச்சேரி.

### ஏக்கம்

வெடிகுண்டு விளைந்த நிலங்களில்
விதைத்தெடுத்த பொருட்களை
வீதியோரம் விற்கின்றோம்,
இதுதான் எங்கள் ஜீவனோபாயம்,
'எப்போது ஆறும்' எங்கள்
மனதில் அடிபட்ட காயம்!

நா. நிரோஸ், அக்கரைப்பற்று-07.

### வாழ்க்கை

எம் வீடுகளில் இருந்து
நாம் விரட்டியடிக்கப்பட்டோம்..!
அழுகிய காய்கறிகளாக
வீதிகளில் வீசி எறியப்பட்டோம்...!
வயிற்றுப் பசி போக்க
காய் கறிகளாகவே
நாமும் வாழு(டு)கின்றோம்...!

எஸ். ஜெகதீஸ்வரன், நானாட்டான்.

### பிழைப்புக்காய்

நாடற்று
வீடற்று
நடுத் தெருவினிலே!
வாடி வதங்கி
வெயில் கொடுமையிலே-பேரனின்
வயிற்றுப் பிழைப்புக்காய்
வயோதிபத் தாயின்-அங்காடி
வியாபாரம்

ரா. தமிழ்வானன், இரத்தினபுரி.

## உங்கள் பக்கம்

### சிறிய சமாதானமா? பெரிய சமாதானமா?

"எல்லாம் வல்ல இறைவனிடமும், சகோதரரே உங்களிடமும் நான் பாவி என்று ஏற்றுக் கொள்ளுகிறேன். ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் சிந்தனையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன்."

நவம்பர் மாதம் இறுதிப் பகுதியில் யாழ் மற்றும் மன்னார் ஆயர்கள் நெடுந்தீவுச் சம்பவங்கள் தொடர்பாக வெளியிட்ட கூட்டு அறிக்கையை ஐரோப்பாவில் வெளியாகும் ஈழநாடு பத்திரிகையில் வாசித்த போது திருப்பலியில் தந்தையால் சொல்லப்படும் மேல் குறிப்பிட்ட வரிகள்தான் ஞாபகத்துக்கு வந்தன.

"முழு நாட்டின் நலனை மறந்து தனியொரு கட்சியின் நலனுக்காக மட்டும் செயற்படுவது சமாதானத் தேடலுக்கு முரண்பாடானது." என்றும் "கட்சிகள் தம் கட்சி அரசியலை முன்னெடுக்கப் பல்வேறு இடங்களில் முயற்சிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே. எனினும் மக்களுடைய உணர்வினைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் முக்கியமானது" என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு கிறிஸ்தவனாக அதை நான் வாசித்த போது கொதித்துப்போனேன். மிக மிகப் பொறுப்புள்ள மனிதர்களையும் கத்தோலிக்க மக்களாகிய எங்களால் கடவுளுக்கு அடுத்ததாக மரியாதை செலுத்தப்படுபவர்களாகிய இவர்கள் ஒரு நீதியற்ற அறிக்கையை எப்படி வெளியிட்டார்கள் என்று.

"ஒருவன் தவறு செய்யும்போது அதை அவனுக்குச் சுட்டிக் காட்டத் தவறுபவனும் பாவம் செய்கிறான்." என்று பைபிளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவறைச் சுட்டிக் காட்டத் திராணி இல்லாதபோது மௌனமாய் இருத்தலே மேல். அதை விடுத்து அந்தத் தவறுக்கு வக்காலத்து வாங்குதல் என்பது மக்கள் நலனைப் புதைப்பதற்கு வெட்டப்படும் குழிகளாகும்.

நெடுந்தீவிலும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் ஈ.பி.டி.பி.யினருக்கு எதிராக நடக்கும் போராட்டம் மக்கள் போராட்டமெனச் சித்தரிக்கப்படுவது சிறுபிள்ளைத்தனமானது என்று எல்லோருக்கும் தெரியும்.

85-86களில் ஆயுதங்களால் நிகழ்த்தப்பட்ட அழித்தொழிப்பு வேலை இப்போது சூழ்நிலை கருதி மக்கள் போராட்டம் என்ற போர்வையில் தொடர்கிறது.

சமாதானம் சுதந்திரம் என்பவை சிங்கள அரசிடமிருந்தோ அல்லது சிங்கள மக்களிட மிருந்தோ கிடைப்பது மட்டுமே என்று அவற்றுக்கு புதிய வரைவிலக்கணம் கொடுக்க எம்மில் பலர் முனைகின்றார்கள். சமாதானத்தில் பெரியது சிறியது என்று ஒன்று இருக்க முடியாது. எனினும் பெரிய சமாதானத்துக்காக சிறிய சமாதானத்தைக் கண்டு கொள்ளாமல் விடுவது என்பது ஒளியைப் பெறுவதற்காகக் கண்ணைக் கெடுத்துக்கொள்வதற்குச் சமன் என்பது எங்கள் தந்தையாருக்குத் தெரியாமலா போய்விட்டது!!!

தினமுரசு தவிர்ந்த வேறெந்தப் பத்திரிகைக்கும் நீதியின் குரலை வெளியிடும் துணிவு இல்லை. அதனாலேயே இதை உங்கள் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறேன். ஒருவேளை வியாபார நோக்கம் கருதி நீங்களும் இதை வெளியிடாது போகலாம்.

அ. மரியநேசன், பண்டத்தரிப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):–074-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


### அன்புடன் ஆசிரியருக்கு

பத்திரிகைத் துறையில் பல சாதனைகள் படைத்து இன்று பத்தாண்டுகள் நிறைவு செய்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எமக்குப் பல அறிவுகளை ஊட்டி, பல உண்மைகளை எமக்குரைத்து, நம்மை நல்வழிப் படுத்தியதையிட்டு நன்றியுடன் என்றென்றும் உனை அணைப்பேன். பல சவால்களை உங்கள் பத்திரிகை எதிர்கொண்ட போதும் மிகவும் சாதுரியமாகவும் விவேகமாகவும் அதை முறியடித்த விதமே எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகின்றது. ஆசிரியர் அவர்களே! எங்கள் பத்திரிகைக்கு எவ்வளவு தடைகள் வந்தாலும் நீங்கள் மிகவும் துணிவுடன் வெளியிடுங்கள். நாங்கள் பல இலட்சம் வாசகர்கள் அணைப்பதற்கு என்றென்றும் தயாராக இருக்கிறோம். என்றும் எம் அறிவுக்கு விருந்தாகத் திகழ வேண்டும் என்று கேட்டு வாழ்த்துகிறேன்.

முரசு வாசகன்,
கே.எஸ். குகன்,
குட்டியப்புலம், யாழ்.

## வாசக[ர்] சாலை

**தமிழ் முழங்கும் முரசுக்கு,**

ஒக். 27-நவ 02, 2002 வார மலரில் நீ வழங்கிய அனைத்தும் மிகவும் சூப்பர். நலலூர் நண்பி உமாதேவி குறிப்பிட்டது போல், குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று மிகவும் அவசியமானதாகும். இவ்வாரச் சிறப்புக் கவிதை 'மலர்களின் பெயரால்-ரஷ்மி', 'வாழ்வின் மீதான எளிய பாடல்கள்-மஜித்' இருவருக்கும் நன்றிகள். உனது அனைத்து ஆக்கமும் மிகவும் சூப்பரும் பிரமாதமாகவுள்ளது. உனது அடுத்த இதழை மிகவும் அவசரமாக எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

**அன்புள்ள வாசகன்,**
மா. ஈஸ்வரன், நெடுந்தீவ.

★★★

**இனிய முரசே**

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சுவையானவையே. அதிலும் 'பாப்பா முரசில்' வெளிவரும் 'வாரம் ஒரு டொப் டென்' என்ற அம்சம் எல்லோருக்கும் தேவைப்படுவதாகவும் முக்கியமானதாகவும் விளங்குகிறது. மற்றும் சிறுகதைகள், அரசியல் போன்ற அத்தனை அம்சங்களும் சுவையானதே. மேலும் இந்தப் புதிய வருடத்தில் புதுப் பொலிவுடன் வெளிவர என் வாழ்த்துக்கள்.

ந. திலகராணி, ஹாலி–எல, செரண்டிப்.



**சுவை தரும் முரசே**

தினமுரசின் முன் அட்டை வீட்டின் முன் வாசல், தினமுரசின் நடுப்பாகம் வீட்டின் உள் பகுதி, தினமுரசின் கடைசிப் பாகம் வீட்டின் பின் பக்கம், வீட்டில் நடைபெறும் அனைத்து (தினமுரசு) அம்சமும் எம்மை மெய் மறக்க வைக்கிறது.

தினமுரசு அனைத்து இன மக்களையும் மேம்பட வைக்கிறது. உன் வரவு தொடர வேண்டும். கடல் கடந்தவர்களின் மனதைத் திருடிவிடாய். உன்னிடம் மயங்காதவர் ஒரு சிலரே. வியாழன் வராவிட்டாலும் தினமுரசு வரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

**வாழ்க வளர்க வளமுடன்.**

றசூல், நிந்தவூர்.

★★★

**என்னுள்ளம் கவர்ந்த இனிய முரசே,**

நீண்ட நாட்களாக உனக்கு எழுத வேண்டுமென்ற ஆசை.

உன் சேவை தமிழ் நெஞ்சங்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் முத்தானவை. நடுநிலை நின்று உண்மைகளையும், தில்லு முல்லுகளையும் வெளிப்படுத்துவதில் முரசுக்கு நிகர் முரசே.

உன் சேவை மேன்மேலும் தொடர்ந்து வளர, 'பாப்பா முரசு' மேலும் புதிய அம்சங்களுடன் வெளிவர எனது நல்வாழ்த்துக்கள்.

பா. விக்னா, நுணாவில்.

# உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் யாழ் படைத்தளபதியின்

# யோசனைகளுக்குப் பிரதமர், அமைச்சர்கள் பாராட்டு

**யா**ழ் குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்திருக்கும் 10,000 வீடுகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் அதற்கு வெளியில் உள்ள 60,000 வீடுகளில் மக்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் உள்ள 60,000 வீடுகளில் இதுவரை எவரும் குடியமர்த்தப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் மேஜர் ஜெனரல் பொன்சேகா முதலில் இதையே செயற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 3 ஆயிரம் ஏக்கர் நிலம் விவசாய நடவடிக்கைகளுக்காக மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்திருக்கும் அவர் இதில் ஒரு அங்குல நிலத்தில் கூட எவ்வித பயனும் பெறப்படவில்லை எனக் கூறுகிறார்.

உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் விவசாய நிலங்களில் 5 சதவீதம் மாத்திரமே அடங்குவதாகத் தெரிவிக்கும் அவர் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடாது இந்த 5 சதவீத நிலத்தையும் கேட்பது பிரயோசனம் அற்ற செயல் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கடந்த 28ம் திகதி இரவு இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் உள்ளிட்ட உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் ஜனாதிபதி மாளிகையில் விசேட கூட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறார்கள். இதன் போது உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக யாழ் படைத் தளபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனையை ஜனாதிபதி அங்கிகரித்துப் பாராட்டி இருக்கிறார்.

இது விடயத்தில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் அது குறித்து உடனுக்குடன் தீர்வு காண ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்.

**உயர் பாதுகாப்பு வலயம் புலிகளின் வியூகம்**

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்களைக் குடியேற்றுவதன் மூலம் பாரிய படைத் தளங்களைச் சுற்றித் தங்களுக்கு வாய்ப்பான நிலைவரம் ஒன்றை உருவாக்குவதே புலிகளின் திட்டம் என இராணுவ உயர் மட்டம் கருதுகிறது.

இராணுவ முகாம்களுக்கு மிகச் சமீபமாகத் தமது உறுப்பினர்களைப் பொதுமக்கள் போல் குடியமர்த்துவதனூடாக முகாம்கள் குறித்துப் பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்வதும் படையினரை முகாம்களில் இருந்து வெளியேறுமாறு எதிர்காலத்தில் பொதுமக்கள் என்ற போர்வையில் அழுத்தங்களைப் பிரயோகிப்பதுமே புலிகளின் நோக்கம் என இராணுவம் சுட்டிக் காட்டியுள்ளது.

**பிரதமர் பாராட்டு**

இது இவ்வாறு இருக்க சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொள்ளுவதற்கு முன்னர் சரத் பொன்சேகாவை, கடந்த 26ம் திகதி சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களைக் குடியேற்றுவது தொடர்பாக அவர் தயாரித்த யோசனைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

அன்றைய தினமே அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சரத் பொன்சேகாவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். பாதுகாப்புப் படைகளின் பலத்தைச் சிதைக்கும் விதத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது என அமைச்சர் மிலிந்த மொறகொடவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் இவ்வறிக்கை தொடர்பில் இதே மாதிரியான கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

## ஜோன் வெஸ்பேர்க்குக்குப் பதிலாகப் புதிய தூதுவர்

**இ**லங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்குக்குப் பதிலாகப் புதிய தூதுவர் ஒருவர் நியமிக்கப்படலாம் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

தூதுவர் ஒருவரின் பதவிக் காலம் சுமார் நான்கு வருடங்கள் என்றபோதிலும் இலங்கையின் சமாதான முயற்சிகளைக் கருத்திற் கொண்டு ஜோன் வெஸ்பேர்க்கை 6 வருடம் கொழும்பில் பணியாற்றுவதற்கு ஒஸ்லோ அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. இப்போது அவரது இலங்கைக்கான தூதுவர் பணியை முடிவுக்குக் கொண்டுவர இருப்பதாகவும் அவருக்குப் பதிலாக எஸ்.ஹோர்ண்ஸ் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோன் வெஸ்பேர்க் தூதுவர் பணியிலிருந்து மாற்றப்பட்டாலும் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவாகச் செயற்படவிருக்கிறார்.

புலிகளுக்கு அதி நவீன ஒலிபரப்புக் கருவிகளைப் பெற்றுக் கொடுத்தது தொடர்பில் ஜோன் வெஸ்பேர்க் கடந்த வாரங்களில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த ஒலிபரப்புக் கருவி இறக்குமதி விவகாரம் குறித்து நோர்வே பிரதமருக்குக் கடிதமொன்றையும் அனுப்பியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## வடக்கு-கிழக்கின் பாதுகாப்பு நிலைவரம் ஆராய்வு

**வ**டக்கு-கிழக்கின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான விசேட அறிக்கை ஒன்று அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது அரசாங்கத் தரப்பினால் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

ஜனவரி முதலாம் திகதி வடக்கில் படை அதிகாரிகளை நேரில் சந்தித்த பின்னர் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி உள்ளிட்ட அதிகாரிகள் இந்த அறிக்கையைத் தயாரிக்க உள்ளனர்.

இவ்வறிக்கை எதிர்வரும் 6ம் திகதி ஒஸ்லோவில் ஆரம்பமாகவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிக்கப்படும்.

## கிளிவெட்டியில் புத்தர் சிலை தகர்ப்பு

**மூ**தூர் மட்டக்களப்பு வீதியிலுள்ள கிளிவெட்டி என்ற இடத்தில் இருந்த புத்தர் சிலை ஒன்று உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது தொடர்பாக விசாரணை செய்யுமாறு வடக்குக் கிழக்குப் பிரதேச பிரதான சங்கநாயக்கர் சேருவில சரணகிந்தி தேரர் சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தப் புத்தர் சிலை கடந்த வாரம் விசமிகள் சிலரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது. இது சமாதானத்தை விரும்பாதவர்கள், இன நல்லுறவைச் சிதைப்பதற்குச் செய்த சதிவேலையாக இருக்கலாமெனக் கூறியிருக்கும் தேரர் இது விசயத்தில் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்.

சரணகிந்தி தேரர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினராகவும் செயற்படுவர்.

## சமாதான முயற்சிகள் குறித்து ஆராய சர்வகட்சி மாநாடு நடத்த ஜனாதிபதி திட்டம்

**அ**ரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்துச் சகல அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சர்வகட்சி மகாநாடொன்றைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தயாராகி வருவதாக அறியக் கிடைக்கிறது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக ஜனாதிபதி தனது அரசியல், அரசியலமைப்பு அலோசகர்களுடன் ஆராய்ந்திருப்பதாகவும் முன்னைய காலங்களில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகள் தொடர்பான ஆவணங்கள், அறிக்கைகள் என்பவற்றை உடனடியாக வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய காலங்களில் இனப் பிரச்சனைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜேயவர்த்தனாவும் ஜனாதிபதி பிரேமதாசாவும் சர்வகட்சி மாநாடுகளை நடத்தியிருக்கிறார்கள். இந்த இரண்டு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத் தக்கது.

நாட்டின் பாரதூரமான தேசியப் பிரச்சனையாக இனப் பிரச்சனை கருதப்படுவதால் அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் போது சகல கட்சிகளினதும் சமூகங்களினதும் அபிப்பிராயமும் ஆலோசனையும் பெறப்பட வேண்டும் என்ற கருத்தை ஜனாதிபதி குமாரதுங்க கொண்டிருக்கிறார்.

## கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

**வ**டக்கின் உயர் பாதுகாப்பு வலயம் குறித்த விவகாரத்தில் சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசுக்குச் சார்பாகச் செயற்படுகிறது எனப் புலிகள் குற்றஞ்சாட்டியபோதும் தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனக் கண்காணிப்புக் குழுவின் உபதலைவர் ஹக்ரவ் ஹவுக்லன்ட் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது வடக்கின் இராணுவச் சமநிலையைக் குலைக்கும் என்பதால் இது குறித்துத் தற்போது கோரிக்கை விடுப்பது சமாதான முயற்சிகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடந்த வாரம் அறிவித்திருந்தது. இதற்குப் பதிலளித்திருக்கும் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கண்காணிப்புக் குழுவைக் கடுமையாகச் சாடியிருந்ததுடன் இராணுவத்தின் மேலாதிக்கத்துக்குத் துணை போவதாகவும் விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே குழுவின் உபதலைவர், புலிகள் விமர்சித்த போதும் தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனக் கூறியிருக்கிறார்.

இதேவேளை கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரோரன் புர்ஹௌடே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடனான சந்திப்பொன்றை அடுத்து அவசர விஜயம் மேற்கொண்டு நோர்வே சென்றிருக்கிறார்.

## கிழக்கின் 11 எம்.பி.களின் ஆதரவு எந்நேரத்திலும் உண்டு என்கிறார் சரத் அமுனுகம

**எ**ந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 11 எம்.பி.கள் பொ.ஐ.மு.வுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கும் அக் கட்சியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம, தங்களுக்கு 110 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகக் காண்பித்தால் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தனது கட்சியின் 3 பேரது ஆதரவையும் வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கலாநிதி சரத் அமுனுகம கண்டி கலகெதர என்ற இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அரசாங்கத் தரப்பிலிருந்து 20 எம்.பி.களைத் தம் பக்கம் இழுக்கப் பொ.ஐ.மு. பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இந்தக் கூட்டத்தின் போது அவர் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பலதும் தோல்வி கண்டிருப்பதாகத் தெரிவித்ததுடன் பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதாகவும் விமர்சித்தார்.

## கல்வி அமைச்சரின் குடாநாட்டு விஜயம் இரத்து

**யா**ழ் குடாநாட்டின் கோப்பாய், வேம்படி ஆகிய பகுதிகளில் கடந்த 27ம் திகதி நடத்தப்பட்ட ஹர்த்தால் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து, கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு குடாநாட்டிற்கான தனது விஜயத்தை இரத்துச் செய்தார்.

அமைச்சர் கொடித்துவக்கு 28ம் திகதி யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்தார். பாடசாலைகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டுமெனக் கோரி ஹர்த்தால் நடத்தப்பட்டதை அடுத்து அவர் தனது விஜயத்தை இரத்துச் செய்தார்.

## கூட்டுக் கண்காணிப்புக்கு இந்தியா-இலங்கை இணக்கம்

**பு**லிகள் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களைக் கப்பல் மூலம் தருவிப்பதைத் தவிர்க்கும் நோக்குடன் பாக்கு நீரிணையில் கூட்டுக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இலங்கை இந்திய கடற்படையினர் உடன்பாடு கண்டுள்ளனர்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு புதுடில்லி சென்ற கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திரா சிங்குடன் விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

# முரசம்

## ஜனநாயக மறுப்பு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யுத்தமில்லாத தற்போதைய சூழ்நிலையில், போக்குவரத்து நெருக்கடிகள் தளர்த்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் நிலையில் காணாமற் போதல் படுகொலைகள், யுத்தத்திற்கு ஆட்திரட்டல் போன்ற செயற்பாடுகள் அவ்வப்போது நிகழவே செய்கின்றன.

இதற்கு வெல்லாவெளிப் பிரதேச சபையின் தவிசாளர் பூபாலபிள்ளை அழகுதுரையின் படுகொலை அண்மைக்கால பிரசித்தி பெற்ற உதாரணமாகும்

மனித உரிமை, ஜனநாயகம் என்பனவும் தமிழ் மக்களின் அபிலாசைகளும் வெவ்வேறு விடயங்கள், ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத விடயங்கள் என்றொரு சித்தரிப்புக் காணப்படுகிறது.

இந்த நாட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட தேசிய சமூகங்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்குத் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமை உண்டு. சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மையை இலங்கையின் சகல சமூகங்களின் மீதும் திணிக்க முற்பட்டதன் விளைவே இந்த நாட்டில் வெடித்தெழுந்த தேசிய இனமுரண்பாட்டுச் சிக்கலின் அடிப்படையாகும். இந்த முரண்பாட்டில் ஒடுக்கப்பட்ட தேசியங்களின் கோரிக்கை-சுதந்திரம்-சமத்துவம்- சகோதரத்துவம் என்பவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஆனால் இந்த ஒடுக்குமுறைகளுக்கெதிராகப் போராடிய தமிழ்ச் சமூகத்தில் உருவாகிய குறிப்பிட்ட ஒரு இராணுவ அரசியல் சக்தி, சமூகத்தின் சகல நிறுவனங்கள் மீதும் தனது மேலாண்மையை நிலைநாட்ட முனைந்தது. அதன் விளைவு சகோதரப்படுகொலையாக, சமூகத்தின் வெவ்வேறு தனிமனிதர்களினதும் குழுக்களினதும், தேடல்கள், சமூக முயற்சிகளுக்கெதிரான அடக்குமுறைகளாக உருவெடுத்தன. தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் மரணித்த தமிழர்களின் தொகைக்கு நிகரான தொகையினர் ஜனநாயக மறுப்பாலும் அடிப்படை மனித உரிமைகள் உதாசீனப்படுத்தப்பட்டதாலும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகள்- மனித உரிமை மீறல்கள் என்பவற்றின் ஊடாகவே ஏகப் பிரதிநிதித்துவம் என்ற கருத்துரு மேலெழுந்து வந்தது.

இதன் பாரதூரத் தன்மை என்னவென்றால் இந்தக் கருத்துருவுடன் இணைந்து வாழ்வதன் மூலம்தான் மற்றவர்கள் தம் உயிரைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்பதே.

ஜனநாயகம், மனித உரிமை என்பன ஏகபிரதிநிதித்துவத்தை அங்கீகரிப்பதில்தான் தங்கியிருக்கின்றனவே தவிர வேறுபடுவதில் அல்ல.

எனவே இங்கு ஜனநாயகம் என்பது குறிப்பிட்ட ஒரு குழுவின் சர்வாதிகாரத்தையே சுட்டி நிற்கிறது. எனவே குறிப்பிட்ட அதிகார மையத்தில் கட்டுப்படாத, சுயாதீனமான, பன்முகத் தன்மையுடைய ஜனநாயகமே இங்கு தேவைப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் வேறுபட்ட சமூகங்களின்-பல்வேறு கட்சிகளின்-ஏனைய சமூக நிறுவனங்களின் இருப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் மாத்திரமே நிரந்தர சமாதானத்தையும், உரிமைகளையும் வென்றெடுக்க முடியும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# பேசப் பட்டதும் படாததும்

யாழ் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சரத் பொன்சேகாவும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் ஒரே விதமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்களா? இவ்வாரம் சீற்றங்களுக்கும், கடும் வார்த்தையாடல்களுக்கும், மனத்தாங்கல்களுக்கும் வழிவகுத்துள்ளது, இந்த அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை.

முகமாலையில் நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க அரச சார்பில் இராணுவத்தின் பிரதிநிதியான யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேறுவது, பொது இடங்களிலிருந்து இராணுவம் வெளியேறுவது தொடர்பாகச் சில நிபந்தனைகளையும் கருத்துக்களையும் புலிகளுக்குத் தெரிவித்திருந்தார்.

- அவ்வாறு மக்கள் மீளக் குடியேற்றப்படுவதானால் புலிகள் தமது ஏவுகணை நிலைகளை அப்புறப்படுத்த வேண்டும்.
- ஆயுதங்களைக் கைவிட வேண்டும்
- அவ்வாறு மக்கள் குடியேற்றப்பட்டாலும் அந்த இடங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பொலிசாருக்கு உரிமையுண்டு.

இந்த நிபந்தனைகள் தொடர்பாகப் புலிகளின் தரப்பில் உடனடியாகக் கருத்துத் தெரிவித்த சு.ப.தமிழ்செல்வன், மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதே யுத்த நிறுத்தத்தின் முக்கிய அம்சமாகும். அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேற்றப்படும் விடயம் நிறைவேற்றப்படாவிட்டால் யுத்த நிறுத்தத்தின் நோக்கம் பூர்த்தி செய்யப்படாது எனத் தெரிவித்திருந்தார். அதாவது அதியுயர் பாதுகாப்பு வலயம் மக்களின் இயல்பு வாழ்க்கையுடன் தொடர்புபட்டது.

இது தொடர்பாகப் புலிகள் வெளியிட்ட தமது உத்தியோகபூர்வ அறிக்கையில், சரத் பொன் சேகாவின் நிபந்தனைகளுக்கு இணங்க முடியாது. இது சமாதானச் செயற்பாட்டைக் குழப்புவதாக உள்ளது. பாதுகாப்புத் தொடர்பான உபகுழு, மனிதாபிமானப் பணிகள் தொடர்பான உபகுழு இரண்டினதும் பணிகளை அர்த்தமிழக்கச் செய்துவிட்டது. அடுத்த கட்டத் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் இந்த விவகாரம் முதன்மைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார். பாலசிங்கமும் ஏறத்தாழ இதே விதமான கருத்தைத் தெரிவித்திருந்தாலும் புலிகள் சற்றும் எதிர்பார்க்காத ஒரு தரப்பிடமிருந்து வந்த கருத்திற்குப் பதிலளிக்க வேண்டியிருந்தது. அதுதான் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரின் ஒரு வருட செயற்பாட்டின் மதிப்பீட்டு அறிக்கை.

அதில் உயர் பாதுகாப்பு வலயம் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில், இரண்டு தரப்பினரதும் படைபல சமநிலையின் மீதே தற்போதைய யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பித்தன. உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு கோருவது அரச படைகளின் நிலையைப் பலவீனப்படுத்திவிடும், எனவே உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் குடியேற்றப்படுவதையும் கவனமாக மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை "பொருத்தமற்ற நேரத்தில் விடுத்த பொருத்தமற்ற கோரிக்கை" என அவர் நிராகரித்திருந்தார். இவை தவிர யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையில் சிறுவர்களை யுத்தத்திற்காக அணி திரட்டுவது, ஆட்கடத்தல், கட்டாய வரி வசூல் போன்ற விடயங்களும் இடம்பெற்றிருந்தன.

ஆனால், புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது இராணுவ சமநிலையைப் பாதிக்கும் என்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கருத்துக்குத் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார். இது ஒரு இராணுவ மயப்பட்ட கண்ணோட்டம் என்று தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே சரத் பொன்சேகா, தாங்கள் தெரிவித்திருப்பது நிபந்தனைகளல்ல, ஆலோசனைகளே என்றும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் போது இராணுவத்தின் பலம் குறையும். அதற்கேற்ப புலிகளின் தரப்பிலும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதனையே குறிப்பிட்டதாகவும் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இங்கு அழுத்தியுரைக்க வேண்டியது சரத் பொன்சேகாவினால் வெளியிடப்பட்ட அறிக்கை, கருத்துக்கள் அரசின் கருத்துக்களே தவிர, தனிப்பட்ட இராணுவ அதிகாரியின் கருத்துக்களாக அல்ல. சில ஊடகங்கள் தனிப்பட்ட கருத்தாகச் சித்திரிக்க முற்படுகின்றன.

இரண்டு தரப்பிலுமுள்ள தரும நியாயங்களை அனுகுவோமானால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ள கருத்துக்களை நாம் அவதானமாக ஆராய வேண்டும்.

இரு தரப்பினரது இராணுவ சமநிலையிலேயே சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

பல தசாப்தங்களாகத் தமது சொந்த இடங்களை விட்டு புலம் பெயர்க்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் குடியேறுவது கேள்விக்கிடமற்றது.

ஆனால் மொத்தமாகப் பிரச்சினைகளை எடுத்தாராயும்போது பல விதமான புலம் பெயர்வுகள் நடைபெற்றுள்ளன. பிரதானமாக இரண்டு வகையினுள் அவற்றை அடக்கலாம்.

1. சிறிலங்கா அரச படைகளின் அழுத்தங்களால் நிகழ்ந்தவை.
2. புலிகளின் அழுத்தங்களால் நிகழ்ந்தவை.

இந்த இரண்டு தரப்பாரும் குறிப்பிடத்தகுந்த அளவு மக்களின் புலப் பெயர்வை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது மறுப்பதற்கில்லை.

சக இயக்கங்கள், தமிழ்க் கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், மாற்றுக் கருத்துடையோர், கவிஞர்கள், கல்விமான்கள், சாதாரண பொது மக்கள் எனப் பல்வேறு தரப்பினரதும் இருப்பின் மீது புலிகள் மேற்கொண்ட பாரிய அச்சுறுத்தல், கொலைப் பயங்கரம் என்பனவும் பல இலட்சக் கணக்கானோரின் இடம்பெயர்வுக்கு வழி வகுத்தது. அவர்களும் தமது தாயகத்திற்குத் திரும்ப வேண்டும். அவர்கள் இந்தியாவிலும், ஐரோப்பிய, வடஅமெரிக்க நாடுகளிலும், இலங்கையின் தென்பகுதியிலும், வடக்கு-கிழக்கில் தமக்குப் பாதுகாப்பான பிரதேசங்கள் எனக் கருதப்படும் இடங்களிலும் தமது தாயகப் பிரதேசத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற கனாவுடன் வாழ்கிறார்கள்.

> **சரத் பொன்சேகாவினால் வெளியிடப்பட்ட அறிக்கை, கருத்துக்கள் அரசின் கருத்துக்களே தவிர, தனிப்பட்ட இராணுவ அதிகாரியின் கருத்துக்கள் அல்ல. சில ஊடகங்கள் அவ்வாறு சித்திரிக்க முற்படுகின்றன.**

துரதிர்ஷ்டம் என்னவென்றால் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இந்த இராணுவச் சமநிலையிலேயே ஜனநாயகமும் மனித உரிமைகளும் ஊசலாடிக்கொண்டிருக்கின்றன.

இந்தச் சமநிலை குழம்பி ஒரு கை ஓங்கினால் வடக்கு-கிழக்கு மீது ஒரு இரும்புத் திரை விழுந்துவிடலாம்.

இதில் இரு தரப்பினரதும் இராணுவ மேலாண்மை சம காலத்தில் படிப்படியாக அற்றுப் போகும் நிலையிலேயே, உதிர்ந்துலரும் நிலையிலேயே தமிழ் மக்களின் அபிலாசைகள் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகளை உள்ளடக்கியதாக பாதுகாப்பான சூழ்நிலை உருவாகும்.

இல்லாமல் புலிகளிடம் முழுத் தமிழ் சமூகத்தினதும் தலைவிதியை ஒப்படைப்பது சமூகத்தின் ஜனநாயக உரிமைகளை அப்பட்டமாக மீறும் நடவடிக்கையாகும். அது ஜனநாயகம், மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.வினதும் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களினதும் விதிகளை மீறும் நடவடிக்கையாகும்.

குறிப்பிட்ட ஒரு தரப்பின் கீழ் வாழ விரும்புகிறீர்களா? என்றொரு கருத்துக் கணிப்பு வடக்கு-கிழக்கில் நடத்தப்பட்டால் அதில் மோசமான பெறுபேறுகளே கிட்டும்.

யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு இயல்பு சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்திலேயே யுத்தத்திற்காக வகை தொகையின்றிச் சிறுவர்களை இணைப்பது, கடத்துவது, மாற்று அரசியல் கட்சியினரைக் கடத்துவது, குரூரமாகப் படுகொலை செய்வது, கட்டாய வரி வசூல், மக்களின் சமூகச் சொத்துக்கள், தனிப்பட்ட சொத்துக்கள் உபயோகப் பொருட்கள் மீது வரி என்ற பேரில் உரிமை கொண்டாடுவது, தனி மனித அந்தரங்கங்களைச் சோதனையிடுவது போன்ற அடிப்படை ஜனநாயக, மனித உரிமை மீறல் செயற்பாடுகள் வடக்கு-கிழக்கில் நடைபெறுகின்றன.

குறிப்பிட்ட அரசியற் கட்சி ஒன்றை வடக்கு-கிழக்கில் இருந்து வெளியேற்றுவதற்காக மக்களின் பேரில் நடைபெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஆர்பாட்டங்களும் மக்கள் ஒரு கட்சியை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது தொடர்பான ஜனநாயக நெறிமுறைகளுக்கு விரோதமானது

ஏறத்தாழ 30 சதவீதமான வாக்குகள் வடக்கு-கிழக்கில் மாற்றுத் தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்துள்ளன. தவிர முஸ்லிம்களின் தனித்துவம், சிங்கள மக்களின் பிரதிநிதித்துவம் என்பனவும் வடக்கு-கிழக்கில் இருக்கின்றன என்பதனை மறந்துவிடக் கூடாது.

தற்செயலாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்துச் செயற்பட எண்ணினால், அதிலுள்ள கட்சிகள் தனித்தனியாகச் செயற்பட எண்ணினால் ஏகப்பிரதிநிதித்துவம் என்ற கருத்து எதுவித அர்த்தமுமற்றுப் போகலாம்.

எனவே தற்போது ஊசலாடிக்கொண்டிருக்கும் ஜனநாயக இடைவெளி உறுதிப்படுத்தப்படுவதாக இருந்தால் தற்போதைய சமநிலை தற்காலிகமாகவாவது பாதுகாக்கப்பட வேண்டும். "கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டும்" என்பது தமிழ் சமூகத்தில் தலைமுறை தலைமுறையாக நிலவிவரும் பழமொழி.

எனவே, பாலசிங்கம் கூறுவது போல் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கருத்து வெறுமனே இராணுவ நோக்குநிலையிலானது அல்ல என்பதனையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதற்கு ஒரு சிறந்த உதாரணத்தைக் கூற முடியும். 1995 ல் யாழ் குடாநாட்டில் சகல மக்களையும் புலிகள் வன்னிக்குச் செல்லுமாறு கட்டளையிட்டபோது அவர்கள் தென்மராட்சியுடன் நின்றுவிட்டதையும், பின்பு புலிகளின் விருப்பத்தையும் மீறி இராணுவமயமாகிவிட்ட வலிகாமத்தினுள் பிரவேசித்ததையும் ஞாபகப் படுத்திக்கொள்ளலாம்.

ஆனால், நீண்ட காலத்தில் எந்தவித ஆயுத அச்சுறுத்தலும் அற்ற, மேலாண்மையற்ற, சுதந்திரமான சமூக பொருளாதார வாழ்வு தமிழ் மக்களுக்குக் கிட்ட வேண்டும்.

"யாமார்க்கும் குடியல்லோம்" என்ற நிலை சமூகத்திற்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். □

# போராட்டக்குணத்தை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் 'போராளிகள்'!

மறைந்த அஷ்ரஃப் காலம் தொடக்கமே முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களைப் போராளிகள் என்ற பதத்தில்தான் அழைப்பார்கள். அந்தக் கட்சியினால் வெளியிடப்படும் அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் அனைத்திலும் கட்சிப் போராளிகள் என்ற பதமே பயன்படுத்தப்பட்டிருக்கும்.

பெரிதாகத் தமது போராட்டக் குணத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் முன்னைய காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளுக்குக் கிடைத்திராத போதும் இப்போது ஆண்டவன் புண்ணியத்தில் உடைந்த கட்சியின் இரண்டு தலைவர்களும் அந்தச் சந்தர்ப்பத்தைத் தமது உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

முஸ்லிம் காங்கிரஸின் பல்வேறு குழுக்களுக்கிடையில் ஆரம்பம் முதலே சிறு சிறு மோதல்கள், மனக்கசப்புக்கள் இருந்து வந்தாலும் அவை குறிப்பிடத்தக்க அளவு வன்முறைச் சம்பவங்களாக உருவெடுத்த சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவு.

தேர்தல் காலங்களில் ஒரு அபேட்சகரின் ஆதரவாளர்கள் அதே தொகுதியில் இன்னொரு அபேட்சகரின் ஆதரவாளர்களுடன் மோதிக் கொண்டது போன்ற சந்தர்ப்பங்கள் தவிர, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே அடிதடி சண்டையில் ஈடுபட்டு மருத்துவமனை, பொலிஸ் என்று அலைந்த சந்தர்ப்பங்கள் எப்போதாவது ஒன்றிரண்டைத் தவிர வேறு இல்லை எனலாம்.

இப்போது கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு பிரிவினருக்கும் இடையில் நேரடிச் சண்டைகள் நடக்கும் அளவு குரோதம் முற்றியிருக்கிறது. ஒரு குழுவுக்கு அதிகளவு ஆதரவுள்ள இடத்திற்கு மற்றப் பிரிவினரைச் செல்லவிடாமல் தடுத்தல், பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதித்தல் போன்ற அநாகரிகமான ஜனநாயக மறுப்புக்கள் அரங்கேறத் தொடங்கியுள்ளன. ஒற்றுமை, சகிப்புத் தன்மை என்பவற்றுக்கெல்லாம் முன்னுதாரணமாகப் பேசப்பட்ட முஸ்லிம் காங்கிரஸும் அதன் போராளிகளும் தங்களது சுயரூபத்தை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

கடந்த வாரம் அட்டாளைச்சேனைப் பகுதியில் ரவூப் ஹக்கீம் கலந்துகொள்ள இருந்த கூட்டம் ஒன்றை நடத்தவிடாமல் தடுக்க, அதாவுல்லாவுக்கு ஆதரவானவர்கள் பெரும் முயற்சி எடுத்தார்கள். கூட்டத்தை நடத்திச் சாதித்தே தீருவதென ஹக்கீம் தரப்பினரும் விடாப்பிடியாக இருந்தனர். விளைவு, இரண்டு பிரிவினருக்கும் இடையில் கைகலப்பில் முடிந்தது. மூன்று அல்லது நான்கு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவுக்குச் சண்டையாக இது உருமாறியது.

அரசியல் வன்முறை என்ற நோக்கில் இது மிகவும் சிறியதோர் சம்பவம்தான். இந்நாட்டு அரசியல் கலாசாரத்தைப் பொறுத்தவரையில் மூன்று பேர் காயப்படுவது கணக்கில் எடுக்க முடியாத ஒரு நிகழ்வு. ஆனால் இங்கு விடயம் அதுவல்ல. முஸ்லிம் காங்கிரஸ் என்ற பலமானதும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் தவிர்க்க முடியாத அங்கமுமாகிய அரசியல் கட்சி எந்தளவு தூரம் சின்னாபின்னப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அவதானிக்க வேண்டும்.

அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற இச் சிறிய சம்பவம் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் எதிர்காலத்தில் எதிரொலிக்கும் என்பதை நம்பலாம். உன்னுடைய தொகுதிக்கு என்னை வரக்கூடாது என்று சொல்வாயானால் எனக்கு ஆதரவிருக்கும் இடத்திற்கு நீயும் வரக்கூடாது என்ற சாதாரண சிந்தனை இரண்டு பிரிவினர் மத்தியிலும் தலையெடுக்கும். இது அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் மாத்திரமன்றி அரசியலுக்கு அப்பால் ஒற்றுமையாக வாழும் அடுத்தடுத்த ஊர் மக்களைக் கூட பகைவர்களாக மாற்றும் வல்லமை கொண்ட நிகழ்வு.

முஸ்லிம் காங்கிரஸ் இன்று காரணத்துடனோ காரணமின்றியோ இரண்டாக, சில நேரம் மூன்று பிரிவாகப் பிரிந்து கிடக்கிறது. பிரிந்தவர்கள் தர்க்கித்துக் கொள்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு ஆதரவிருக்கும் இடங்களில் உள்ளவர்கள் மாற்றுத் தரப்பினரைப் பகைமையுடன் பார்க்கும் போக்கை ஒருபோதும் பின்பற்றக் கூடாது. இத்தகைய பகை

> **அரசியல் வன்முறை என்ற நோக்கில் இது மிகவும் சிறியதோர் சம்பவம்தான். இந்நாட்டு அரசியல் கலாசாரத்தைப் பொறுத்த வரையில் மூன்று பேர் காயப்படுவது கணக்கில் எடுக்க முடியாத ஒரு நிகழ்வு. ஆனால் இங்கு விசயம் அதுவல்ல. முஸ்லிம் காங்கிரஸ் என்ற பலமானதும் ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் தவிர்க்க முடியாத அங்கமுமாகிய அரசியல் கட்சி எந்தளவு தூரம் சின்னாபின்னப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அவதானிக்க வேண்டும்.**

உணர்வைக் கூடுமானவரை வளர்த்துவிடுவதில்தான் அரசியல்வாதிகள் தங்கள் இருப்பை உறுதி செய்து கொள்ளலாம் என்ற நிலையில் இரண்டு தரப்பினரும் தமது பண பலத்தின் மூலம் காடையர்களை விலைக்கு வாங்கி பரஸ்பரம், பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்ட பின்னர் தீய சக்திகள் செய்துவிட்டதாகக் கூறி மர்மமான அல்லது அடையாளம் காண முடியாத யார் மேலேனும் பழியைப் போட்டுச் சமூகத்துக்குள் பிளவைத் தோற்றுவிக்க எடுக்கப்படும் முயற்சிகளைத் தவிர்க்க, அரசியல்வாதிகளின் கபட நோக்கங்களை மக்கள் சரிவரப் புரிந்துகொள்வதால் மாத்திரமே முடியும்.

## சமாதானத்தை நோக்கித் திரும்பும் அஸ்திரம்

முஸ்லிம் காங்கிரஸுக்குள் பகைமையுடன் செயற்படும் இரண்டு பிரிவினரும் தமது அஸ்திரங்களைச் சமாதான முயற்சியை நோக்கித் திருப்பியிருக்கிறார்கள்.

கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இதற்கு முன்னர் பயன்படுத்தாத தொனியில் ரவூப் ஹக்கீம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் புலிகள் தொடர்பான சில விடயங்கள் காரசாரமாக விமர்சிக்கப்பட்டிருந்தன. அரசியல் நடவடிக்கைகள் என்ற போர்வையில் புலிகளால் மேற்கொள்ளப்படும் சில செயற்பாடுகளால் முஸ்லிம்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்துப் பிரஸ்தாபித்திருக்கும் ஹக்கீம். அரசியல் நடவடிக்கை என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கேட்டிருக்கிறார்.

கிழக்கில் ஆட்கடத்தல், வரி அறவீடு என முஸ்லிம்களுக்குப் புலிகளால் ஏராளமான நெருக்கடிகள் ஏற்பட்ட போதெல்லாம் மிகவும் மென்மையாக அதைக் கையாண்டது மட்டுமன்றி நெகிழ்வுத் தன்மை குறித்து மற்றோருக்கும் போதித்து வந்த அமைச்சர் ஹக்கீம் திடீரெனத் தனது வேகத்தை அலரிமாளிகை மீது பிரயோகித்திருக்கிறார். இந்த நிர்ப்பந்தம் அவருக்கு எதனால் ஏற்பட்டதென்பதைப் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை.

அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது கிழக்கின் அரசியல் நிலைவரங்கள் புலிகளால் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் விரும்பத் தகாத நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டும் என்று ஹக்கீம் சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

மறுபுறம் அதாவுல்லா குழுவினரின் கவனமும் சமாதானத் திசையை நோக்கித் திரும்பியிருக்கிறது. முஸ்லிம்களின் பிரதிநிதிகளாகத் தங்கள் தரப்பில் இருந்தும் ஒரு குழுவைச் சமாதானப் பேச்சுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று அதாவுல்லா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கேட்டிருக்கிறார்.

ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தின் பிரதிநிதியாக சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்திருக்கும் அதாவுல்லா அவர் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாது எனக் கூறியுள்ளார்.

பொதுக் கூட்டம் ஒன்றிலும் அதாவுல்லா இதே மாதிரியான கருத்தை வெளியிட்டிருந்தார்.

ரவூப் ஹக்கீம் தரப்புக்கு எந்த விதத்திலும் குறைவான குழுவாகத் தங்களைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்பதில் அதாவுல்லா தரப்பினர் கவனம் செலுத்துகிறார்கள்.

முதலில் ஹக்கீமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அது நடக்காத நிலையில் ரவூப் ஹக்கீம் வகிக்கும் அமைச்சுப் பொறுப்புக்களுக்குச் சமமாக கெபினட் அந்தஸ்துள்ள அமைச்சுப் பொறுப்பொன்றைத் தங்கள் குழுவில் உள்ள ஒருவருக்குத் தர வேண்டும் என்று அதாவுல்லா கோரியிருந்தார்.

அதுவும் நடக்கவில்லை. ஹக்கீம் வசம் அடுத்துள்ள கனதியான விடயம் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பில் அவர் பங்கேற்று வருவது. இப்போது அதையேனும் அடைந்துவிட வேண்டும். அன்றேல் ஹக்கீமுக்குக் கிடைத்திருக்கும் அந்த அங்கீகாரத்தையாவது பறிக்க வேண்டும் என்ற முயற்சியில் தீவிரம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையிலும் அமைச்சர் ஹக்கீம் கலந்துகொள்வார் என்று அரசாங்கத்தின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கடந்த வாரம் செய்தியாளர் மாநாடொன்றில் கூறியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்களில் தங்களில் ஒருவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று அதாவுல்லா தரப்பினர் கோருவதில் என்ன தவறு இருக்கிறது என அவர்களுக்கு ஆதரவான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பி.க்கள் பெரும்பாலும் அதாவுல்லா குழுவுடனே இருக்கும் நிலையில் அவர்களில் இருந்தும் முஸ்லிம்கள் சார்பில் ஒருவரைச் சமாதானப் பேச்சுக்களுக்கு அழைத்துச் செல்லலாம்தானே என்பது இந்த உறுப்பினர்களின் வாதமாக இருக்கிறது.

அதாவுல்லா குழுவினர் சமாதான முயற்சி தொடர்பில் ஹக்கீம் மீது சுமத்தும் பிரதான குற்றச்சாட்டு, அவர் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சார்பாக உறுதியான நிலைப்பாட்டுடன் எதையும் பேசுகிறார் இல்லை என்பதுதான்.

ஏற்கெனவே ரவூப் ஹக்கீமால் முன்வைக்கப்பட்டு, சமாதானப் பேச்சுக்களில் உடன்பாடு காணப்பட்ட அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய விசயங்களை அமுல் செய்வதிலேயே ஏராளமான தடங்கல்களும் மீறல்களும் இடம்பெற்று வரும் நிலையில் இதற்கு மேல் எதைக் கேட்டு என்ன பிரயோசனம் என்று சிந்திப்பவர்களும் இல்லாமல் இல்லை.

முஸ்லிம்களிடமிருந்து வரி அறவிடுவது, அவர்களது விவசாய நிலங்களில் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதிப்பது போன்ற ஜீவனோபாயப் பிரச்சினைகள் குறித்துப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடக்கம் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன், கருணா அதற்குக் கீழுள்ள தலைவர்கள் என்று பலருடனும் ஹக்கீம் பலமுறை பேசியாகிவிட்டது. அவை முழுமையாக நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தச் சந்தர்ப்பமே அதாவுல்லா குழுவினருக்குக் கிழக்கில் புலிகளை மையமாக வைத்து ரவூப் ஹக்கீமுக்கு எதிராகப் பிரசாரம் செய்யும் வாய்ப்பை அளித்திருக்கிறது. இத்தகைய பின்னணியில் சமாதானப் பேச்சுக்களுக்கு அதாவுல்லா குழுவினரை அழைத்துச் சென்றால் அவர்கள், ஹக்கீமால் சாதிக்க முடியாதவற்றை அல்லது ஹக்கீம் சொல்லி புலிகள் இதுவரை செயலில் காட்டாத விடயங்களைச் செயற்படுத்த வைக்கவேண்டும். அவ்வாறு செய்ய முடியுமாயின் ரவூப் ஹக்கீம் சமாதானப் பேச்சுக்களுக்குச் சென்றதைவிட அதாவுல்லா குழுவினர் சென்றதில் பயனிருப்பதாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் உணர்வார்கள். ஆனால் இதற்கான அழுத்தத்தைப் புலிகளுக்கு எவ்வாறு அதாவுல்லா குழுவினர் பிரயோகிக்கப்போகிறார்கள் என்பதே பிரதானமான கேள்வி.

பாராளுமன்ற அரசியலில் தங்களுக்குள்ள பலத்தைக் காண்பித்து, அரசாங்கத்தின் பலவீனங்களுக்கிடையில் சுழியோட்டம் நடத்தி, சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள அதாவுல்லா குழுவினர் சந்தர்ப்பம் பெற்றால் அவர்கள் முகம் கொடுக்கப்போகும் சவால் இலகுவானதாக இருக்கப்போவதில்லை. ஆனால் அதைக் காரணம் காட்டி அத்தகையதொரு கோரிக்கையை முன்வைக்க அதாவுல்லா குழுவினரால் முடியாதெனக் கூறுவதற்கில்லை. ஒருவேளை ரவூப் ஹக்கீமை விடவும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விசயத்தில் உறுதியுடன் நடந்துகொள்ள அதாவுல்லா தரப்பினரால் முடியலாம். எல்லாவற்றையும் அடுத்த கட்ட அரசியல் நிலைவரங்கள்தான் தீர்மானிக்கப் போகின்றன.

எம். பீ. எம். பர்ஸான்

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அப்பு: 0065-975 14 941



## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்





## 25 வது வருடத்தில்

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம்பெற அஸ்மா சிகிக்சை நிபுணர் டொக்டர் சுறாஜ். சோமசுந்தரம் அவர்களை இல. 25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா) (கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00 மணி முதல் 7.00 மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00 மணிமுதல் 12.00 மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்ற பின்னர்தான் (பதிவு செய்து) வர வேண்டும். ☎ 074 - 201582

**ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்**

### பாராட்டுக் கடிதங்கள் சில

ஊசிகள் போட்டும், காஸ் (புகை) பிடித்தும், சுகம் கிடையாமலும், பாடசாலைக்கு ஒழுங்காகப்போக முடியாமலும், ஏன் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த வேளையில் எத்தனை முறை நோயின் கொடுமையினால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட நான் இப்பொழுது ஒன்றரை வருடங்களாக நிம்மதியாக மூச்சு விடுகிறேன், என்கிறார் வெள்ளவத்தை மூர் வீதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் றொஜர் இமானுவேல் என்பவர்.

ஒரு நாள் மருந்துடனேயே இரண்டரை வருடங்களாக இருந்த மாய்ச்சல் அறவே போய்விட்டது, என்கிறார் காத்தான்குடி யைச் சேர்ந்த முகமட் லத்தீப் என்பவர்.

1992ம் ஆண்டு தொடக்கம் என்னை வாட்டி, துன்பப்படுத்தி, தற்கொலை செய்ய இருந்த என்னை ஒரு மாதத்திற்குள் முழு சுகம் அடைய வைத்த Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களின் வைத்திய சேவையைப் பாராட்டுகிறேன், என்கிறார் அக்கரைப்பற்று பனங்காட்டைச் சேர்ந்த க. தங்கவேலு.

ஆறு வருடங்களாக இந்நோயால் பட்ட தொல்லைகள் நீங்கி நிம்மதியாக இருக்கிறேன் என்கிறார் மன்னார் எழுத்தூரைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இராஜேந்திரம் என்பவர்.

அண்டை வெளி எல்லாம் காற்று இருந்தும் சுவாசிக்க முடியாமல் இருந்த என்னை சுவாசிக்க வைத்த தெய்வம் என்கிறார் தற்போது டுபாயில் வேலை செய்யும் இலக்கம் 15 பராக்கிராம வீதி, கொழும்பு 14 ஐச் சேர்ந்த ராஜன் என்பவர்.

இப்படி ஒரு சுகம் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை. நான் சிகிச்சை பெற சென்றபோது என்னைப் போலவே எல்லாரும் மிகச் சுகமடைந்து செல்கிறார்கள் என்பதை நேரில் கண்டறிந்தேன். என்கிறார் எட்டு வருடங்களாக அஸ்மா நோயால் பாடுபட்ட 264/1, வெலியமுல்ல வீதி, எகித்த வத்தளை யைச் சேர்ந்த ராக்கம்மா தாமோதரம் என்பவர்.

இப்போது தான் மூச்சு வந்து ஆறுதலாக வீட்டு வேலைகளையும் செய்து வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கிறேன், என்கிறார் அட்டாளைச்சேனை பாலத்தடியைச் சேர்ந்த திருமதி எஸ் பாத்திமா.

பல வருடத் தும்மல், மூக்கால் நீர் வடிதல் பறந்து போனது என்கிறார் மட்டக்களப்பு பெரிய போரதீவு அண்ணாத்துரை.

☎ 074 - 201582


## நினைவஞ்சலி

தோற்றம் 21 07 1962

மறைவு 17 10 2002



### திருமதி திலகலிங்கம் தாமரைச் செல்வி

*அன்பின் உருவான அன்னையாக விளங்கிய!*
*அகிலமெல்லாம் வீசும் பண்புச் சுடரே!!*

கண்ணின் இமைபோல் கருத்துடன் காத்தெம்மைப் பண்பிலும் பாசத்திலும் பொருந்தியே விளங்கிய உன்னை விதி என்ற காலன் வான் என்ற வாகனத்தில் வீதியில் வந்து வழியில் மறித்து, வதைத்து உன்னுயிரைத் தரணியிலிருந்து பிரித்தான்.

அன்னாரின் மரண நிகழ்வில் கலந்தெமது துயரில் பங்கேற்றவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பினோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், 15.12.2002 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் Wittikofen (zentrum), Bern மண்டபத்தில் நிகழ்ந்த அந்தியேட்டி நிகழ்விலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்

தகவல்:- கணவன் திலகலிங்கம்
பிள்ளைகள் பிரியங்கி, லக்ஷன். பேர்ண், சுவிஸ்.


## விளம்பரப் பகுதி

கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிறேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்



விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

**அப்பலோ ஒப்ரிசியன்**

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை.
கொழும்ப- 6.
தொலைபேசி: 074-516609

**APPOLO OPTICALS**

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena.Colombo-13.
T.P:074-610459





## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.

### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அறபுத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.





**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

**★ ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகினறேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி.**

Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-6.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road; Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# முஸ்லிம்களின் அரசியல் பிளவு வலுவடைகிறது!

கிழக்கைப் பிரதான தளமாகக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இனிமேல் ஒரு போதும் ஒன்றுபட முடியாதளவிற்கு இரு அணிகளாகப் பிளவுபட்டுப் போயுள்ள நிலைமையானது முஸ்லிம் மக்களின் அரசியல் நிலைப்பாட்டில் பாரிய பின்னடைவுகளைத் தோற்றுவிக்க வுள்ளதையே அதன் செயற்பாடுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினரும் அதாவுல்லா தலைமையிலான குழுவினரும் தமது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்காகக் கிழக்கின் ஒவ்வொரு மூலைமுடுக்காகச் சென்று நியாயம் ஒப்பிப்பதிலும் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசுவதிலும் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இரு அணியினரும் மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளின் போது இரு தரப்பு ஆதரவாளர்களும் அடிபடுவதும் வெட்டுக்குத்து, அடிபாடு என்று முடிந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதும் அன்றாட நிகழ்வாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக இரு தரப்பினரதும் பொதுக் கூட்டங்களின் போது புலிகளின் தொடர்பானதும் இன்றைய சமாதான நிகழ்வுகள் பற்றியதுமான காரசாரமான விடயங்களே முன்வைக்கப்படுகின்றன.

அரசு-புலிகள் சம்பந்தமான நடவடிக்கைகளில் முஸ்லிம் சமூகத்தை ரவூப் ஹக்கீம் காட்டிக் கொடுத்துவிட்டார் என்றும், விடுதலைப் புலிகளின் காவல்துறை, நீதிமன்ற விஸ்தரிப்புகளால் கிழக்கு முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுவதாகவும், இதைக் கட்டுப்படுத்த ரவூப் ஹக்கீம் எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லையென்றும் அதாவுல்லா அணியினர் அடுக்கடுக்காகக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டு வருகின்றனர்.

மறுபக்கம் அரசு-புலிகள் இணக்கம் கண்டுள்ள சமஷ்டி முறையில் முஸ்லிம்களுக்கு என்று தனியலகு ஒன்று அவசியம் என்றும், இந்த நிலைப்பாட்டில் ஒரு போதும் மாற்றமில்லையென்றும் கிழக்கில் நடைபெறும் கூட்டங்களின் போது முஸ்லிம் மக்களைத் திருப்திப்படுத்தும் தொனியில் ரவூப் ஹக்கீம் கூறி வருகின்ற அதேவேளை புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் குறித்துப் பகிரங்கமாகவே கிழக்கில் மட்டும் விமர்சனம் செய்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் என்ன என்பதற்குரிய வரைவிலக்கணத்தைச் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளரான நோர்வே தெளிவாக விளங்க வேண்டும் என்றும், இல்லையேல் கிழக்கின் அன்றாட நிகழ்வுகள் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுவிடும் அபாயம் உருவாகியுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தலைநகர் கொழும்பில் இருந்து வெளிரும் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்ப் பேரினவாதத்தின் ஊதுகுழல்களாக மாறியுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான உண்மைகளை மறுதலிக்க முடியாது.

ஏனெனில் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் வடக்கு-கிழக்கின் உண்மை நிலைவரங்களைச் சரிவர வெளிக்கொண்டு வருவதற்குத் தயங்குகின்ற அதேவேளை சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாட்டையும் வெறுமனே வியாபார நோக்கையும் கொண்டு செயற்படுவதையும் மறுதலிக்க முடியாது. இது தொடர்பாக வேறு தரப்பினரும் குற்றஞ் சாட்டியுள்ளதும் கவனிக்கத் தக்கதொரு விடயம்.

**கிழக்கான்**

இவை எல்லாவற்றிற்குமப்பால் அரசு-புலிகள் அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் சார்பாக யார் கலந்து கொள்வது என்பது குறித்த விடயத்தில் பெரும் சர்ச்சை உருவாகியுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

முஸ்லிம் புத்திஜீவிகள், நல்ல அறிஞர்கள் கொண்ட குழுவினரையே அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும், ரவூப் ஹக்கீம் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதியாகப் பேச்சுக்களில் கலந்து கொள்வதை ஒரு போதும் அனுமதிக்க முடியாதென்றும் அதாவுல்லா அணியினர் அரசுக்கும் நோர்வே தரப்பினருக்கும் வலியுறுத்தி வருகின்ற நிலையில், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் இருப்பு கவலை கொள்ளத் தக்க ஒரு விடயமாகவேயுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

# வடக்கு-கிழக்கில் மனித உரிமைகள்

வடக்கு கிழக்கில் அமைதி திரும்பிவிட்டது. இயல்பு நிலை படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. நாளாந்த மரணங்கள் குறைந்து விட்டன. இது உண்மைதான். மறுக்க முடியாது. கடந்த காலத்தின் சோதனைகளும் வேதனைகளும் சொல்லி மாளாதவை! ஆனால் தற்போது இருளாக இருக்கும் தமிழ் சமூகத்தினதும், முஸ்லீம் சமூகத்தினதும் வாழ்வின் அந்தப் பகுதியை நிராகரிக்க முடியாது. தமிழ் சமூகம் நரகத்திலிருந்து நரகத்திற்கு சிறிய நிம்மதிப் பெருமூச்சினூடாக வழி நடத்தப்படுவதன் சோதனைகளும் வேதனைகளும் சொல்லி மாளாதவை.

தற்போது கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சோதனைக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டுவிட்டன. திருமலைக்குச் செல்லும் போது 14 சோதனைச் சாவடிகளில் ஏறியிறங்கும் நிலை தளர்த்தப்பட்டுள்ளது.

ஆனால் வன்னியினூடாகப் பயணம் செய்பவர்கள் விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதும் அடையாள அட்டைச் சோதனைக்கு உட்படுவதும், ஆட்களைத் துருவுவதுமாக விசாரணைகள் நடைபெறுகின்றன. வன்னியினூடான பயணம் தற்போது அலுப்பூட்டுவதாக மாறிவிட்டிருக்கிறது. மாற்று அரசியல் சத்திகள் செயற்படாமல், ஊடகங்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாமல் தமிழ் மக்களின் வாழ்வில் சுதந்திரம் மலர்வதென்பது கனவுதான்.

சுதந்திரம் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட வேண்டும்.

எவ்வாறு ரூபவாஹினி- லேக்ஹவுஸ் போன்ற ஊடகங்கள் அரச சார்பானவையோ அந்தளவிற்குத் தமிழ் ஊடகங்கள் புலிகளின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டனவாகவே இருக்கின்றன. சில வேளைகளில் அவை நாளாந்தத் துண்டுப் பிரசுரங்கள் என்று சொல்லும் அளவிற்கு மலினப்பட்டுப் போயுள்ளன. முன்பு வடக்கு-கிழக்கில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களில் யார் ஈடுபட்டார்கள் என்று பார்த்தே உரக்கக் கூறியது அல்லது கண்டும் காணாமல் நடந்து கொண்டது. அவ்வாறுதான் தற்போதும் நடந்து வருகிறது. இவ்வாறே வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற பல மனித உரிமை மீறல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. ஆக மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மட்டும் தொடர்ச்சியாக, விலாவாரியாக, ஆதாரங்களுடன் ஒவ்வொரு ஜனநாயக விரோத நடவடிக்கையையும் மனித உரிமை மீறல்களையும் பதிவு செய்து வருகிறது. அதுவும் ஆங்கில ஊடகங்களில் மட்டுமே இடம்பெறுகின்றன. தமிழில் பிரபலமான ஊடகங்களில் புலிகளின் மனித உரிமை மீறல்கள் கடந்த ஒன்றரைத் தசாப்தமாக இடம்பெறுவதில்லை என்றே கூறிவிடலாம். இந்த எதிர்க்குரல் இன்மை அனேகமாகப் பாசிச சூழ் நிலையிலேயே சாத்தியமாகும். பாசிசம் தனது அதிகாரத்தை நிறுவும் போது சமூகத்தின் சகல நிறுவனங்களையும் தனக்குக் கீழ்ப்படுத்தி விடும். எதிர்ப்பவை மரணத்தைத் தழுவ வேண்டும். பணம் படைத்தவர்களும் மூலதனக்காரரும் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப தொழில் செய்யாதவர்களும் புலிகளின் அதிகாரக் கட்டமைப்புடன் சமரசம் செய்துகொள்ள முனைகிறார்கள். மூலதனம் பாசிசத்துடன் சமரசம் செய்து கொண்டதை இரண்டாம் உலக மகாயுத்த வரலாற்றில் நாம் அவதானிக்க முடியும். மேற்கு ஐரோப்பா, நாசி ஜேர்மனி சோவியத் யூனியனைத் தாக்கட்டும் என்பதற்காக ஜேர்மனி யுத்த தவிர்ப்பை மேற்கொண்டதை இங்கு ஞாபகமூட்டலாம்.


**வன்னியினூடாகப் பயணம் செய்பவர்கள் விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதும் அடையாள அட்டைச் சோதனைக்கு உட்படுவதும், ஆட்களைத் துருவுவதுமாக விசாரணைகள் நடைபெறுகின்றன. வன்னியினூடான பயணம் தற்போது அலுப்பூட்டுவதாக மாறிவிட்டிருக்கிறது.**

ஆனால் இங்கு புலிகளின் அரசியல் இராணுவ அதிகார நிலையில் உதிரி முதலாளிகள், சில்லறை வியாபாரிகள் கப்பத்தைச் செலுத்திக் கொண்டு காலத்தைத் தள்ளலாமே தவிர நடைமுறை உலகிற்குப் பொருந்தி வரக்கூடிய பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதென்பது ஜனநாயகமில்லாத இந்த அரசியல் கட்டமைப்பில் அசாத்தியமானது. யுத்தத்தால் சேதமடைந்த வடக்கு-கிழக்கில் உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் அதாவது நீர், மின்சாரம், தொலைத்தொடர்பு,

**தாகூர்**

போக்குவரத்து ஆகியவற்றில் குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் நிகழவில்லை என்பதே உண்மையாகும். எமது பிரதேசங்களை எப்படியெல்லாம் மாற்ற வேண்டும் என்ற கனவுகள் இல்லாமல் இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பது சந்தேகமானதே. எமது பங்கீட்டுணவுடனான சலிப்படைந்த வாழ்வும், வறுமையும் அப்படியே இருக்கின்றன. மக்களைப் பற்றிப் பேசப்பட்டாலும் அரசியல் சதுரங்கத்தில் இராணுவ நகர்த்தலுக்கான காய்களாகவே பேசப் படுகிறார்கள். இவர்களின் வாழ்வை மேம் படுத்துவதற்கான சில அடிவைப்புக்கள் தானும் வைக்கப்படவில்லை என்பதே உண்மையாகும். மட்டக்களப்பு- திருமலையிலும் வவுனியா-யாழ்ப்பாணத்திலும் அகதி முகாம்கள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன.

# அதிரடி அய்யாத்துரை



திருவான மலையில ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். சுரேஷ் அணிப் பொறுப்பாளற்றை மகனை ரெண்டெழுத்தார் அன்பாய்க் கூட்டிக் கொண்டு போனதுக்கு, 'ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியில அடிமடியிலயுமா' எண்டு பராதிப்படுகினமாம் கட்சியினர்! ரியூஷனுக்கெண்டு போன பொடியனை கொத்திலேனில வைச்சுக் கொத்திக்கொண்டு போனவையாம். அட, இந்தப் படிக்கிற பொடியனைப் பழிவாங்கவே கடத்திப் போயிருக்கினம்..? இல்லை... படையில சேர்க்கத்தானே? இது தெரியாமல் கண்காணிப்புக் குழுவக்கு ஒடிப்போய் முறையிட்டிருக்கினம். "உதைப்போல க்டத்தல் முறைப்பாடுகள் 240 இதுவரை எங்களிட்ட வந்திருக்கு. ரெண்டெழுத்தார் எந்தப் பதிலும் சொல்லுகினமில்லை... அவையிட்டயே போய்க் கேளுங்கோ" எண்டு க.கா.குழுவின் 'பொறுப்பான' பதில் கிடைச்சுதாம். கடத்திக் கொண்டு போனவையைச் சாகக் கொல்லுறதையே சமாதானத்தின்ர பேரால் சரிதான் எண்டு கழுக்கமாயிருக்கிற தமிழ்க் கட்சிக்காறர் இதுக்குப் போய் அலட்டிக் கொள்ளலாமோ!

**"யுத்த நிறுத்தத்துக்கும்,** சமாதானப் பேச்சுக்களுக்கும் அத்திவாரமாயிருக்கிறது எல்லா இடங்களிலும் இரு தரப்பு இராணுவச் சமனிலையை அப்படியே வைச்சுக்கொள்ளுறதுதான்" எண்டு கண்காணிப்புக் குழுத் தலைவர் சொன்னவரெல்லோ? அதுக்கு மறுப்பாய், "க.கா.குழுத் தலைவர் இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்திறார். இதை ஏற்றுக்கொள்ளேலாது" எண்டு ஆலோசகர் சொல்லியிருக்கிறார். எங்கட சனம் உணர்ச்சிவசப்பட்டு கண்காணிப்புக் குழு அலுவலகங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் எண்டு ஆரம்பிக்காமலிருந்தால் சரி...

**கிழக்கின்** தனித்துவக் கட்சிக்குள் மூண்டாவது பிளவும் நடக்கப் போகுதெண்டு சொல்லுகினம். பிரியாமலிருந்த மற்ற ரெண்டு கிழக்கு எம்.பி.க்களும் தனிக் குழுவாக இயங்குவினமாம்! இரண்டுபட்டாலே வேறு யாருக்கோ கொண்டாட்டமெண்டு சொல்லுவினம். மூண்டு பட்டுதெண்டால் முஸ்லிம் சமூகம் கடலில மூழ்கின மாதிரித்தான்!

**அரசாங்கமும்** புலிகளும் நாடு நாடாய்ப் போய்ப் பேசுகினம். எலக்சன் நேரம் மேடை மேடையாய் வந்த இந்தக் கூட்டமைப்புக் காறர் என்ன செய்யினமெண்டு ஒரு சிலமனையும் காணேல்லயே எண்டு விசாரிச்சன். நம்ம மராட்டிய லிங்கமும், மாவையாரும் யாழ்ப்பாணத்தில சனத்துக்குத் தென்னங் கண்டுகள் குடுத்துக் கொண்டு நிக்கிறதைப் பேப்பரில போட்டோவோடை பார்த்தன். அட, உதைத்தானே அப்ப நக்கலடிச்சவை! சனத்துக்கு அரிசியை பருப்பைக் குடுத்து போராட்டத்தை டக்ளஸ் திசை திருப்புறாரெண்டு! ஒண்டு உண்மை கண்டியளோ! தமிழ் வல்லமையளெல்லாத்திலயும் தலையாய வல்லமை தருணத்துக்கேற்ற மாதிரிக் கதைவிடுந் திறமைதான்!

**கடைசியாய்ப்** பொன்மொழி மாதிரி ஒண்டைப் போடுறதை இப்ப அய்யாத்துரையர் கைவிட்டிட்டார் எண்டு அங்கலாய்க்கிறவைக்காக, இதோ எனக்கு யாழ்ப்பாணத்தில இருந்து வந்த கடிதம் ஒண்டில இருந்த பொன் வாசகம் ஒண்டைத் தாறன், பாருங்கோ! அமைச்சர் தன்ர யாவாரத்துக்காக ரெண்டெழுத்தாரைக் குளிர்விக்க, கிட்டு பூங்காவைப் புனரமைக்கிறார்; மாவீரர் சமாதியளைத் திருத்துறார் எண்டெழுதிப் போட்டு கடைசியில இப்பிடிக் கடிதத்தை முடிச்சிருக்கிறார் "தமிழ்ச் சமூகம் அமிரண்ணையைப் பறிகுடுத்து மண்ணெண்ணையரைப் பெற்றிருக்கு!"

# ஸ்போர்ட்ஸ்

## உலகக் கிண்ணப் போட்டிக்கான அணி தெரிவில் சர்ச்சை

**தெ**ன்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் ஒரு நாள் போட்டித் தொடரில் தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்து வரும் நிலையில் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குகொள்ளும் இலங்கை அணியைத் தெரிவு செய்வதில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பலத்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

பெப்ரவரியில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் பங்குகொள்ள ஹசான் திலகரத்ன அழைக்கப்பட்டுள்ளதாகக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடந்த வாரம் அறிவித்தது. 36 வயதான ஹசான் திலகரத்ன கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் 2 ஒரு நாள் போட்டிகளில் மாத்திரமே ஆடியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள அரவிந்த டி சில்வாவும் உலகக் கிண்ணப் போட்டிக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்.

தற்போது உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் 30 பேர் கொண்ட அணியில் சனத் ஜெயசூரியா (கப்டன்), மாவன் அதபத்து, மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார, அரவிந்த டி சில்வா, ரஸல் ஆனோல்ட், ஜெஹான் முபாரக், அவிஷ்க குணவர்த்தன, ஹசான் திலகரத்ன, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், தில்ஹார பெர்னாண்டோ, புலஸ்தி குணரத்ன, பிரபாத் நிசாங்க, சரித புத்திக ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## சிந்தியா பதில்கள்

**★ பயமின்றி அபிப்பிராயங்களைச் சொல்லக்கூடிய சூழல் வந்துவிட்டது. இந் நிலையில் இன்னும் ஏன் சிலர் பொதுக் கருத்துக்கு எதிராக மாற்றுக் கருத்தென்று அடம்பிடிக்கிறார்கள் சிந்தியா?**

த. பிரமீளன், வாழைச்சேனை.

*கிழக்கில் கடத்தப்பட்ட பலர், சித்திரவதை செய்யப்பட்ட சடலங்களாக மீட்கப்படுவதைக் கேள்விப்பட்டுக் கொண்டே, மக்களும் எழுத்தாளர்களும் பயமின்றி அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று எல்லோரும் நம்பவும் வேண்டும். சரிதான். மாற்றுக் கருத்தே சுதந்திரத்திற்குப் பகை என்று இவ்வளவு தீவிர முட்டாள் தனத்துடன் இருப்போமென்றால்... நமக்குச் சுதந்திரம் கிடைத்தும்தான் என்ன ஆகப் போகிறது!*

★★

**★ ஹாய் சிந்தியா! எனது அபிமான நடிகர் கார்த்திக் பற்றி சிறு குறிப்பு ஏதேனும் தர முடியுமா?**

ஆர். முரளி, கணேசபுரம்.

*நாயகிகள் அறிமுகத்தில் ராதிகா, ரேவதி, ராதா, ரஞ்சிதா, சுகன்யா என்று பல வெற்றிகளைக் கண்ட பாரதிராஜா, நாயகர்களை அறிமுகப்படுத்தியதில் கண்ட ஒரே வெற்றி!*

★★

**★ மரடோனா-ரொனால்டோ ஒப்பிடுக?**

எம். பர்ஸான்-குணசிங்கபுர.

*ஆர்ஜென்டீனா வீரர் உணர்ச்சிப் பிழம்பான சாகசக்காரர். பிரேஸில் வீரரோ அமைதியான ஆட்ட அழகர்.*

★★

**★ ஆண்களை மதிக்கும் பெண்கள் அதிகமா? மிதிக்கும் பெண்கள் அதிகமா?**

ஜே. மின்ஹாஜ், மூதூர்-05.

*சம உரிமை நிலவுவதற்கு எல்லோரும் சந்தோஷப்பட வேண்டாமா!*

★★

**★ அப்பலோ மருத்துவமனையின் விலாசம் தர முடியுமா?**

என். கே. தேவி, அம்பாறை.

*கொழும்பு-நாரஹேன்பிட்டியில் உள்ளது.*

★★

**★ சிந்தியா, மீண்டும் காஸ் விலை உயர்வு பற்றி உமது கருத்து?**

பி.எம். சிவா, கமேவெல.

*இந்தக் கேள்வியை நீங்கள் எழுதியனுப்பி ஆறு மாதமாகிவிட்டது. இப்போது இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதில் உள்ள அபத்தத்தை விளங்கிக் கொண்டிருப்பீர்களல்லவா!*

★★

**★ பெண்களுக்குக் கன்னத்திலும், நாடியிலும் குழி விழுவதைப் பற்றி என்ன சொல்கின்றீர்கள்?**

பா. ஜனார்த்தனி, பெரியகல்லாறு-02.

*இயற்கைதானே, வயதாகிவிட்டதைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது!*

**★ முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது முஸ்லிம் காங்கிரஸ் என்றால், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது தமிழர் கூட்டமைப்பா? புலிகளா?**

வீ. ஸ்ரீதரன், மூதூர்.

*புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஒப்புக் கொள்ளாதவர்களும் கூட்டமைப்பினுள் இருக்கிறார்கள்தான். ஆனால், இப்போதிருக்கும் தமிழர் கூட்டமைப்பே முழுமையானதல்ல என்கிறார் மனோ கணேசன். வடக்கு-கிழக்கு, மலையகம், மேல் மாகாணம் (பதிவு செய்துள்ளவர்களே 5 லட்சம் தமிழர்கள் இருக்கிறார்களாம்!) மூன்று பகுதியையும் உள்ளடக்கியதான கூட்டுத்தான் உண்மையில் அகில இலங்கை தமிழ்க் கூட்டமைப்பு என்று அவர் சொல்லிவருவதிலும் நியாயம் உண்டே!*

★★



**★ உங்கள் ஜொள்ளரசி மீரா ஜாஸ்மினின் இரண்டாவது படமும் வந்துவிட்டதே பார்த்தீர்களா?**

ஜ. அஸ்மி அஹமட்ட, திக்குவல்லை.

பார்த்தேன்ழ்ழ்... குழந்தை என்னமாய் முகபாவங்களில் அழகும், நடிப்பில் முதிர்ச்சியும் காட்டுகிறது! ஆனால் படம்... இந்த தாதாக்களின் அடிதடிகளையே தொடர்ந்து அரைப்பதை எப்போது நிறுத்தப் போகிறார்கள்!

★★

**★ மறைந்த நடிகர் வி.கே.ராமசாமி?**

பீற்றர் ஜோன்தாஸ், மன்னார்.

*சிவாஜி கணேசனின் அதே நாடகப் பள்ளியிலிருந்து வந்தவர். ஆனால் அலட்டிக் கொள்ளாத குணசித்திர நடிப்பால் சாதித்துச் சென்றிருப்பவர்.*

★★

**★ உங்களுக்குத் தென்றல் மாதிரிச் சிநேகிதி யாரும் உண்டா? ஜோக்கடிக்காமல் பதில் சொல்லவும்?**

ம. விமலா, ஏறாவூர்-04.

*நிறையத் தென்றல்கள் உண்டு. ஆனால் அவர்களிடம் அதைச் சொன்னால், "இதெல்லாம் நாங்கள் அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உங்கள் வர்க்கத்தின் தந்திரம்" என்று புயலாகிவிடுவார்கள்.*

★★

**★ நீங்கள் சொன்னது போல 'ஐ' அலைவரிசையில் 'அபூர்வ ராகங்கள்' நிகழ்ச்சி காணாமலே போய்விட்டதே?**

என். கே. லோகப், வாழைச்சேனை.

இத்தகைய அபசகுனமான என் எதிர்வுகூறல்களுக்கெல்லாம் பாராட்டுத் தந்து கொண்டிருக்காதீர்கள். தொடர் நாடகங்களைக் கூட முன்னறிவித்தலோ வருத்த அறிவிப்போ எதுவுமின்றி இடைநடுவில் நிறுத்திவிடக் கூடிய-இரசிகர்களைப் பொருட்டாகவே நினைக்காத நெஞ்சுரமிக்கவர்கள் அங்கிருப்பதைப் பாராட்டுங்கள்.

★★

**★ சிந்தியா, எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்கிறீர்களே, அனுபவம் மூலமாகவா? கல்வி மூலமாகவா?**

ஆர். அழகராஜ், சிறிய பம்பக்கொல்ல தோட்டம்.

*பேனா மூலமாக!*

★★

## நாளை வந்து நறும் பூஞ்சோலையில் ஆரத் தழுவாரோ....!

**பு**ற்கள் விரித்திருந்த மரகதப் பாயில் மல்லாந்து படுத்திருந்தாள் தயாந்தி, அவளருகிலேயே தன் முழங்கால்களைக் கைகளால் சுற்றி அதன் மீது முகத்தைச் சரித்து வைத்துக்கொண்டவனாக அமர்ந்திருந்தான் தெளமியன்.

மல்லாந்து கிடந்த அந்த மங்கையின் எழுந்தும் தாழ்ந்தும் இணைந்தும் பருத்துமிருந்த காமாஸ்திரங்கள் தெளமியன் சித்தத்தைச் சிதறடித்தன.

சற்று முன் அவனருகில் அவன் போலவே முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தவள்தான், "இப்படிப் படுத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டு அவன் பதிலை எதிர்பார்க்காமலே கைகளிரண்டையும் மடித்துத் தலைக்குக் கீழாக வைத்துக்கொண்டு தரையில் மல்லாந்துவிட்டாள்.

படுத்துக் கொண்டே அந்தச் சீதளக் காற்றை மிகுந்த ஆசுவாசத் திருப்தியுடன் உள்ளிழுத்துக் கொண்டாள்.

குறுகி உட்கார்ந்திருந்த நிலையில் பதுங்கிக் கிடந்த அவள் எழில்கள் பெரிதும் விடுதலையடைந்து, மலர்ந்தும், நிமிர்ந்தும், விரிந்தும், குத்திட்டும் பற்பல விசித்திரங்களை விளைவித்ததால் தெளமியன் மனம் மிகுதியும் சஞ்சலப்பட்டது. அப்படிப் படுத்திருந்த நிலையில், அவள் அழகு ஆயிரம் மடங்கு அதிகப்பட்டு அவனது சலிக்காத மனதையும் சலிக்க வைத்தது.

ஆகாயத்தை நோக்கியிருந்த தயாந்தியின் முகம், அவனுக்குத் தாமரையை நினைவூட்டியது. இல்லை... இந்த வெண் மஞ்சள் ஒளி சந்திரனுக்கு மட்டுமே உண்டு என்றும் நினைத்தான். சந்திரன், தாமரை, நீலோற்பலம் மூன்றும் தனித்தனி அழகுடையதானாலும் அவை மூன்றையும் சேர்த்துப் பார்க்கும் ஆவலினால்தான் பிரமன் இவள் முகத்தைச் சிருஷ்டித்திருக்க வேண்டும்.

அந்த வதன மலர்களுக்குக் கீழே தெளமியன் பார்வை ஊர்ந்தது. அவளது கழுத்து வெண்மையுடன் போட்டி போட்ட ஒரு வெண்முத்து மாலை, தனது பதக்கத்தை மட்டும் அவள் ஆடைக்குள்ளே மறைத்து விட்டாலும், அது படுத்திருக்கும் இடத்தை எண்ணிப் பார்த்த தெளமியன், அதன் அதிர்ஷ்டம் மதிப்பிட முடியாதது என்று நினைத்தான். அவள் கழுத்தைச் சிறிது அசைத்ததால் ஆடைக்குள்ளிருந்து மெல்ல எட்டிப் பார்த்த பதக்கம் தன்னைப் பார்த்து நகைப்பதாக அவன் எண்ணினான். அதன் இருபுறமும் எழுந்திருந்த இரு தாமரை மொட்டுக்கள் அவனது பார்வையால் சினம் கொண்டன போல் முறைப்புடன் சிறிது விம்மி நிமிர்ந்தன. பணைத்த இரு பெரிய தாமரைகளுக்கிடையில், அந்தத் தாமரைத் தண்டை உடைத்து இழுத்தால் வரும் அந்த மிக நுண்ணிய நூல்கூட நுழைய முடியாத அடர்த்தியைப் பற்றிக் குமார ஸம்பவத்தில் வர்ணித்திருந்த காளிதாசன் வரிகள் ஞாபகம் வந்தன தெளமியனுக்கு.

மெல்லத் தன் முழங்காலைக் கட்டியிருந்த கைகளை விடுவித்துக் கொண்டு அவளருகே நெருங்கினான்.

அவள் பட்டுக் கன்னத்தில் குனிந்து தன் உதடுகளைப் பதித்தான்.

கண்களைத் திறக்காமலே தன் கைகளால் அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டாள் தயாந்தி.

அவளருகே படுத்து அவளுடலைத் தன்னுடலில் அழுத்த இழுத்துக் கொண்டான் தெளமியன்.

"ம்" என்று இன்ப மயக்கமாக ஒலித்தது அவள் குரல். அந்தக் குரல் தந்த போதையும், அவனுடலோடு மோதிய மென்மைப் பொதிகளின் இன்ப ஜாலமும் தெளமியனை வெறிகொள்ள வைத்தன.

அவனுடல் போதையுற்றுப் புளகித்துத் தவித்தது.

மெல்லத் தன்னுடலைத் திருப்பி அவள் மீது கவிழ்த்து, அவளுடலின் மேல் முழுவதுமாகப் பரவ முற்பட்டான்.

திடீரென்று விழித்துக் கொண்ட தயாந்தி, அவனைத் தன் கரங்களால் தள்ளிவிட்டு, "இதற்கு மேல் வேண்டாம்" என்றெழுந்தாள். அவனருகே அமர்ந்த நிலையிலேயே கூந்தலையும் உடைகளையும் சரிசெய்து கொண்டாள்.

"இதற்கும் காளிதாச மகாகவி உவமை சொல்லியிருக்கிறான்..."

கூந்தலை முடிந்து கொண்டே 'என்ன?' என்பது போல இவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"யானையையே விற்ற பிறகு அங்குசத்திற்கு விவாதம் எதற்கு என்று அவன் கேட்பது எவ்வளவு சரி!" அவளருகே மல்லாந்து ஆகாயத்தை வெறித்தபடி தெளமியன் சொன்னான்.

"அப்படியென்றால்...?"

"முழுக் கவிதையின் பொருளையும் சொல்கிறேன் கேள். உன்னைப் போல ஒப்பற்ற கட்டழகி ஒருத்தியை ஒருவன் தழுவுகிறான். அதரங்களைச் சுவைக்கிறான். அவள் ஆடையும் நீங்குகிறது. ஆனால் இன்பம் துய்க்க முயலுகையில் அவள் அடம்பிடித்தால் அவன் இதைத்தானே சொல்ல முடியும்... யானையையே விற்ற பிறகு அங்குசத்திற்கு விவாதம் எதற்கு?"

"இவைகளைத்தான் விழுந்து விழுந்து படித்து வைத்துக்கொள்வீர்களாக்கும்!" குங்குமமாய்ச் சிவந்த முகத்தோடு தயாந்தி முணுமுணுத்தாள்.

"இல்லையே... மேலும் படித்திருக்கிறேனே... இந்தக் கதையே இன்னும் முடியவில்லை..."

"ஐயையோ! வேண்டாம்! வேண்டாம்! விட்டால் அசிங்க அசிங்கமாய்ப் பேசிக்கொண்டே இருப்பீர்கள்" என்றபடி தயாந்தி எழுந்து நடந்தாள்.

"அசிங்கமா? எத்தனை அழகு..." என்று அவன் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தது அவள் காதில் தேய்ந்து ஒலித்தது.

அன்று நடந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த தயாந்தி மனதிற்குள் இப்போதும் வெட்கம் கொண்டாள்.

எழுந்து வந்திருக்கக் கூடாது என்று நினைத்தாள். 'அப்படியே நான் வெட்கத்தில் எழுந்தாலும் அவர் ஏன் தடுத்து நிறுத்தியிருக்கக் கூடாது' என்று சினந்தும் கொண்டாள்.

"ஏனடி என்னைக் கண்டு இப்படிக் கடுகடுவென்று கோபித்துக் கொள்கிறாய்?" என்று கேட்டபடியே மஞ்சரி வந்தாள்.

அப்போதுதான் அவளைக் கண்ட தயாந்தி, "உன்னை இல்லையடி" என்றாள் சலிப்பாக.

"அப்போ யாரைக் கோபித்துக் கொண்டிருக்கிறாய்?"

"நேற்று இரவு தேரொன்று வந்திருப்பதாக ஊர் முழுதும் பேசிக் கொள்கிறதே... கேட்டாயா?"

"ம்... கேட்டேன்." என்று கண்ணடித்துச் சிரித்தாள் மஞ்சரி.

"சும்மா இரடி. நீ ஒன்று. என்னைப் போல எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் இந்த ஊரில். ஆனால் அம்மா என்னவென்றால் தேர் வந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் என்னையே குறிப்பாகப் பார்த்து நிற்கிறாள்."

"குற்றமுள்ள மனம், அதுதான் உனக்குக் குறுகுறுக்கிறது."

"போடீ. யார் என்ன நினைத்தாலும் சரி, நாளைக்கு நான் அவரைப் பார்த்தே ஆகவேண்டும்."

"அடடா, காதல் வெறியா என் கண்மணிக்கு?" என்று நகைத்தாள் மஞ்சரி.

"ஆமாம் வெறிதான். நாளைக்கு, அவரும் நானும் அன்று சந்தித்த அதே கழிக்கரைக்குப் போய் 'அங்குள்ள முள்ளியினுடைய நீல மலர்களைக் கொய்து சூடிக் கொள்ளாவிட்டால், என் அழகு கெடாமல் இருப்பது அரிதாகிவிடும். அதைவிட, அந்த நறும் பூஞ்சோலைக்கு வந்து அவர் என்னை இறுகத் தழுவாது போனால், இந்தக் கொடுமை தாளாது நான் அழிந்தே போய்விடுவேன்..."

"ஏய்... என்னடி இது?" என்று அருகே வந்த மஞ்சரி, தயாந்தியின் விழிகளில் துளிர்த்திருந்த நீரை விரல்களால் துடைத்துவிட்டு அவளை இறுகக் கட்டிக்கொண்டாள்.

எல்லி வந்தன்றோ
தேரெனச் சொல்லி
அலர் எழுந்தன்று
இவ்வூரே பலருளும்
என் நோக் கினளே அன்னை
நாளை மணிப்பது முண்டகம்
கொய்யேன் ஆயின்
அணிக்கவின் உண்மையோ அரிதே
மணிக்கழி நறும்பூங் கானல்
வந்தவர் வறுந்தோ போதல்
அதனினும் அரிதே.

**(நற்றிணை: 191:6-12)**



## மடிந்த மலை

உலகில் இதுவரை காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பெரிய மலைப்பாம்பு இதுதான். 'சமன்தா' என்று இதற்குப் பெயர் வைத்தார்கள். இந்த மலைப்பாம்பு 26 அடி நீளமானது. அமெரிக்காவின் 'பிரான்க்ஸ்' மிருகக் காட்சிச்சாலையில் வாழ்ந்த இது சமீபத்தில் இறந்து போனது.

இந்த மலைப்பாம்பு சில வருடங்களுக்கு முன்னர்தான் அமேசன் காடுகளில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்றினால் பிடிக்கப்பட்டது. இதன் வயது 29 ஆக இருக்கும் என்று அதிகாரிகள் கணிக்கின்றனர்.

# தகவல் பெட்டி




## மலர்ச் சிகை

வித்தியாசமாகச் சிகை அலங்காரம் செய்தால் இரசிக்கத் தக்கதாகத்தான் இருக்கும் அதற்காக இப்படியுமா...?

ரஷ்யாவின் தலைநகரமான மொஸ்கோவில் சமீபத்தில் நடைபெற்ற 'பெஷன் ஷோ' ஒன்றின்போது மொடல் அழகி ஒருவர் தனது தலை முடியை இவ்வாறு அட்டகாசமாக உயர்த்திக் கட்டியிருந்தார்.



## தாயாக.....

பெல்கிரேட் மிருகக் காட்சிச்சாலையில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சியிது. தன் தாயினால் கைவிடப்பட்ட புலிக்குட்டிகள் இரண்டிற்கு அதே மிருகக் காட்சிசாலையில் உள்ள நாய் ஒன்று பாலூட்டுகிறது. இந்தப் புலிக்குட்டிகள் பிறந்ததும் அதன் தாய், குட்டிகளைக் கடித்துக் கொல்ல எத்தனித்தது. பின்னர் குட்டிகளைப் பாதுகாப்பாகப் பிரித்தெடுத்த மிருகக் காட்சிச்சாலை அதிகாரிகள் அதற்கு நாய் ஒன்றின் மூலம் பாலூட்டச் செய்தனர். ரியா, சீஜ் என்று இந்தப் புலிக்குட்டிகளுக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் மிருகக் காட்சிச்சாலை அதிகாரிகள் பல்வேறு இனங்களையும் சேர்ந்த புலிகளை இனவிருத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## கேபல் ட்ரைவிங்

ஜேர்மனியின் டியுசல்டொப் நகரில் நடை பெற்ற கண்காட்சி ஒன்றின்போது ஜொஹான் ட்ரபர் என்ற கலைஞர் தனது வாகனத்தை மிகச் சிறிய இரும்புக் கம்பி ஒன்றின் மேலால் ஓட்டிச் செல்கிறார். இந்தக் கேபல்களில் 75 மீற்றர் தூரத்திற்கு இவ்வாறு இவர் தனது வாகனத்தை ஓட்டிச் சென்றார்.

பட உதவி: அப்துல் ரசூல்-நிந்தவூர்.

## கண்கட்டி வித்தையல்ல!

இந்தியரான ஹரீஸ் பாத்தியாவுக்கு சிகை அலங்காரத் துறையில் அசாதாரணத் திறமை. சிறுவயது முதல் முடி வெட்டுவதில் அவருக்கிருந்த தொழிலார்வம் இவரை இன்று ஒரு சாதனையாளராக மாற்றியுள்ளது.


ஹரீஸ் பாத்தியா கண்களைக் கட்டிக்கொண்டு இன்னொருவரின் தலை முடியை நேர்த்தியாக வெட்டிவிடக் கூடியவர். இந்திய சாதனைப் புத்தகத்திலும் இவரது பெயர் பதிவாகியுள்ளது. கின்னஸிலும் தன் பெயர் இடம் பெறும் என்ற நம்பிக்கையுடன் விண்ணப்பித்திருக்கிறார்.

47 வயதான இவர் மும்பாயில் சலூன் ஒன்றை நடத்தி வருகிறார். கண்களைக் கட்டிக்கொண்டுதான் எப்பொழுதும் வேலை செய்வார் என்றில்லை. அது சாதனைக்காக மட்டும்தான். பொதுவாகவே இவரது சலூனில் ஏகப்பட்ட வாடிக்கையாளர்கள் இருப்பார்கள்.

சிகை அலங்காரம் தொடர்பாக இலவசமாக வகுப்புக்களை நடத்திவரும் இவர் இத் தொழிலைச் சிறந்த வாழ்வாதாரமாக ஆக்கிக்கொள்வது எப்படியென்று தன் மாணவர்களுக்குப் போதித்து வருகிறார்.



## வாழ்வதற்காக



வாழ்வதற்காக எமனின் வாய்க்குள் கைபோடவும் தயங்காதவர்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதுவும் அப்படியொரு சமாச்சாரம்தான். வாழ்வதற்காக யானையின் வாய்க்குள் தலையைப் போடுகிறார் இந்த நபர். தாய்லாந்து நாட்டின் தலைநகரமான பாங்கொக்கில் உள்ள காட்சிக் கூடமொன்றில் தன்னால் வளர்க்கப்படும் யானையின் வாய்க்குள் தனது தலையைச் செலுத்தி எடுக்கிறார் இந்த நபர். இதிலுள்ள ஆபத்தை இந்த மனிதர் அறியாமலில்லை.

என்ன செய்வது? வாழ்வதற்காக...

# 'என் புருஷன் எதிர் வீட்டுப் பொண்ணு' விஜயகாந்திடம் காயத்ரி ஜெயராம் புகார்

'என் புருஷன் எதிர் வீட்டுப் பொண்ணு'வில் பாண்டியராஜனுக்கு ஜோடியாக காயத்ரி ஜெயராம் நடிக்கிறார் எனப் படத் துவக்க நாளன்று பத்திரிகைகளில் விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. படத் துவக்க விழா போஸ்டர்களிலும் காயத்ரி ஜெயராமின் படங்களே இடம்பெற்றிருந்தன.

ஆனால் படத் தலைப்பைப் பார்த்து மிரண்டதாலோ என்னவோ தற்போது இப் படத்தில் நடிக்கத் தாம் ஒப்புக்கொள்ளவில்லையெனக் காயத்ரி ஜெயராம் மறுத்துள்ளார்.

மறுத்ததுடன் நில்லாமல் நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்துக்கும் புகார் மனு ஒன்றை அனுப்பியுள்ளார். அவர்கள் கேட்ட தேதிகளை என்னால் கொடுக்க முடியவில்லை. நான் கால்ஷீட் தராமல் எனது அனுமதியில்லாமலேயே எனது படத்தை போஸ்டர்களில் பயன்படுத்தியுள்ளனர். அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுவில் கூறியுள்ளார் காயத்ரி ஜெயராம்.

இது குறித்து படத் தயாரிப்பாளரிடம் கேட்டபோது, காயத்திரியின் குற்றச்சாட்டை வன்மையாக மறுத்தார். காயத்ரி ஜெயராமின் கால்ஷீட்டுக்குத் தகுந்த மாதிரிப் படப்பிடிப்பை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தோம். இதனை அவரிடமும் தெரிவித்தோம். அப்போது ஒப்புக்கொண்டவர் இப்போது பிரச்சினை எழுப்புவதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை என்றார்.

# மணவாழ்வில் புகும் நந்திதா தாஸ்

தான் காதலித்து வந்த சௌமியா சென் என்பவரை 'அழகி' நாயகி நந்திதா தாஸ் திருமணம் செய்து கொண்டார்.

'பயர்' படத்தில் அறிமுகமாகி, சபானா ஆஸ்மியுடன் பல சூடான காட்சிகளில் நடித்துப் புகழ் பெற்றவர் நந்திதா தாஸ்.

பின்னர் 'அழகி', 'கன்னத்தில் முத்தமிட்டால்' ஆகிய தமிழ் படங்களிலும் தனது மிக இயல்பான நடிப்பின் மூலம் தமிழர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டார் அவர்.

நடிப்பு மட்டுமல்லாமல் சமூக சேவையிலும் தீவிர ஆர்வம் கொண்ட நந்திதா மும்பை விளம்பர ஏஜென்சியில் பணிபுரியும் சௌமியா சென் என்பவரைக் காதலித்து வந்தார்.

இந் நிலையில் கடந்த 22ம் திகதி சௌமியா சென்னை நந்திதா திருமணம் செய்து கொண்டார்.

எளிய முறையில் நடைபெற்ற இவர்களுடைய திருமணத்திற்குப் பிறகும் நந்திதா தொடர்ந்து நடிப்பார் என்று அவருடைய தாய் வர்ஷா தாஸ் கூறினார்.



படம்: லேசா லேசா
ஷாம்-த்ரிஷா



படம்: லேசா லேசா
ஷாம்-த்ரிஷா

# மௌனம் பேசியதே...

நீ விரும்பும் பெண்ணை விட உன்னை விரும்புபவளையே மணந்துகொள் என்பதை மையமாக வைத்து எடுத்துள்ளனர்.

பெண்களின் வாசனையே பிடிக்காத ஒரு முரட்டு இளைஞன். அவனும் காதலில் மாட்டிக்கொள்கிறான். கரடுமுரடான அவனது ஒவ்வொரு செயலிலும் மென்மையான மாற்றங்கள். அவை தொடர்ந்தனவா? காதலி ஏமாற்றினாளா? அல்லது அவனது தவறான புரிதலா? இவற்றுக்கான விடை படத்தின் கிளைமாக்ஸ். இடைவேளை வரை படம் நகர்வதே தெரியாத அளவுக்குக் காட்சிகளை அமைத்திருக்கிறார் இயக்குநர் அமீர். ஆங்காங்கே குருவின் இயக்குநர் பாலா) தாக்கம் பளிச்சிடுகிறது.

ஒரு சில காட்சிகளைச் சரியாக யூகிக்க முடிந்தாலும் கிளைமாக்ஸில் தோற்றுப்போய்விடுகிறோம். அதுதான் இயக்குநரின் வெற்றி. மௌனம் பேசுமா? சூர்யாவின் நடிப்பில் அது பேசும்போது வியப்பு உண்டாகிறது. சில காட்சிகளில் நந்தாவை நினைவூட்டுகிறார். முதல் பட நடிப்பைப் பார்க்கும்போது 'மிஸ் மெட்ராஸ்' த்ரிஷா நடிப்பிலும் நிறைய பட்டங்கள் வாங்குவார் போல் தெரிகிறது.

மொத்தத்தில் புதுமுகங்கள் த்ரிஷா-நந்தா-மஹா மூன்று பேரும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். காமெடி இல்லாத குறையை ஓரளவுக்குச் சரிசெய்கிறார் சூர்யாவின் நண்பனாக வரும் அஞ்ச மகேந்திரா.

பின்னணி இசையில் முத்திரை பதித்துள்ளார் யுவன்சங்கர்ராஜா.

வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைக் கண்முன் கொண்டு வருகிறது சிநேகனின் 'ஆடாத ஆட்டமெல்லாம்' பாடல். எல்லோரும் மனதில் நிறுத்த வேண்டிய பாடல்.



# முகப்பில்

சம்புக்தவர்மா

பிரசாந்த்

படம்:

ஜெய்

# நீ யூ எதிர்பார்ப்பு

முத்தக்காட்சிகள் மூல... எடுத்த எடுப்பிலேயே 'நியூ' பட... திற்குப் பப்ளிசிட்டி செய்... கொண்ட இயக்குநர் எஸ்.ஜே.சூர்யா... படத்திற்கு கதையை ரொம்பவே நம்... மல் ஸ்கிரிப்ட்டையே அதிகமாக நம்... யிருக்கிறாராம். அதிலும் ஆங்கிலப்... ரேஞ்சுக்கு இவர் கதையோட்டத்தை... கொண்டு செல்ல அதற்கு ரொம்ப... கொடுத்து நடித்திருக்கிறாராம் சிம்ரன். இந்... படம் வெளிவந்தால் சிம்ரனின் உணர்ச்சிமயமான... நடிப்புக்கு இளைஞர்கள் பட்டாளம் மிகப் பெ... விருதுகள் வழங்கப்போவது மட்டும் உண்மை ... கிறது அந்தப்பட யூனிட்.

# பா. விஜய்க்கு அழைப்பு

பாடலாசிரியர் பா.விஜய் மற்றும் விவேகா இருவரை... தேடி ரொம்ப நாளாகவே சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு... வந்துகொண்டிருந்தன. ஆனால் இருவரும் அதை தன்... போட்டுக்கொண்டு வந்தார்கள். ஆனால் திடீரென்று பார்த்தா... இப்போது விவேகா ஒரு படத்தில் நடிக்கத் தொடங்கிவிட்டா... இந்நிலையில் பலரும் பா.விஜய்யைத் தொடர்பு கொண்டு நடிப்ப... ஆர்வத்தை அதிகப்படுத்தி வருகின்றனர். ஆனால் அவரோ அதிகமா... படங்களுக்குத் தற்போது பாடல் எழுதுவதால் இன்னும் யாருக்கும் சரியா... பதிலைச் சொல்லாமல் இழுத்தடித்துக் கொண்டே வருகிறார்.

# ரஜினியின் அடுத்த பட இயக்குநர் யார்?

ரஜினியின் அடுத்த படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கவிரு... கிறார் என கோலிவுட் வட்டாரத்தில் பலமாகப் பேச்சு அடிபட்ட... ரவிக்குமாரிடம் விசாரித்ததில் ரஜினி படத்தை இயக்குவதற்கு ... ராக இருக்கிறேன். ஆனால் அதை ரஜினிதான் முடிவு செய்... இதுவரை ரஜினியிடமிருந்து தனக்கு அழைப்பு எதுவும் வரவில்... மறுத்துள்ளார்.

'பாபா' எதிர்பார்த்த வெற்றி பெறாததால் ரஜினி மீ... அவரது இரசிகர்கள் நம்புகின்றனர். விரைவிலேயே ரஜி... திற்கான அறிவிப்பு வரலாம் என இரசிகர்கள் வட்டார...

அப்படிப் புதுப்பட அறிவிப்பு வருமானால் படத்தை... யார் என்ற கேள்வி எழுகிறது. கோலிவுட்காரர்கள் கை... ரவிக்குமாரைத்தான். ரவிக்குமார் இயக்கி அஜித் நடித்த... வாரிக் குவிக்கிறது. இதையடுத்து ரவிக்குமாரை வை... அடுத்த படத்தைத் தயாரிப்பார் எனச் சினிமா வ... நம்புகிறது. தற்போது நிலவும் குழப்பமான அரசிய... தான் ரஜினியின் அடுத்த பட அறிவிப்பு தள்ளிப் ... அவரது நண்பர்கள் தெரவித்துள்ளனர்.

# கிரணுடன் ஜோடி சேரும் சில...

'காதல் அழிவதில்லை' படத்தையடுத்து ... இணைந்து புதிய படத்தில் நடிக்கவிருக்கிறா... சன். 'பகவதி' படத்தை இயக்கிய வெங்கடேஷ்... சனை வைத்துப் புதிய படம் இயக்கவிருக்கி... கதாநாயகியாக நடிக்க கிரண் ஒப்புக்... டுள்ளார்.

சிலம்பரசனுடன் கிரண் ஜோடி சே... றார் என்ற செய்தியைக் கேட்ட பலரு... அதிர்ச்சி. கிரண் சிலம்பரசனுக்கு அ... மாதிரி இருக்கிறார் என்பதுதான் காரண... எனினும் இவ் விசயத்தில் டி.ராஜேந்... சிலம்பரசனுக்குப் பச்சைக் கொடி காட்... விட்டார். கிரண் நடித்து வெளியான இ... (ஜெமினி, வில்லன்) படங்களுமே ஹிட்... டானதுதான் இதற்குக் காரணம் என்... கிறார்கள்.



# சினி விசிட்



★ கைவில் ஏதும் படங்கள் இல்லாததால் அபிராமி நொந்து நூலாகி இருக்கிறார். அழகும் திறமையும் இருந்தும் கூட சரியான மனேஜர் அல்லது பி.ஆர்.ஓ. சிக்காததால்தான் அவரால் சான்ஸ்களைப் பெற முடியவில்லை என்கின்றனர் கோடம்பாக்கத்தினர்.

★ சூர்யாவை வைத்து 'நந்தா' மற்றும் 'மௌனம் பேசியதே' படங்களைத் தயாரித்த அபராஜித் பிலிம்ஸ் அடுத்து விஜய்யை வைத்து மகாராஜன் இயக்கத்தில் ஒரு படம் எடுக்க உள்ளது. மௌனம் பேசியதே நல்ல வெற்றியடைந்துவிட்டதால் மெகா பட்ஜெட் தயாரிப்பில் இறங்குகிறது இந்த நிறுவனம். தங்களது இந்தப் புதிய படத்தில் ஐஸ்வர்யா ராயை ஹீரோயினாக்க முயன்று வருகிறார்கள். கேட்ட பணம் கிடைக்கும் என்றாலும் விஜய்யுடன் இணைய ஐஸ்வர்யா ஒப்புக்கொள்வாரா என்பதுதான் கேள்வி.

★ இதுவும் இன்னொரு நொந்த செய்திதான். வெற்றிப் படங்கள் கொடுத்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டதால் டைரக்டர் வஸந்தைப் பார்த்தால் நடிகர்கள் தலைதெறிக்க ஓடுகின்றனர். தனது அடுத்த படத்தில் நடிக்க வைக்க அஜித், சூர்யா, விஜய் என அனைத்து முன்னணி ஹீரோக்கள் வீட்டிலும் போய்க் கதவைத் தட்டிப் பார்த்துவிட்டார். ஆனால், இதுவரை யாரும் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் புது முகத்தைப் போட்டுவிடலாமா என்ற யோசனையில் இருக்கிறார் வஸந்த்.

## சினி விசிட்

★ கோடம்பாக்கத்தின் ஒரு மிக அழகிய ஜோடி சேர்ந்து நடிக்கப் போகிறது. அஜித்தும் ஸ்னேகாவும் இணைந்து 'ஜனா' படத்தில் நடிக்கப் போகிறார்கள்.

★ மாதவனை வைத்துச் சொந்தப் படம் எடுக்கப் போகிறார் ஜோதிகா. முதலில் தன் மனம் கவர்ந்த சூர்யாவை வைத்துப் படம் எடுக்க நினைத்தாராம். ஆனால், படம் ஏடாகூடமாகிவிட்டால் மனஸ்தாபம் வந்துவிட வாய்ப்பு உண்டு என்பதால் இருவருமே அதைத் தவிர்த்து விட்டார்களாம். இருவரும் பேசியே மாதவனை முடிவு செய்தார்களாம்.

★ சிம்ரன், சவுந்தர்யா, வித்தியா ஆகிய மூவரும் ஒரு படத்தில் இணைந்து நடிக்கிறார்கள். கதாநாயகனாக ஹரிகிருஷ்ணா நடிக்கும் இந்தப் படம் தமிழில் அல்ல... தெலுங்கில் தயாராகிறது. இந்த மூன்று கதாநாயகிகளும் ஒரே படப்பிடிப்பில் இருந்தாலும் ஒருவரிடம் ஒருவர் ஒரு வார்த்தைகூட இனிமையாகப் பேசுவதில்லை என்பதுதான் ஹைலைட்டான விடயம்!

...டும் என்கிறார். ...றும் ரவிக்குமார் ... நடிப்பார் என ... அடுத்த படத் ...ிர்பார்க்கிறது. ...க்கப்போவது ...துவது கே.எஸ். ...ன்' வருலை ...ான் ரஜினி ... பலமாக ...நிலையால் ...து என்று

...சன்

## 'பெப்சி உங்கள் சாய்ஸ்' கின்னஸுக்குப் பரிந்துரை

ஒரே தொகுப்பாளர் வழங்க, நீண்ட நாள்களாக ஒளிபரப்பப்பட்டுவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சி என்ற சிறப்புடன் கின்னஸுக்குப் பரிந்துரைக்கப்படுகிறதாம் 'பெப்சி உங்கள் சாய்ஸ்'. நிகழ்ச்சியின் 'தீம்', அது ஒளிபரப்பப்பட்ட நேரம் என எதுவும் மாறாமல் பெப்சி உமா தொகுத்து வழங்கிய பெருமை இந் நிகழ்ச்சிக்கு உண்டு.

## அலாவுதீனுக்காக பிரபுதேவா ஆமிஷா பொம்மலாட்டம்

'அலாவுதீன்' படத்தில் 'கொய்யாக்கா தோப்பு' என்ற அறிவுமதியின் பாடலுக்காக பிரபுதேவாவும் ஆமிஷாவும் பொம்மலாட்டம் ஆடியிருக்கிறார்கள்.

கை, கால், தலை என இருவரின் உடலிலும் எட்டுக் கயிறுகள் கட்டப்பட்டு மரத்தின் உச்சியிலிருந்து தொங்கவிடப்பட்டார்களாம். இதை மரத்தின் உச்சியில் நின்றபடி ...க்குநரும் உதவி இயக்குநர்களும் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு அசைவுக்கும் ஏற்றபடி ...வொரு கயிற்றையும் பேலன்ஸ் செய்து பிடித்துக் கொள்ள ஷூட்டிங் இனிதே நடந்ததாம்.

இந்தப் பாட்டு கண்டிப்பாக ஹிட்டாகும் என்று சொல்கிறார் பிரபுதேவா.



ராஜசுந்தரம்-சிம்ரன்

## எனக்கென ஒன்றுமில்லை

சூரியன் சுட்டெரிக்கும்
அந்தப் பகல் வெயிலில்,
நான் மட்டும்
தனியாய் நின்றபோது-என்
நிழலையும் கூட
காணவில்லை!
என் உள்ளம்
குமுறும் போதெல்லாம்
இந்த இதயமும்
தன் துடிப்பை
நிறுத்திக் கொள்கிறது!
உலகம்
இருளும் போதுதான்
என் கண்கள்
விழித்துப் பார்க்க
ஆசைப்படுகிறது!
அதேபோல
உலகம் விழித்திருக்கும்
போதெல்லாம்
என் இமைகளும்
மூடிக்கொள்கிறது!
உறவுகள் எல்லாம்
என்னை மையமாக்கி
சுற்றி வட்டமிட்டு
வேடிக்கை பார்க்கிறது!
கண்கள் வறண்டது,
உள்ளம் இருண்டது
எல்லாம்,
உயிர் கசிந்தது
உணர்வு துடித்தது
எல்லாம்...
என்னுள்ளே
புதைத்துக் கொள்ள வேண்டிய
தடங்களாகிவிட்டன!
எனக்கென
ஒன்றுமில்லையென
எண்ணிக்கொள்கிற
வேளையில்-உலகம்
உனக்கென
ஒன்றுமில்லையெனக் கூறுவது
அடிக்கடி
என் காதில் விழுகிறது!

வே. கர்ணாநிதி,
டயகம கிழக்கு.

## புத்தாண்டே வருக

புத்தாடை அணிந்து
புதுமணம் வீச
புதுயுகம் படைத்திட
புத்தாண்டே நீ
மலர்வாய் புதுமலராய்...

முடிவுகள் இல்லாத
சமாதானப் பயணத்திற்கு
முற்றுப்புள்ளி வைத்து
சந்தங்கள் பாடி
சொந்தங்கள் உறவாட
புத்தாண்டே நீ
மலர்வாய் புதுமலராய்...

அமைதி வழிதேடி
நாம் அனைவரும்
அடி வைப்போம்
இப்புத்தாண்டில்
தினம் கூடி...!

து. பரிமளாதேவி, கலஹா.

## விடைபெறும் வாழ்க்கை...!

நிலவொளியின் தாரிகை
நீட்டிய உன்னுருவம்
தேய்ந்து போகும்-ஒரு
அமாவாசை இரவினில்!

கவிதைகள் ஒருமுறை
இடைவேளை தேடும்:
வார்த்தைகள் இல்லாத
மௌனமொழிகளால்...!

பார்வைகள் கோர்க்கும்
வாழ்க்கையும்
எண்ணங்களில் தவிக்கும்
வாலிபமும்
தாங்காத இரவுதனைப்
பிரசவிக்கும்

வேனிற் காலத்து
மஞ்சள் வெய்யில் போல...

ஒவ்வொரு இரவும்
வேட்டி கலைந்த மடிப்பாய்
விடைபெறும் வாழ்க்கை!!

இந்த
அவஸ்தைகளெல்லாம்
ஒரு அமாவாசை இரவில்தான்..!
ஆசுவாசப்படுத்தும்
இளம்பிறையின்
மறைவினில்தான்..?

சகியே..
அவஸ்தைப்பட்ட
ஜீவிதம்
நேற்றோடு
முடிந்து போகும்..!

எவ்வளவு காலம்
ஏமாந்து வாழ்வது...?

சலசலத் தோடும்
குளிரோடையின் சங்கீதம்
எனது கல்லறையை
தாலாட்டிச் செல்லும்....!

இரு துருவங்களில் மோதும்
பனிப்பாறைகள்
எழுதிக் கொள்ளும்-என்
மரண இரகசியங்களை...!

எத்தனை இடிமின்னல்
கல்லறையின் முகட்டில்...?

சரித்திரங்கள் ஒருமுறை
தலைகுனியும்:
சரிபார்த்துக் கொள்ளும்
இடைவெளியில்லாத
சோகத்தின் அவதாரங்களை...!!

அப்போ...
நிலவொளியின் தாரிகை
தீட்டிய உன்னுருவம்
தேய்ந்து போகும்-ஒரு
அமாவாசை இரவினில்...!!

முகம்மது ஹாரீத்,
அட்டாளைச்சேனை.

## காவியத் தலைவா!

ஏற்றத் தாழ்வுகளின்
ஏணியில் ஏறிசெல்லும்
சமுதாயம் வீழ்ச்சியின்
விழிம்புக்கு சென்றுவிடாமல்
வரம்பு கட்டிய
புரட்சித்தலைவா.

கருவறையில் சுமந்து
உதிரத்தை உரமாக்கி
உலகத்தில் வாழ
மக்கள் திலகமாய்
உலகம் புகழவைத்தாயே
பெண் அடிமைச்சங்கிலியை
கண்ணேதிரே உடைத்தெறிந்தாய்

குடிசையில் ஒட்டிய
வயிற்றுடன்
வாழ்ந்த வறியோரை
வாஞ்சையுடன் வாரி
அணைத்துக் கொண்ட
வாஞ்சைமிகு தலைவனாய்
ஏழைகள் ஏற்றம்பெற
காட்டிய கரிசனைக்கு
ஓர் முத்திரை எங்க
வீட்டுப் பிள்ளை.

உழவன் சேற்றில் கை
வைத்தால்தானே
நாமெல்லாம் சோற்றில்
கை வைக்கலாமென்று
மண்ணைச் செழிக்கச்செய்யும்
விவசாயப் பெருமகனையும்
விழிக்கத் தவறவில்லை
உலகத்தையே விழிக்கச்செய்தாய்.

திரைகடல் ஓடி திரவியம் தேடு
மீனவர் புகழையும் வானுயரச்
செய்தாய்,

அனுபவங்கள் பயிற்சிகள் வாயிலாக
நிலையான நடத்தை மாற்றங்களை
உண்டாக்குவதே கற்றல்
நல்லபேரை வாங்கவேண்டும்
என்றுரைத்த எம் தலைவன்
ஒற்றுமையாய் வாழ வேண்டும்
என்று பிஞ்சு நெஞ்சங்களுக்கு
அளித்த அறிவுரைதான் எத்தனை.

அரசியல் அரங்கில் தடம்
பதித்த வேளையில்
மக்கள் உள்ளங்களில்
நிலையான இடத்தை
பிடித்துக் கொண்டாய்

பாட்டாளிகளைக் கூட்டாளிகளாக்கி
ஏற்றத் தாழ்வுகளைத் தூக்கி எறிந்து
ஏற்றம் பெற்று
மடிந்த பின்னும் வாழ்கிறார்
என்ற முத்திரையை
பதித்தவர் எம் புரட்சித்தலைவர்.

ஏ. ஆர். எம். ஜிவ்றி, பாணந்துறை.

## வாழ்ந்து காட்டிவிடு

காரிகையே..!
காதலெனும்
காலபோகத்தில்
உன்னுள்
காதல் விதை தூவி
காததூரம் சென்றவனை
இன்னுமேன்
உன் கருவிழியில்
சுமக்கின்றாய்...?
கழற்றி எறிந்துவிடு
காளையவன் நினைவுகளை
காதலின் தோல்விக்கு
கல்லறைதான்
முடிவல்ல.

காய்ந்த நிலமும்
அந்தக்
கார்த்திகையில் மழைபெறும்
தேய்ந்த நிலவும்
நாளை
வளர்பிறையாய் வானில்
வரும்...
வாழ்வதற்காய் பிறந்த
நீ மட்டும்
வாழ்வின்றி இறப்பதா..?
வாழ்ந்து காட்டிவிடு
வையத்தில் பெண்ணாக.

வாழ்வை நீ...
தொலைக்கவில்லை
அதில்
வழுக்கித்தான் விழுந்தாய்
மீண்டும்
எழுந்து நட... உன்
வாழ்க்கைப் பயணத்திற்கு
வான் நிலவு
வழிகாட்டும்
நட்சத்திரம்
பூச் சொரியும்.

வளாலாய் செல்வகுமார்

## எவ(ள்)ன் கணவன்

சீதனச் சந்தையில்
ஆடவர் சூதாட்டம்,
மங்கையர் வாழ்க்கையோ
ஆனது போராட்டம்!

சில்லறை கேட்கிறது
சீதனப் பேயினம்,
சிக்குண்டு தவிக்கிறது
நமைப் பெற்ற தாயினம்!

உரலின் இடுக்கில்
உலகத்தை தேடாதே,
பணத்தை வாங்கி
பாசத்தை மூடாதே!

விஞ்ஞான யுகத்தில்
மெய்ஞானம் தொலைந்தது,
கன்னியர் வாழ்வில்
கவலைகள் புதைந்தது
பாசம் இன்று பறந்தது,
சீதனம் நின்று சிரிக்கிறது!

உனக்காக
வாழ வந்தவள் அவள்;
இடையில் ஏனோர்
பணச் சுவர் கட்டுகிறாய்!

நில்...
ஒரு முறை
சிந்தித்துப்பார்...
பணம் கொடுத்தவள்
கணவனா?
அதை எடுத்தவன்
கணவனா?

எப். முஹம்மது நிஸ்வி,
கிண்ணியா-03.

## அண்ணா!

நட்பு
எனும்
பாதை வழியே
உன்னோடு
நடைபோட்டுக்
கொண்டிருந்த-நான்
காதல்
எனும்
சாக்கடையில்
சறுக்கி விழுந்தேன்-
ஆனால்
நீ
அண்ணா!
எனக் கூறி
சறுக்கிய என்
பாதங்களை
சரி செய்து
விட்டாயே!

விவே. பிறேம்,
கோமாரியூர்.

## தேன் கிண்ணம்

## பேனா நண்பர்கள்



பெயர்: தம்பையா கலைமதி
வயது: 18
முகவரி: மீசாலை மேற்கு, மீசாலை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரி.வி.



பெயர்: ஐ. கிஷோர்
வயது: 24
முகவரி: M.C.S (ALFAIR) RUWI, MATRAH COLD STORES LLC, P.O.BOX-1158, POSTAL CODE-112, SULTANATE OF OMAN.
பொழுது போக்கு: வழமையானவை



பெயர்: T. பாலன்
முகவரி: 22 Madeliefveld-29 2914 P.K. Nieuwerkerk a/d IJssel Netherland,
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

## நினைத்து, நினைத்து சிரிக்க

இரண்டு அண்டப் புளுகர்கள் ஒரு தவறணையில் அமர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தார்கள். நேரம் ஆக, ஆக தலைக்குள் போதை ஏற ஏற ஒருவரை ஒருவர் சீண்டத் தொடங்கினார்கள். ஒரு கட்டத்தில் முதலாமவன் சொன்னான். "நான் உன் தாயுடன் உறங்கியிருக்கிறேன்". மற்றவன் என்ன செய்யப்போகிறான் என்பதை அறியும் ஆவலுடன் தவறணையே பூரண அமைதியாய் இருந்தது. முதலாமவன் மீண்டும் சீண்டினான். "நான் உன் தாயுடன் உறங்கியிருக்கிறேன்". இப்போது மற்றவன் சொன்னான். "அப்பா, நீங்கள், வெறியில் இருக்கிறீர்கள். வீட்டுக்குப் போங்கோ".

ஆமை ஒன்று குறுகிய சந்து ஒன்றிலே நடந்து கொண்டிருக்கையில் நத்தைக் கூட்டம் ஒன்று அதனைப் பழிப்புக் காட்டியபடியே முந்திச் சென்றது. இது தொடர்பாக ஆராய வந்த பொலிஸ் அதிகாரி ஆமையிடம் "என்ன நடந்தது என்று விபரிக்க முடியுமா?" என வினவினார். குழப்பமான முகத்துடன் பொலிஸ் அதிகாரியைப் பார்த்த ஆமை, "எனக்குத் தெரியாது, எல்லாம் படுவேகமாய் நடந்துவிட்டது" என்றது.

குடும்ப டொக்டர் தன்னுடைய நோயாளியிடம் தொலைபேசியில் "உங்களுக்குச் சொல்வதற்காக என்னிடம் ஒரு கெட்ட செய்தியும் ஒரு மோசமான செய்தியும் உண்டு" என்றார்.

"ஓ! கடவுளே, அந்தக் கெட்ட செய்தி என்ன" என நோயாளி கேட்டார்.

அதற்கு டொக்டர் "நீங்கள் இருபத்து நான்கு மணி நேரமே உயிருடன் இருக்கப் போகிறீர்கள்"

"ஐயோ, இது பயங்கரமானது" எனக் கூறிக்கொண்டே நோயாளி கேட்டார் "அப்படியானால் அந்த மோசமான செய்தி என்னவாயிருக்கும்".

"இந்த விடயத்தை உங்களிடம் சொல்வதற்கு உங்களைத் தொடர்பு கொள்ள நேற்றிலிருந்து நான் முயற்சித்துக்கொண்டிருக்கிறேன் என்பதுதான்" என்றார் டொக்டர்.

படையதிகாரி ஒருவர் தன்னுடைய படையிலே இருக்கின்ற சிப்பாய் ஒருவன் வித்தியாசமாக நடப்பதை அவதானித்தான். அவன் கண்ணில் படும் கடதாசிகளையெல்லாம் பொறுக்கி எடுப்பதும் அதை உற்றுப் பார்ப்பதும் பின் "இது இல்லை" என்றுவிட்டு மீண்டும் கீழே போடுவதுமாக இருந்தான். அவனின் இச்செயல், அவனை ஒரு மனோவைத்தியரிடம் பரிசோதனைக்கு அனுப்பும் வரை தொடர்ந்து கொண்டே இருந்தது. அவனைப் பரிசோதித்த மனோவைத்தியர், அந்தச் சிப்பாய் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் அவனைப் படையணியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்றும் தனது பொழிப்புரையை எழுதினார். வைத்தியர் எழுதிய பொழிப்புரைத் தாளைப் பொறுக்கியெடுத்துக் கொண்ட சிப்பாய் புன்னகைத்தபடியே சொன்னான் "இதுதான் அது."

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக க. வை. பழனிசாமியின்- கவிதைகளிலிருந்து கவிதை என்ற நூலிலிருந்து இரு கவிதைகள்.

### கடிவாளம் இல்லாது...

நான்
எல்லோரும் சவாரிசெய்யும் குதிரை.

என் முதுகில்
எப்போதும்
எவராவது பயணம் செய்துகொண்டே
இருப்பார்கள்.

பாசம்... பிரியம்... அன்பு
என்றெல்லாம் பெயர்வைத்து
அவற்றை வாய்நிறைய திணித்து
வேகவேகமாய் ஓடவைத்து
வேடிக்கை பார்த்திருப்பார்கள்.

கைகளில்
கடிவாளம்
கூடவே சாட்டையும்.
ஓட்டம் ஓட்டம்!
அதுவே என் தொழிலும் வாழ்க்கையும்.

நேற்று... இன்று... நாளை
தினமும்
பழகிய தடங்களில் மட்டுமே பயணம்.

பறித்துப் போட்ட
புல்லையும் கொள்ளையும்
தொட்டியில் தேக்கிவைத்த நீரையும்
சுவைக்கலாம் சுகிக்கலாம்.
இந்த விளிம்புகட்டிய வாழ்க்கையைத்
தாண்டி
சுயத்தைக் காணும்
சுதந்திரம் இல்லை.

முதுகில்
எவரையும் சுமக்காத பொழுதிலும்
என் கால்கள்
லாயத்தில்தான் கட்டப்பட்டிருக்கும்
மீண்டும் சுமப்பதற்கு.

என்னுள்
சுதந்திரக் காற்றை சுவாசிக்கும்
தீராப்பசி.
தடைகளை உடைக்கும்
தனல் வேகம், புயல் வேகம்.

ஓட்டம்
மற்றவர்களுக்காக மட்டும் அல்ல
எனக்கும்தான் உனக்கும்தான்.
இந்த எண்ணம்
சூரியனைப் பறித்துப் போட்டதுமாதிரி
எல்லாவற்றையும் எரித்து
எழுச்சியுற்று நின்றது.

இப்போது
லாயம் இல்லை
கடிவாளம் இல்லை
சவாரி இல்லை
சாட்டை இல்லை.

உன் முதுகில் உட்கார்ந்திருப்பது
வேறுயாருமல்ல.. நீ
என் முதுகில் நான்
நம்மை நாமே சுமக்கிறோம்
சுமையாக அல்ல சுகமாக.
எல்லைகளற்ற ஏகப்பெருவெளியில்
தொல்லைகளற்ற சுகவெளியில் பறக்கிறோம்.

நீரோடையில் கால்களை நனைத்த
மலைமுகடுகளில் பார்வையைப் பிணைத்த
வனாந்திரங்களின் பச்சைப் பசுந் தாவரங்கள்
மேனியைத் தழுவ
உயரஉயர ஏறினோம்
ஊர்மேல் இல்லை
உறவுகள் இல்லை
எல்லாம் கடந்து
நீயும் நானும்
காற்றும் வெளியுமாய் ஆகிப்போனோம்.



### நீ என்பதன்றி...

எல்லாவற்றையும் என்னிடம் தந்துவிட்ட
அற்புதம் நிகழ்ந்துவிட்டது.

தியானத்திலும் தவத்திலும்
பிடிபடாத பிரம்மம்
சிலகணநேர
பிரிய பரிமாற்ற நிகழ்வில்
தன் தரிசனம் தந்துவிட்டது.

இமைகளை விரித்து
என்னை முழுவதுமாக விழித்து
நான் உனது
கண்களின் பிரகாச வெள்ளத்தில்
நனைந்துகொண்டிருந்த
வேளையில்...
உயிர்வாழ்தலின் உன்னதம் புரிந்தது.


பிரபஞ்சப் பேருண்மையை
விளிம்புகட்டி விழிகளாக்கி
என்னையே பார்த்துக்கிடந்த
கண்களில் பயணித்தபோது
பெருவெளியில்
சிறுதுளியாகி சாதாரணமானேன்.

என்னை நீ
மனதிலும் மார்பிலும் வாங்கியதும்
இருளில் கொட்டிய மின்னல்கட்டிகளாகப்
பேரழகின் பிரமாண்டத் தெறிப்புகள்.
அதில் உன் உள்ளிருந்த உயிர்
தாகம் தணிந்தது.

இதோ
இன்றும் கண்களை மூடி
அன்று காட்சியில் கிடைத்த
ரூப அரூப வடிவங்களை
தாய்ப்பால் சுவைக்கும்
கள்ளமில்லாக் குழந்தைபோல
சுவைத்துக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு
இனி எதுவும் வேண்டாம்
இப்பொழுது
எல்லாம் அற்று
ஒன்று புதிதாய்.. நீ

# நுளம்பை விரட்ட....



இன்றைய நாளில் அனேகருக்குத் தலையிடியாய் இருக்கும் விடயம் நுளம்புத் தொல்லையென்றால் யாரும் மறுக்கவே மாட்டார்கள். அதிலும் உயிர் கொல்லி நோயான 'டெங்கு' அவ்வப்போது, ஆங்காங்கே உயிர்களைப் பலி கொள்ளும் நிலைமை தோன்றிய பின் இது பற்றிய கரிசனையும் அதிகமாயிற்று. எவ்வளவுக்கெவ்வளவு மக்களின் கரிசனை இந்த விடயத்தைச் சுற்றியிருக்கின்றதோ அதையே பிடிமானமாய்க் கொண்டு எண்ணற்ற வழிமுறைகள், செலவு கூடியதும், உடலுக்குப் பக்க விளைவுகளைத் தரக்கூடியதுமாய் வர்த்தகமயப்படுத்தப்பட்டுவிட்டன. ஆனால் இவை எவையுமே இல்லாமல் நுளம்புகளை விரட்டும் இயற்கை வழிகள் பல உள்ளன என்பதை நம்மில் பலர் மறந்து போய்விடுகின்றனர். இதோ நுளம்பினை விரட்டச் சில உபாயங்கள்.

வீட்டு வாசலிலும் கொல்லைப் புறத்திலும் வேப்பிலைக் கொத்துக்களை நிறையக் கட்டி வைத்தால் நுளம்பு வரவு குறையும்.

மாலை நேரத்தில் வீட்டுக்கு வெளியே வேப்பிலையை எரிக்கலாம். அந்தப் புகைக்கு நுளம்புகளை விரட்டும் சக்தி உண்டு. நாம் கடைகளில் வாங்கும் நுளம்பு விரட்டிகளில் (Coil) உள்ளது பெரும்பாலும் வேப்பிலை தான்.

நொச்சி இலையை வீட்டைச் சுற்றிக் கட்டி வைத்தாலும், அல்லது காய்ந்த நொச்சி இலையை எரித்தாலும் நுளம்பு அண்டாது.

நெருப்பில் ஓமம், கறிமஞ்சள் ஆகிய வற்றைப் போட்டால் வருகின்ற புகைக்கும்கூட நுளம்பு வராது.

கழிவு நீர் வெளியாகும் பாதை, குளியலறை, கழிப்பறை போன்ற இடங்களில் மஞ்சள் தூளுடன், கொஞ்சம் சுண்ணாம்பைக் கரைத்துத் தெளித்தாலும் நுளம்பு உற்பத்தியாகாது.

# ரஷ்யாவில் ஆரோக்கியக் குறைவுடன் குழந்தைகள்

ரஷ்யா ஒரு காலத்தில் அமெரிக்காவுக்கு நிகரான வல்லரசாகத் திகழ்ந்த நாடு. 1990களில் சோவியத் யூனியன் துண்டு துண்டாக உடைந்ததுடன் ரஷ்யாவின் பொருளாதாரமும், வாழ்நிலையும் கூடச் சிதறுண்டு போயின. ரஷ்யாவின் இன்றைய நிலையோ மிக மோசமானது. வறுமையின் பிடியில் ரஷ்ய மக்கள் சிக்கித் தவிக்கின்றனர். வேலை வாய்ப்பு இன்றிப் பசி பட்டினியால் வாடுகின்றனர். இந் நிலையில் ரஷ்யாவில் 60 சதவீத குழந்தைகள் ஆரோக்கியக் குறைவுடன் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. ரஷ்ய சுகாதார அமைச்சு நாடு முழுவதும் குழந்தைகள் ஆரோக்கியம் தொடர்பாக மேற்கொண்ட கணக்கெடுப்பின்போதே, மேற்சொன்ன அதிர்ச்சியூட்டும் புள்ளி விபரம் வெளியானது. உடல் ஆரோக்கியம் மற்றும் மனநல ரீதியில் அதிகம் பாதிப்புடன் ரஷ்யக் குழந்தைகள் காணப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கின்றன. வறுமை ஒரு நாட்டை எவ்வளவு தூரம் சீர்குலைக்கும் என்பதற்கு ரஷ்யாவின் இந்த மதிப்பீடு நல்லதோர் எடுத்துக்காட்டு.

செல்வாஸின் 7
சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 8c
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11- 01-2003
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
மொரட்டுவ வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்
லைலா அக்ஷியா
20/9, மடகிஸ்ஸ வீதி, ஹெரோதுடுவ, மொறட்டுவ.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கூன் விழாதபடி

வாழ்க்கையில் எல்லோரும் எப்போதுமே எல்லாவற்றிலுமே நிமிர்ந்து நிற்கவே விரும்புவார்கள். இருந்தும் எம்முடைய இந்த விருப்பத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்காத உடம்பு சில வேளைகளில் எம்மை குனிந்த நடையும் குனிந்த பார்வையும் என்றாக்கிவிடுவதும் உண்டு. இந்த 'கூன் விழுதல்' என்கின்ற விடயம் அதிகம் பொருட்படுத்தப்படாத ஒரு விடயமாகத் தோன்றினாலும் பாதிக்கப்பட்டவர்கள் அதையிட்டு நிறையவே உள் மனதினுள் குமைந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதே உண்மை. கூன்கள் பிறவிக் கூன், இடையிலே வந்த கூன் என இரு வகையில் ஒன்றாக இருக்கலாம்.

பிறவிக் கூனுக்கு விஞ்ஞானம் என்ன கூறுகிறதென்றால், இரத்த சம்பந்தம் உள்ள நெருங்கிய உறவு முறைத் தம்பதிகள் மூலம் பெறும் குழந்தைகள் மேற்கூறிய கூன் அல்லது பிறவி கூன் என்ற அங்கக் குறைவுடன் பிறக்கின்றனர் என்கிறது.

மறுபுறம் பார்த்தால் கருவுற்ற பெண்களுக்கு மருத்துவர்களால் கொடுக்கப்படும் அளவுக்கு அதிகமான அதிக சக்தி வாய்ந்த மருந்துகளால் கூன், குருடு, செவிடு போன்றவைகள் தோன்றலாம்.

சிலர் மருந்துக் கடைகளில் தாமாகவே கேட்டுப் பெற்றுக்கொள்கிற மாத்திரைகள் ஒரு பக்கம், ஒரு சிலர் உடனடியாக உபாதைகள் தீர வேண்டும் என எண்ணி வலிமையான மாத்திரைகளை நீங்களே பார்த்துக் கொடுங்க சார் என பார்மஸியில் கேட்டு வாங்குவதைப் பார்த்திருக்கிறோம். சில மருந்துக் கடைக்காரார்கள், இந்த மாத்திரை வேண்டாங்க! இன்னும் பவர்புல் மாத்திரை இருக்கு. அதை வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள்.

இப்படிப் பல காரணங்களால் கருவறையில் இருக்கும் குழந்தை பிறப்பதற்குள் பல முறை சிதைவிற்குள்ளாகி ஒரு வழியாக கூன், குருடு, செவிடு என்ற அங்கவீன குறைபாடுகளில் ஏதேனும் ஒன்றை அல்லது பலவற்றை சேர்த்தே பெறுகிறது.

சில நேரங்களில் காலன் கர்ப்பத்தில் இருக்கும் கருவோடு விளையாடி விடுவதால் எதிர்பாராத விபத்து, கர்ப்பப்பைக்கு ஏற்பட்டு, வளரும் குழந்தை கூனாகப் பிறக்கலாம்.

மதுவின் மயக்கத்தில் இறந்து விடக்கூடிய அளவிற்குக் கர்ப்பிணிகளை அடித்து கொடுமைப்படுத்தும் மகா பாவிகளாலும் குழந்தை கூனாகப் பிறக்கலாம் என விஞ்ஞானம் கூறினாலும் இவையனைத்தும் பிறவிப் பயன் என்று கூறும் அஞ்ஞானிகளும் உண்டு.

பிறவியில் அல்லாது இடையே தோன்றும் கூன் என்பது குழந்தை பிறந்தவுடன் முழுவதும் நலமாகத் தோற்றமளித்துப் பின்பு வளரவளரச் சிறிது சிறிதாகக் கூன் விழுந்து விடுவது தான்.

பிறப்பில் நன்றாக இருந்தது. பின் ஏன் வளர்ப்பில் வளைந்துவிட்டது.

பிறந்த குழந்தையை எப்படி தூக்க வேண்டும்? என்பதை ஒரு தாய்க்கு சரியாகப் புகட்ட வேண்டும். பால் கொடுக்கும்போது குழந்தையை எந்த விதம் தூக்க வேண்டும்? முழுமையான வளர்ச்சியடைவதற்கு முன்பே இடுப்பில் உட்கார வைக்கக் கூடாது.

தாய்ப் பால் குழந்தைக்காக மட்டுமே சுரக்கிறது. இது குழந்தைக்கு மட்டுமே சொந்தம். அது குழந்தைக்கே போய்ச் சேர வேண்டும் எனத் தாய் நினைத்தல் வேண்டும். இல்லையெனில் சத்துக் குறைபாடுகளின் காரணமாகவும் கூன் ஏற்படலாம்.

சரி, குழந்தைப் பருவம் தாண்டி விட்டது என்றால், அடுத்துப் பள்ளிப் பருவம். அதில் குழந்தைகள் படுத்துக் கொண்டே படித்தல், ஒரு பக்கம் சரிந்து படுத்தல், தரையில் புத்தகத்தை வைத்துவிட்டு முதுகை முழுவதும் முன் பக்கம் வளைத்துப் படித்தல் போன்றவை வளரும் முதுகெலும்பை வளைத்து விடுகிறது. இல்லையெனில் முதுகில் மாட்டும் புத்தக மூடையால் பின்புறம் வளைந்துவிடுகிறது.

அடுத்து 'ரீன் ஏஜ். பருவத்திலே உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி இரண்டுமே அதிகம். பெண்களுக்கு மார்பகங்கள் வளரும்போது வழக்கத்துக்கு மாறாகச் சற்றுப் பெரிதாய் வளரும்



போது அவர்களாகவே நெஞ்சுப் பகுதியைக் குறுக்கி முன் பக்கமாக வளைந்து நடக்கத் துவங்கிவிடுகின்றனர். இதனால் கூன்விழ ஆரம்பிக்கிறது.

இதேபோன்று, மார்பக வளர்ச்சியே சிறிதும் இல்லாத பெண்களும் தாழ்வு மனப்பான்மையின் காரணமாக நெஞ்சின் முன் பகுதியை குவித்து குனிந்து நடைபோட்டுக் கூனை வளர்த்துவிடுகின்றனர். சிலர் அளவுக்கு அதிகமான உயரத்துடன் திடீரென வளர்ந்துவிடும் போது அதிக உயரத்தின் காரணமாக, எப்போதும் ஒன்றின் மீது சார்ந்து வளைந்தே நிற்பவர்கள் கூன் போட்டுக் கொள்கிறார்கள். இது பெண்களை விட ஆண்களுக்கு அதிகம்.

அடுத்து வேலைக்குப் போகும் பருவம். தான் அமரும் இருக்கையின் அமைப்பைப் பொறுத்தே கூன் விழுவதும், விழாததும் அமையும். ஒன்று, அதிக நேரம் ஒரே நிலையில் குனிந்தோ வளைந்தோ உட்காருபவர்களுக்குக் கூன் விழுகிறது. குறிப்பாகத் தட்டெழுத்தாளர், ஓவியர், கணனியில் பணி புரிபவர்கள் இந்த வரிசையில் அடங்குவர்.



இவற்றையெல்லாம் தவிர பிற காரணங்களும் உண்டு. அவைதான் அனைவரையும் தாக்கக்கூடிய பொதுவான காரணங்கள். காசநோய், அதிக வேலை, சிபிலிஸ், வைட்டமின்-டி குறைவு, இரத்தச் சோகை போன்றவை

### அதிக வேலை

கல், மண்ணை வெட்டியெடுப்பவர்கள், அதிக அளவு பாரம் தூக்குபவர்கள், கடின உழைப்பினால் பின் முதுகெலும்பு தேய்வதன் காரணமாக அவர்களது முதுகு வளைந்துவிடுகிறது.

### காசநோய்

காசநோய்- எலும்புருக்கி- டி.பி. எனப்படும் இந் நோய் சுவாச உறுப்பைத் தாக்கும் என அனைவரும் அறிவர். ஆனால் எலும்பையும் தாக்கி முதுகெலும்பை வளைத்துவிடுகிறது.

### சிபிலிஸ்

இந்த நோயில் எலும்புகள் கரைந்தேவிடுகிறது. இதனால் எலும்புகளின் நீளம் குறைந்து விடுகின்றன. ஒழுங்கீனமான உருவமைப்பு பெறுகிறது.

### வைட்டமின் மற்றும் இரத்தச் சோகை

முக்கியமாக வைட்டமின்-டி வகைச் சத்து மற்றும் கல்சியம் சத்துக் குறைவினாலும் இரும்புச் சத்து, விட்டமின்-சி, போன்றவைகள் குறைவதாலும், முதுகெலும்பு முழுமையான வளர்ச்சியடைந்திருந்தாலும் வலுவின்றி மென்மையாக வளையும் எலும்புகளாக மாறிவிடுவதும் கூன் விழுவதற்கு ஒரு காரணமாகும்.

### கூன் உடலில் எந்தப் பகுதியைத் தாக்குகிறது?

முக்கியமாக முதுகுப் பகுதி. கை, கால், எலும்புகள் வளைந்தால் அதைக் கூன் என்று கூறுவதில்லை. ஆனால் முதுகெலும்பு வளைந்தால் அதை மட்டும் கூன் என்கிறோம். காரணம், முதுகெலும்பின் கட்டமைப்பு அப்படி. சிறிய சிறிய பிஸ்கட்டுகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கியவாறு செய்து நடுவில் ஒரு துளை செய்து வைத்தாற்போன்றதுதான் இதன் அமைப்பு.

இதன் நடுவிலுள்ள துளை வழியே தண்டு வடம், தடம் புரளாதிருக்க, சுற்றிலும் முதுகெலும்பு சூழ்ந்திருக்க, இவை செங்கல் வைத்தாற்போன்று அடுக்கப்பட்டுள்ளது.

இவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| கழுத்து முள்ளெலும்பு | - 7 |
| நெஞ்சு முள்ளெலும்பு | - 12 |
| லும்பார் முள்ளெலும்பு | - 5 |
| சேக்ரல் இடுப்பு எலும்பு | - 5 |
| வால் முள்ளெலும்பு | - 4 |
| மொத்தம் | - 33 |

இதன் இயல்பான வடிவமைப்பு நீளவடிவில் எழுதினா ஆங்கில எஸ் போன்றது. அதற்கும் அதிகமாக வளைந்தால் அதன் பெயர் கூன் என்றாகி விடுகிறது.

இனி இந்தக் கூன் எத்தனை விதமாக இருக்கிறது தெரியுமா?

முதுகெலும்பு முன் பக்கம் வளைந்து இருந்தால் முன் பக்கக் கூன். பின் பக்கம் வளைந்திருந்தால் பின் பக்கக் கூன். வலப் பக்க வளைவு- வலது பக்கக் கூன். இடப் பக்க வளைவு- இடப்பக்கக் கூன். இவையெல்லாம் நீங்கள் எப்படி உட்கார்ந்து பழகுகிறீர்களோ அதற்கேற்றாற் போல் உங்கள் வடிவம் அமையும்.

இனி, கூனில் இருந்து விடுபட, இளமையில் கல் என்னவென்று?

நேராக உட்கார்ந்து படிப்பதெப் படி என்று!

படி படி

நேராக உட்கார்ந்து படி! நான் சொன்னபடி படி!! கூன் போடாதபடி படி!!!

வெட்கத்தினால் அதிகம் நாணிக் குனியாதபடி, வேலை அதிகமாகி வியர்த்து விடாய்த்து விடாதபடி, முதுகெலும்பில்லாதவன் என்று கூறாதபடி, பயத்தினால் பணியாதபடி, பக்தியாயினும் அளவுக்கு மீறிக் குனியாதபடி, மருந்தை அளவாக அருந்தும்படி, இப்படி, எதிலும் அளவாக செயற்படும்படி, இதைப் படி கடைப் பிடி அப்போது கூன் விழாதபடி வாழலாம்.



பெண்ணென்று பூமிதனில் பிறந்து
-விட்டால்- மிகப்
பீழை யிருக்குதடி தங்கமே தங்கம்.
பண்ணென்று வேய்ங்குழலில் ஊதி
-வந்திட்டான்- அதைப்
பற்றி மறக்குதில்லை பஞ்சை யுள்ளமே.
சுப்பிரமணிய பாரதியார்-



**பாப்பா முரசு சிறுகதை**

# சரித்திரத்தில் ஒருநாள்



**சி**னிமாக்களில் கதாநாயகனோ, கதாநாயகியோ மாறுவேடம் போட்டுத் தப்பிச் செல்லும் காட்சிகள் அடிக்கடி இடம்பெறும். அக் காட்சிகளைப் பார்க்கும்போதே இரசிகர்கள் விறுவிறுப்பு அடைந்துவிடுவார்கள். நிஜமாகவே மாறுவேடம் போட்டு எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுச் செல்லும் காட்சிகள் வரலாற்றில் நிறையவே இருக்கின்றன.

இது 1680ம் ஆண்டளவில் நடந்தது.

ஜோத்பூர் மன்னர் ஜஸ்வந்த்சிங். அவரிடம் மந்திரியாக இருந்தவர் துர்க்காதாஸ். ராஜபுத்திர இனத்தைச் சேர்ந்த ஜஸ்வந்த்சிங்குக்கு இரண்டு மனைவிகள்.

இரண்டுபேரும் கர்ப்பிணியாக இருக்கும்போது மன்னர் மாரடைப்பில் இறந்து போனார். பின்பு இரண்டு ராணிகளும் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். ஒரு குழந்தைக்கு அஜித்சிங் எனப் பெயர் சூட்டினார்கள். இன்னொரு குழந்தை இறந்து போனது.

அஜித்சிங்கை துர்க்காதாஸ் வளர்த்தார். குழந்தையை ஜோத்பூர் மன்னரின் வாரிசாக முறைப்படி அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்தார். ஏன் என்றால் அப்போது டெல்லியில் அவுரங்கசீப்பின் ஆட்சி நடந்தது. அவரது அனுமதி கிடைத்தால் தான் அஜித்சிங் ஜோத்பூருக்கு மன்னராக முடியும்.

துர்க்காதாஸ், குழந்தை அஜித்சிங், ஜஸ்வந்த் சிங்கின் இரண்டு மனைவிகள்... இப்படிப் பலர் சேர்ந்து டெல்லி சென்று அவுரங்கசீப்பைச் சந்தித்தார்கள். அவரோ குழந்தையை இங்கே விட்டுவிட்டு ஓடுங்கள். நீங்கள் வைத்த கோரிக்கையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது, என அறிவித்து விட்டார்.

மனம் நொந்துபோய் துர்க்காதாஸும் அவரது குழுவினரும் குழந்தையுடன் டெல்லியில் ஒரு மாளிகையில் தங்கி இருந்தனர். அங்கிருந்து அவர்கள் தப்பிப் போகக் கூடாது என்பதற்காக மாளிகையைச் சுற்றி அவுரங்கசீப் கடுங் காவல் போட்டுவிட்டார்.

அடுத்த சில நாட்களிலே துர்க்காதாஸ், அஜித்சிங் உட்பட்ட அனைவரும் தப்பித்து ஓடிவிட்டார்கள்! எப்படி?

வெளியே உள்ள ஒரு ஏழையின் குழந்தையை மாளிகைக்குள் அழைத்துச் சென்றனர். அஜித்சிங்கின் ஆடம்பர உடைகளை அந்தக் குழந்தைக்கு அணிவித்தார்கள். அதனை உப்பரிகையில் ஏற்றி வைத்தனர்.

அஜித்சிங் ஒரு ஏழைக் குழந்தை போல் ஆனான். அவனது அம்மா துப்பரவு செய்யும் பெண்போலத் துடைப்பத்துடன் வெளியேறினாள். தாயும், மகனும் தப்பிச் செல்ல, அடுத்து ஒவ்வொருவராக மாறுவேடத்தில், கம்பி நீட்டிவிட்டார்கள்.

மன்னரோ துர்க்காதாஸும், குழந்தையும் ராணிகளும் மாளிகையில்தான் இருக்கிறார்கள் என்று நினைத்துக் காலத்தை ஓட்டிவிட்டார்.

எல்லாரும் தப்பிச் சொந்த ஊர் போய்ச் சேர்ந்து பல நாள் ஆன பின்பு தான் மன்னருக்கே அவர்கள் தப்பித்துப் போன விடயம் தெரிந்தது.


# விடுகதைகளும் விடைகளும்


1. கடிப்பவனுக்கு கடிபடுபவன் காவல் அவர்கள் யார்?
2. பச்சை நிறத்தான் சிவப்புக்கு மாறிய பின்னும் வீரியம் குறையவில்லை அவன் யார்?
3. வெளிச்சத்தைச் சுமந்தபடி இருட்டைச் சிதறடிப்பான் அவன் யார்?
4. நன்றியில் இவன் வாலாட்டுவான் கோபத்தில் அவன் வாலாட்டுவான் அவர்கள் யார்?
5. உயரத்தில் வந்த மின்சாரம் ஒப்பற்ற மின்சாரம் சிலநேரம் கண்ணையும் பறிக்கும் மின்சாரம் அது என்ன?
6. தட்டினால் விறகு எரித்தால் சாம்பல் அது என்ன?
7. கோபம் வந்தால் மட்டுமே படமெடுப்பான் அவன் யார்?
8. பார்க்கப் பஞ்சு.. சாப்பிட்டால் இனிக்கும் நெஞ்சு அது என்ன?
9. வானத்துக்கும் பூமிக்கும் ஊடே ஒரே கம்பி அது என்ன?
10. வெட்டினாலும் வளரும் மரமல்ல அது என்ன?

**விடைகள்.**

1. பற்கள்-உதடுகள்
2. மிளகாய் 3. மின்மினிப்பூச்சி
4. நாய்-பூனை 5. மின்னல்
6. சாணம் 7. நாகபாம்பு
8. பஞ்சு மிட்டாய் 9. மழை
10 தலைமுடி

# பாம்புக்கு காது கேட்குமா?







**பா**ம்புகள் ஒரு வருடத்தில் நாலைந்து தடவை தங்கள் தோலை உரித்துக் கொள்கின்றன. பாம்புகளுக்குக் காதும், கண் புருவமும் கிடையாது. அவை கேட்கும் சக்தியற்றவை.

மகுடி ஊதும்போது அந்த இசைக்கேற்ப நல்ல பாம்பு ஆடுகிறது என்று சொல்லப்படுகிறது. இது தவறு. மகுடி ஊதுபவரின் அசைவுக்கேற்ப பாம்பு தன்னைத் திருப்பிக் கொள்வதையே பாம்பு ஆடுவதாக நினைக்கிறார்கள்.

பாம்பின் தலை வெட்டுப்பட்ட பிறகும், அதன் இதயம் பல மணி நேரத்துக்குத் துடித்தபடி இருக்கும். பாம்பானது தன் வாயின் அளவை விடப் பலமடங்கு பெரிய இரையைக் கூட விழுங்கிவிடும்படி அதன் தாடையமைப்பு அமைந்துள்ளது.

# வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:- உலகின் உயரமான தொலைத்தொடர்புக் கோபுரங்கள்**

| கோபுரம் | நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு | அமைவிடம் | உயரம் மீற்றர் | அடி |
|---|---|---|---|---|
| 1. சி.என். கோபுரம் | 1975 | ரொறென்ரோ, கனடா | 555 | 1,821 |
| 2. ஒஸ்ராங்கினோ கோபுரம் | 1967 | மொஸ்கோ, ரஷ்யா | 537 | 1,762 |
| 3. கிழக்கத்திய முத்து ஒலிபரப்புக் கோபுரம் | 1995 | ஷங்காய், சீனா | 468 | 1,535 |
| 4. மெனாறா தொலைத் தொடர்புக் கோபுரம் | 1996 | கோலாலம்பூர், மலேசியா | 421 | 1,381 |
| 5. ரியான்ஜின் வானொலி, தொலைக்காட்சிக் கோபுரம் | 1991 | ரியான்ஜின், சீனா | 415 | 1,362 |
| 6. மத்திய வானொலி, தொலைக்காட்சிக் கோபுரம் | 1994 | பீஜிங், சீனா | 405 | 1,328 |
| 7. தொலைக்காட்சிக் கோபுரம் | 1983 | ரஸ்கென்ற் உஸ்பெகிஸ்தான் | 375 | 1,230 |
| 8. விடுதலைக் கோபுரம் | 1998 | குவைத் நகரம், குவைத் | 372 | 1,220 |
| 9. அல்மா-அத்தா கோபுரம் | 1983 | கஸகஸ்தான் | 370 | 1,214 |
| 10. தொலைக்காட்சிக் கோபுரம் | 1969 | பேர்லின், ஜேர்மனி | 365 | 1,198 |

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.01.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **478**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 476

பரிசுக்குரியவர்:
**எஸ். வருன்குமார்,**
தலப்பத்தன தோட்டம், கெட்டிபுலா போஸ்ட்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **ரா. பிரியங்கா,** 95/23, அலஸ் வீதி, நீர்கொழும்பு. | **கு. சந்தீப்,** விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. |
| **அய்ஷா ருகையா,** 907, நீரெல்ல, அக்குறணை. | **எஸ்.ஏ. ஐஸானாஸ்,** கல்பிட்டி வீதி, மு.ம.வி. குறிஞ்சிப்பிட்டி. |
| **எம்.எஸ். துசான்,** தருமதூத்த கல்லூரி, பதுளை. | **ஞா.சர்வீனா** 993, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| **பி. மிதுன்ராஜ்,** 45, வோட்டர் பீல்ட் டிரைவ், நுவரெலியா. | **எம்.டி.எம். இஸ்ஸத்** றோயல் கல்லூரி, கொழும்பு-07. |
| **ஜெ. ரிஸ்வான்,** பி.எம்.பி. லேன், கிண்ணியா-03. | **லோ. மனோஜ் டிஸான்,** கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |


# இந்த வாரப் புதிர்



இந்த கேக்கை வெட்டும் போது இரண்டு பக்கமும் சமமான கூட்டுத் தொகை வருமாறு வெட்டுங்கள் பார்க்கலாம்.

# அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# "குருத்தோற்றம்"

கேள்விப்பட்டதை அதிபரிடம் முறை யிடுவதற்கு முன்னதாக நம்பிக்கையான அந்த ஆசிரியையுடன் கலந்து பேசி ஒரு முடிவெடுத்தால் என்ன? மனதிற்குள் சங்கடமாக இருந்தாலும் அதன் விளைவுகள் பின்னர் விபரீதமான செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்து விடக் கூடாது என்ற அச்ச உணர்வு அவளுக்குள் மேலாகவே இருந்தது.

"டீச்சர்! ஒரு விசயம் சொல்லட்டா...?"

"ம்.."

"பிளீஸ்! யாரு கிட்டையும் சொல்லிடக் கூடாது. நன்றாகவே யோசித்து நான் எடுத்த முடிவு இது. சரியானதா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்." வழக்கத்தையும் விட வார்த்தைகளில் சற்று அதிகமான அழுத்தமும் அவசரமும் தென்பட்டது. தெளிவாகவே புரிந்து கொண்டாள்.

"சொல்லமாட்டேன் சொல்லுங்க..."

"இனிமேல் ஏ.எல். வகுப்பிற்கு பாடம் நடாத்த இஸ்டப்படல. அதிபரிடம் சொல்லப் போறன். மாற்று ஏற்பாடுகள் என்று ஏதும் வந்தால் நீங்கதான் 'ஹெல்ப்' பண்ணவேண்டும்."

"ஐய்யோ! எனக்கு ஏற்கனவே லோட் அதிகம். இதில் இது வேறயா? சரி. இப்படித் திடீரென்று முடிவெடுப்பதற்குக் காரணம்...?"

"........."

"என்கிட்ட சொல்லுங்க. எதுவென்றாலும் ரகசியம் பாதுகாக்கப்படும்." முகத்திற்கு நேரே மெல்லிய புன்னகையுடன் சொல்லி முடித்தாள்.

"படிப்பிக்கிறது ஒன்றும் கஸ்டம் இல்லை. எல்லாம் தெரிந்த விடயங்கள்தான். ஆனால்..."

"வெளிப் பிரச்சனைகள் ஏதும்..?"

"அப்படியொன்றும் இல்லை. டக்கென்று சொல்லவும் தயக்கமாக இருக்கு. ஒருவேளை விளையாட்டாகவோ அல்லது நான் புரிஞ்சு கொண்டது தவறாக இருக்குமோ என்றும் பயமாக இருக்கு டீச்சர்."

"பட்டென்று போட்டு உடைத்தால்தானே நானும் ஒரு முடிவைச் சொல்லிவிட முடியும்."

அந்த...... மாணவனின் பெயரைச் சொன்னதும் சற்று யோசனையை வேறு பக்கமாகத் திருப்பியிருந்த சக ஆசிரியை சட்டென்று திரும்பி அவளது கண்களை ஆழமாகவே ஊடுருவிக் கொண்டிருந்தாள். உடம்பு முழுவதும் சிறிய நடுக்கத்துடன் வியர்த்துக்கொள்ள மிகுந்த பதற்றத்துடன் வார்த்தைகள் தொடர்பற்ற முறையில் சகல விடயங்களையும் சொல்லி முடித்து, பின்னர் கைக்குட்டையினால் முகத்தை அழுத்தமாகவே துடைத்துக் கொண்டாள்.

"டீச்சர்! பிரண்ட்ஸ்மார்கள் சில வேளைகளில் ஏதும் தனிப்பட்ட விரோதம் காரணமாகச் சொல்லலாம். எதற்கும் நீங்க ப்ரீயான நேரத்தில சம்பந்தப்பட்ட மாணவனை அழைத்து நாசூக்காக நேரடியாகவே கேட்டால் என்ன யாருக்கும் எதுவும் தெரியாத மாதிரி. ஏதுமில்லையென்றால் பிரச்சனை அத்தோட முடிஞ்சிடும்."

"கேட்டேன் டீச்சர்"

பளிச்சென்று வார்த்தையைக் கேட்டதும் சக ஆசிரியைக்கும் சற்று உதறல் எடுக்கத் தொடங்கியது. ஒருவேளை சந்தேகப்படுகிற விசயம் உண்மைதான் என்று அந்த மாணவன் சொல்லியிருந்தால்...

"என்ன பதில்..."

"வழக்கம் போலவே மௌனம்தான் டீச்சர். ஆனால் அப்படியொன்றும் இல்லை என்பதற்கான பாவனைகள் எதுவும் தெரியவில்லை. இருந்தும் அப்படி எதுமில்லை என்ற உறுதியை உணர்த்தக் கொண்டதன் பின்னர் நடந்து கொண்டதுதான்..."



"என்ன டீச்சர்! எல்லாத்திலும் புதிர் போட்டுத்தான் பேசுறீங்க?"

"ஆம் டீச்சர்! அந்தச் செயல் எனக்கு நல்லதாகவே படவில்லை. மனதிற்கு வித்தியாசமாகவே படுகுது. எல்லாம் முடிஞ்ச பிறகு மெல்லிய சிரிப்புடன் 'பாய் டீச்சர்' என்று சொல்லிக்கொண்டு ஏன் போக வேண்டும்...?"

"டீச்சர்! நான் ஒரு விசயம் சொன்னால் கோவிச்சுக்க மாட்டீங்களே...?"

"சொல்லுங்க."

"இந்த விசயம் எனக்கு முன்னமே தெரியும்."

அந்த வார்த்தைகள் 'பளார்' என்று முகத்தில் அறைந்தது போலிருந்தது. சொல்லாமல் இருந்ததற்கான காரணம் என்ன....?

"அப்பவே சொல்லியிருக்கலாம் தானே. வயசுல மூத்த நீங்கதான் இந்த மாதிரியான விசயங்களுக்குத் தீர்வைச் சொல்ல வேண்டும். தப்பு செய்து போட்டீங்களே டீச்சர்."

"பதற்றப்படாதீங்க. இந்த ஸ்கூலில இது புது விசயமாக இருந்தாலும் சில இடங்களில நடக்கிறதும் நடந்ததும்தான். காலப்போக்கில எல்லாம் மாறிடும். அதுதான் சொல்லிப் பெரிதாக்க விரும்பவில்லை. தவிர இது உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வந்து பின்னர், விசயம் அப்படி ஒன்றுமில்லையென்றால் நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு இந்த இடத்திற்கு வரகூடியதாக எனக்குத் தகவல் சொன்னவர்களைக் கடுமையாகப் பேசிவிட்டு, இனிமேல் இவ்வாறானவர்களுடன் பழகும்போது அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் 'அட்வைஸ்' சொன்னேன். சகலதையும் மௌனமாகக் கேட்டுக் முடியும்."

"........."

"அழாதீங்க. அந்தப் பையனை விட உங்களுக்குப் பத்து வயசு கூடவாக இருக்கலாம். ஆனால் உங்கள் தோற்றமும், அலங்காரமும் உங்களை நல்லாவே இளமையாகக் காட்டுது. சாதாரணமாகக் கேள்விப்படுறவங்க டக்கென்று சந்தேகப்பட இடம் இருக்கு. இந்த விசயத்தை நீங்கதான் மிகவும் ரகசியமா, நாசூக்காகத் தீர்க்க வேண்டும்."

"அப்படியென்றால் இடமாற்றம் பெற்றுச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை."

"அது சரியான தீர்வாக இருக்காது டீச்சர். சில வேளைகளில் அதுவே ஆரம்பமாகவும் போயிடலாம். சகல காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கு. முதல்ல நாம அதைப் புரிஞ்சுக்கத் தெரிஞ்சுக்கணும். நீங்க தப்பாக நினைக்காவிட்டால்"

"சொல்லுங்க..."

"விசயம் உண்மையோ இல்லையோ நாமளும் இதில் எந்த வகையில் தொடர்புபட்டிருக்கோம் என்ற விசயத்தை அமைதியான நேரத்தில சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது நம்மோட கடமை டீச்சர். உங்களுக்குப் புரியுமென்று நினைக்கிறேன்." மெல்லிதாகவே சிரித்துக் கொண்டாள்.

பதிலுக்குச் சிரித்துக்கொண்டு நாற்காலியை விட்டு எழுந்து கைக்குட்டையினால் ஒரு முடிவுடன் முகத்தை அழுத்தமாகவே மீண்டும் துடைத்துக்கொண்டாள்.

மறுநாள்-

"டீச்சர்! இன்னைக்கு ஆச்சரியமாக இருக்கே..? எப்பவும் சும்மா நடிகை மாதிரி ஜெகஜோதியா வார நீங்க இன்னிக்கு... சாச்சே! நல்லாவே இல்லை கிழவியாட்டம்..." சக ஆசிரியர் கேலி செய்துவிட்டுச் செல்வதைக் கண்டு மனதிற்குள் சிரித்துக்கொண்டாள் நிம்மதியுடன்.

**தி. இளையவன்-திருகோணமலை**

---

# தாய்மை

மேற்கு வானம் சூரியனின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பது போல், வாசுகியும் தன் அன்புக் கணவனின் வருகைக்காய் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள். முன்பு எப்போதும் இல்லாதவாறு அன்று வாசுகியின் கணவன் கண்ணன் தாமதமாக வீட்டுக்கு வந்தான். அவனது வருகை கண்டு மகிழ்ந்த வாசுகி தேநீர் கொண்டு வந்து கொடுத்தவாறு,

"நான் கேட்டது வாங்கி வந்திருக்கீங்களா?".... என அவள் மெதுவாகக் கேட்டு முடிப்பதற்குள், "இண்டைக்கு கொஞ்சம் நிம்மதியா என்னை இருக்க விடு! ஏன் லேட்?... என்னாச்சு?... என்று கேட்காம என்ன வாங்கி வந்திருக்கீங்க... எண்டு மட்டும் கேட்கத் தெரியும்"

என அவள் மீது சீறிப்பாய்ந்து எழுந்து சென்றான் கண்ணன். ஆம்! அவன் பல சிக்கல்களிலே அகப்பட்டுக் கொண்டதனால், கொஞ்ச நாட்களாக அவளோடு எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டுக் கொண்டிருந்தான். நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த வாசுகி இவை யாவற்றையும் தாங்கிக் கொண்டாள். வாசுகி உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் போது, அவளது அழகில் மயங்கிய கண்ணன் அவளைத் துணைவியாய் அடைய ஆசைப்பட்டான். எனவே வாசுகியின் விருப்புடனும் அவளது பெற்றோரது விருப்புடனுமே இவர்களது திருமணம் இனிதாக நடந்தேறியது. இப்போது, இரண்டு வருடங்கள் பூர்த்தி ஆகும் நிலையில் வாசுகி தாயாகும் பாக்கியத்தைப் பெற்றிருந்தாள்.

இது வரையில் அவள் ஆசைப்பட்ட பொருட்களெல்லாம் வாங்கிக் கொடுத்த கண்ணன், (கணவன்) இன்று அவள் கேட்ட போது, ஆத்திரப்படுவதிலும் நியாயம் உண்டு என்பதை உணர்ந்து மௌனமானாள்.

கண்ணன் தனியார் நிறுவனமொன்றிலே பொறுப்பு மிக்க பதவியை வகிப்பவன். அத்தோடு வயதான தன் பெற்றோர், படிக்கின்ற தங்கை, வீட்டுப் பொறுப்பு மற்றும் தொழில் விடயம் என்பன அவனுக்கு நெரிசலை ஏற்படுத்தியதால், மிகவும் குழம்பிப் போயிருந்தான்.

இதனால்தான் அவன் தன்னோடு எரிந்து விழுகின்றான் என்பதனை உணர்ந்து கொண்டாள் வாசுகி. இது எல்லா கணவன் மனைவி இடையேயும் ஏற்படும் சாதாரண விசயம்தான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அன்றிரவு வாசுகிக்கு இடுப்பு மெதுவாக வலிக்கத் தொடங்கியது. பின் வலி அதிகமானதால், வலி தாங்க முடியாமல் வேதனையில் துடி துடித்தாள். இவள் நிலையறிந்த கண்ணன் கலங்கிப் போய் உடனடியாக வைத்தியசாலைக்கு வாசுகியைக் கொண்டு சென்றான்.

"ஐயோ! வலி தாங்க முடியல... நான் சாகப்போறன். என்னய சாகடியுங்க..." என வேதனை தாங்க முடியாமல் வாய்விட்டுக் கதறி அழுதாள் வாசுகி. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலட்சியமுண்டு. இவளோ "தாய்மை" எனும் இலட்சியத்தை அடைய வேதனையுடன் போராடிக் கொண்டிருந்தாள். உலகின் சுகமான வேட்கையில் சுமையை ஏந்தியவளாய் துடி துடித்துக் கொண்டிருந்தாள். அவனியில் சஞ்சரிக்கப் போகும் புத்துயிருக்காக வலியினால் வாதாடிக் கொண்டிருந்தாள். இவளது நிலை கண்டு கண்ணனை அறியாமலே அவன் கண்கள் குளமாகின.

தான் தான் சுமையாளி; தனக்குப் பொறுப்புகள் அதிகம்; நிம்மதி கொஞ்சம் கூட இல்லையென்று தவித்துக் கொண்டிருந்தவனுக்கு, வாசுகி படும் பாடு கண்டதும் அனைத்தும் ஒரு நொடியில் பறந்தன. "உலகிலுள்ள கடும் வேதனையைத்தான் இவள் இப்போது அனுபவிக்கின்றாள்" என்பதை உணர்ந்தவனாய், அவனுள்ளம் அவ்வேளை இறைவனை நாடிச் சென்றது.

"கடவுளே!... என் மனைவிக்கு எந்த ஆபத்தும் வரக் கூடாது. நல்லபடியா குழந்தைய பெத்தெடுக்கணும். நீதான் அருள் புரியப்பா..." என அவ்விடத்தில் இறைவனை வேண்டிக் கொண்டான்.

வாசுகியை லேபர் ரூமிற்குள் அழைத்துச் சென்றனர். சென்று பதினைந்து நிமிடங்களின் பின் வந்த நேர்ஸ், "விஸ் யூ ஓல் த பெஸ்ட் மிஸ்டர் கண்ணன்! உங்களுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கு. இப்போ நீங்க உங்க மனைவியையும் குழந்தையையும் பார்க்கலாம்." எனக் கூறிச் செல்ல முன்னே கண்ணன் வாசுகியை நோக்கி விரைந்தான். அப்போது குழந்தையின் அழுகுரல் கேட்டு ஆனந்தக் கடலில் மூழ்கியவனாய் வாசுகி படுத்திருக்கும் கட்டிலை நாடினான். இது வரையில் பீதியில் படபடவென அடித்துக் கொண்டிருந்த அவனுள்ளம் வாசுகியைக் கண்டதும் சந்தோச வானில் சிறகடித்தது. அவனது முழுக் கவனமும் குழந்தையிலல்ல. ஓர் சாதனை புரிந்து சோர்ந்து படுத்திருக்கும் அன்பு மனைவியையே உன்னிப்பாய் நோக்கியது.

இது வரையில் அவன் தொழில், கடமை, பொறுப்பு என்ற வட்டத்தினுள்ளே வாழ்ந்தான். ஆனால், இப்போதில் இருந்து அவனது வாழ்விலே புதியதொரு தென்றல் வீச ஆரம்பித்துள்ளதை எண்ணிச் சந்தோசப்பட்டுக் கொண்டான். அவன் தந்தையானதையிட்டு ஆனந்தம் கொண்டான். இவ்வாறு பல சிந்தனைகளைத் தன் மனதில் சுழற்றிக் கொண்டு வாசுகியை அவன் கண்கள் நோக்கின.

எத்தனையோ கஸ்டங்களையும் வேதனைகளையும் சுமையாக ஏற்காமல் சுகமாக ஏற்றுக் கொண்டு இப் பூமிக்கோர் புத்துயிரைத் தோற்றுவித்த அந்தத் தியாக உள்ளத்தை அவன் அனுதாபத்தோடு பார்க்காமல், பெருமையுடன் உற்று நோக்கினான்.

அப்போதுதான் அவன் "தாய்மை" என்றால் என்ன? என்பதைப் பூரணமாக விளங்கிக் கொண்டான். பெண்மைக்கு முன்னால் ஆண்மை வெறும் தூசுதான் என்பதை எண்ணிக் கொண்டான். வாசுகியின் தலையைத் தடவியவாறு, "எப்பிடிம்மா இருக்கே?"... என அமைதியான வார்த்தை பொழிய, "நான் நலம்" என்பது போல் கண்களால் கருணையுடன் பதிலளித்தாள் வாசுகி. பின் குழந்தையை நாடிய கண்ணன் அதை அள்ளியெடுத்து அணைத்தவாறு, "நீயும் இப் பூமியில் ஓர் சாதனை படைக்கப் பிறந்தவள்தான்"... எனக் கூறித் தன் குழந்தைக்கு முத்தமழை பொழிந்தான்.



**பா.சுபாஷினி- பொத்துவில்**

# திரும்பும் அம்புகள்

## அங்கம் 01

**‘எ**து நடந்தாலும் விதி என்கிறோம், ஆனால் அந்த விதியை நாம்தாம் மறைமுகமாய் எழுதுகிறோம்!’

வேணுவின் அந்த மொபெட் வாகனம் ஓடும்போது அநியாயத்துக்கு சப்தம் கேட்டது. நூறு எலிகள் அதனுள் புகுந்து கொண்டு ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டு பிராண்டிக் கொள்கிற மாதிரியெல்லாம் கூட அவனுக்குத் தோன்றியது.

மெக்கானிக்கிடம் விட்டு ஒரு சர்வீஸ் பார்க்கச் சொல்லலாம் தான். ஆனால் அவன் ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே ‘இந்த வண்டியை விட்றுங்க வேணு சார்’ என்பான்.

அப்படியே ‘எனக்குத்தெரிந்து முப்பது வருஷமாக ஒரு மொபெட்டை யாருமே பயன்படுத்தியதில்லை கின்னசுக்கு எழுதிப் போடலாம்!’ என்பான்.

அதை கோபத்தோடு சொன்னால் கூட பரவாயில்லை. ஒரு மாதிரி சிரித்துக்கொண்டே சொல்வான்.

அந்தச் சிரிப்பு வேணுவைக் கீறும். கிழிக்கும்.

எனவேதான் ஓடும் வரை ஓட்டும் என்று வேணு மெக்கானிக்கிடம் போவதே இல்லை.

சின்னச் சின்ன மைனர் வேலைகளையும் வேணுவே பார்த்துவிடுவான்.

இருந்தும் இந்த ‘கீச்சுவீச்சு’ சப்தத்தை மட்டும் எதுவும் செய்ய முடியவில்லை.

போய்த் தொலைகிறது என்று விட்டுவிட்டான். இன்னொரு வேடிக்கை.

அவனைத் தவிர யாராலும் அதை ஸ்டார்ட் செய்யவும் முடியாது.

ஒரு முறை சாவியோடு மறந்து நிறுத்திவிட்டுப் போய்விட்டான்.

திரும்பி வந்து வண்டியைக் கிளப்பியபோது ஒருவர் அதைப் பார்த்து ‘என்ன சார் வண்டி ஸ்டார்ட் ஆயிடிச்சு போல’ என்று கேட்டுச் சிரித்தார்.

தொடர்ந்து ‘ஒரு மணி நேரமா உதைச்சுக்கிட்டிருந்தீங்களே... இப்ப என்ன பண்ணீங்க ஒரு உதைல ஸ்டார்ட் ஆயிடிச்சே’ என்றார்.

அப்போதுதான் எந்த பிரகஸ்பதியோ வண்டியைக் கிளப்பிக் கொண்டு போக முயன்றிருக்கிறான் என்பது தெரிந்தது.

அதே சமயம் சிரிப்பாகவும் வந்தது.

‘பாவம் அவன்... கால்வலிக்கு இன்று நிச்சயம் டாக்டரைப் போய்ப் பார்ப்பான்’ என்று நினைத்துக் கொண்டான். அது என்னவோ தெரியவில்லை... அந்த வாகனத்துக்கும் வேணு என்றால் ஒரு பாசம் இருக்கிற மாதிரித்தான் தெரிகிறது. இல்லாவிட்டால் சப்தமோ சண்டித்தனமோ... இன்றைக்கும் அறுபது மைல் வேகத்தில் எல்லாம் ஓடுமா?

வேணுவும் நல்ல உயரம்! வண்டியில் அவன் அமர்ந்து கொண்டு வேலைக்குப் போவதை யாராவது பார்த்தால் நிச்சயம் சிரித்துவிடுவார்கள்.

ஒரு ரோபோ மனிதன் படு விறைப்பாக ஓட்டிக் கொண்டு போகிற மாதிரி இருக்கும்.

இன்றைக்கும் அதே காட்சி... அதே கீச்சு வீச்சு சப்தம்!

ஒரு திருப்பத்தில் வண்டியை ஓடித்தபோது எதிரில் ஒரு டிராஃபிக் பொலிஸ்காரர் லைசென்சுக்காக வழிமறித்தார். நிறைய பேர் அகப்பட்டிருந்தார்கள்.

ஒருவரிடம் கூட ஆர்.சி.புக்கோ, லைசென்ஸோ இல்லை. பொலிஸ்காரர் படு உற்சாகமாக இருந்தார் கோர்ட்டுக்குப் போனா ஐநூறுக்கு



மேல அபராதம் கட்டணும். இங்க ஒரு ஐம்பதை மட்டும் வெட்டிட்டு போய்கிட்டே இரு’ என்று கையை நீட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் வேணு சப்ஜாடாக லைசென்ஸ், ஆர்.சி.புக் என்று எல்லாவற்றையும் எடுத்துப் போட்டான். அந்த பொலிஸ்காரருக்கு மிக ஏமாற்றமாகப் போய்விட்டது. வண்டியை சுற்றி வந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு ‘இதுக்கு சர்வீஸ் எக்ஸ்பயரி ஆகியிருக்கணுமே?’ என்று மிரட்டலாக ஒரு பார்வை பார்த்தார்.

“உங்களுக்கு தேவை லைசென்ஸ், ஆர்.சி.புக்., இன்ஸ்யூரன்ஸ் சர்டிபிகேட். எல்லாம் இருக்குல்ல...!?”

“அது யாருக்கு வேணும். சர்வீஸ் எக்ஸ் பயரி ஆயிடிச்சு, ஆர்.டி.ஓ.க்கிட்ட காட்டி என்ஜினை செக் பண்ணலை. எடு பணத்தை” என்றார்.

“முடியாது... இது என் மாமா வெச்சிருந்து, அவர் மகன் வெச்சிருந்து இப்ப நான் வெச்சிருக்கேன். அதுக்காக நீங்க பாராட்டணும்.”

“புரியாம பேசறியே... அப்புறமா கண்டபடி ஃபைன் போட்ருவேன். ஒரு நூறு ரூபாயை கொடுத்துட்டு போய்கிட்டே இரு...”

“என் மாச சம்பளமே இரண்டாயிரம்தான் சார். நூறு ரூவால்லாம் தரமுடியாது.”

இருவரிடமும் வாக்குவாதம் வலுக்கத் தொடங்கிவிட்டது. மற்ற பார்ட்டிகள் தலையில் அடித்துக் கொண்டு நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள்.

“சார்...! வீரப்பனைப் போய் பிடியுங்க சார். நான்லாம் அப்பாவி. என் உசுரை ஏன் சார் வாங்கறீங்க..?” வேணுவிடமும் வார்த்தை தடித்தது.

“என்னடா.. நக்ஸலைட் மாதிரி நக்கலா பேசறே. நீ நூறு ரூவா இல்ல ஆயிரம் ரூவா தந்தாலும் உன்னை விடமாட்டேன். ஓரமா போய் அப்படியே நில்லு...” என்றொரு மோட்டார் பைக்காரனை நோக்கிப் பாயத் தொடங்கிவிட்டார் அவர். ஒரு ஐம்பது ரூபாய் வசூலுடன் திரும்பிவந்தார். வேணுவும் பார்த்தான். “சரி.. இந்தாங்க சாவி. முடிஞ்சா இங்க இருந்து எடுத்துகிட்டு போங்க. நான் நடந்து வேலைக்கு போறேன். போய் என் முதலாளிகிட்டையே சொல்றேன். மிச்சத்தை அவர் பார்த்துப்பார்” என்று ஒரு மாதிரி சொல்லிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

“ஏய் ஏய் நில்லு... யார் உன் முதலாளி- பெருசா பூச்சி காட்றே.. நான் சி.எம்.மே பேசினாலும் அசரமாட்டேன் தெரியுமா?” என்றார் அந்த பொலிஸ்காரரும். வேணு நின்று ஒரு மாதிரி அவரை வெறித்தான்.

“என்ன வெறிக்கிறே.. யாரு உன் முதலாளி? பெரிய டுபாக்கூரா அந்த ஆளு... சொல்லு.”

“அரிமா பொன்னம்பலம்!”

அவன் சொன்ன மறுநொடி அவர் முகத்தில் ஆசிட் பட்ட மாதிரி ஒரு எரிச்சல்.

“யா..யாரு.. நம்ம பொன்னம்பலம் சாரா?” என்று வார்த்தைகளை அல்வாவாய் இழுத்த அந்த பொலிஸ்காரர் சாவியை அவன் கையை தேடிப் பிடித்து அமுக்கினார். அப்படியே “சாரோட டயர் கம்பெனியிலையா வேலை பாக்கறே?” என்று மிக நைச்சியமாக கேட்டார். அந்த துள்ளல்.. அலட்டல் எல்லாம் பூனையைப் பார்த்த சுண்டெலி கணக்காய் ஓடி ஒளிந்து கொண்டு விட்டிருந்தது!

வேணு ஒரு மாதிரிச் சிரித்தான்.

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

**இந்திரா சௌந்தர்ராஜன்**

# ஆறுமனமே ஆறு!

## இளம் வயதுத் திருமணம்.....

“நீங்கள் சொல்வது சரி ஐயா! ஆனாலும் எம் புள்ளையும் வள்ளி மகளும் இனி சேர்ந்து வாழ நான் சம்மதிக்க மாட்டேன். தயவு செய்து எம்மகனை என்னிடமே விட்டுடுங்க” என்று அழத் தொடங்கினாள் செல்லம்மா.

“சரி செல்லம்மா! றஞ்சனி உங்கள் மகன் மீது பொலிஸில் முறைப்பாடு செய்து முறைப்படி சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தால் என்ன செய்வீர்கள்?”

“போன கார்த்திகை மாதமே அவள் பொலிஸ்ரேசனில முறைப்பாடு கொடுத்து என் புள்ளையை மாட்டிவிட்டுட்டா. அவங்க விசாரித்துப் போட்டு அடியும் போட்டிருக்கிறாங்க. பிறகு எங்க முகாம் தலைவருட்ட சொல்லி மகனை விடுதலை செய்தேன். கலியாணம் முறைப்படி பதிவ செய்யாம முடிச்சதால சட்டப்படி ஒன்றும் செய்ய முடியாது என்று பொலிசில சொல்லிவிட்டாங்களாம்.”

காதல், திருமணம், குடும்பம், ஊடல், கூடல், பண்பாடு, பாரம்பரியம், வாழ்க்கை இவையெல்லாம் அகதி முகாம் வாழ்க்கையில் போழை அடிப்பது, கையடித்து விளையாடுவது, கிட்டி விளையாடுவது, ஒளித்து விளையாடுவது, கிளித்தட்டு, கிட்டிக் கம்பு விளையாட்டுக்கள் போல விளையாட்டுத்தனமாகிவிட்டதை எண்ணிக் கலங்கினேன்.

“சரி செல்லம்மா! நால்லா யோசித்து முடிவ செய்ய வேண்டும். நீங்கள் இங்கு வந்ததற்கு நன்றி. இன்னுமொரு நாள் உங்களைச் சந்திக்கிறேன். போய் வாருங்கள்” என்று அனுப்பிவைத்தேன்.

அடுத்தநாள் வள்ளியும் ரஞ்சனியும் வந்திருந்தார்கள். இருவரையும் ஆற்றுப்படுத்தல் அறையினுள் அமரச் செய்தேன்.

கடந்த மூன்று நாள் சந்திப்பின் அறிக்கையை நான் திருப்பிப் பார்க்க வேண்டியிருந்ததால் 10 நிமிட அவகாசம் கேட்டு எனது அறைக்குச் சென்று திரும்பினேன்.

“சொல்லுங்கள் வள்ளி! றஞ்சனி! எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் முகாம் பக்கம் மழை பெய்ததா?”

“நலமாக இருக்கிறோம். அங்கே மழையில்லை. எங்க முகாமை முகாம் என்று சொல்வதை விட பொட்டல் என்றே சொல்லலாம். புல்லுக் கூட முளைக்காத பூமி அது.” என்று வள்ளி சொன்னாள்.

“றஞ்சனி என்ன! வாய்க்குள்ளே கொழுக்கட்டையா இருக்கு? ஏன் கதைக்க கஸ்ரமா இருக்கிறதா?” என்று நகைச்சுவையாகக் கேட்டேன்.

ஒரு புன்முறுவலுடன். “ஒன்றுமில்லை, சிவராமன் என்ன சொன்னான்.” என்று கேட்டாள்.

“என்ன அவசரம் றஞ்சனி? நீங்கள் சிவராமனுடன் சேர்ந்து வாழத் தயாரா? இதற்குப் பதில் சொல்லுங்கள். பிறகு சிவராமன் என்ன கூறினான் என்று சொல்கிறேன்” என்றேன்.

சற்ற அமைதியாக இருந்த றஞ்சனி, தொடர்ந்தாள்.

“நான் கதைக்கிற பொடியங்கள் எல்லாரையும் மாப்பிள்ளை என்று சாட்டுவதும், இரவிலே என் கையை முறுக்கி அடிப்பதும் எட்டு மாதமாகத் தொடர்ந்து நடந்தாலும் நான் ரி.வி. கொட்டகைக்குள் இருந்த போது அவ்வளவு சனத்துக்கு முன்னால என் தலைமயிரைப் பிடித்து இழுத்து அடித்ததும், எங்க அம்மாவை முகாமிலுள்ள ஆம்பிளைகளுக்கு மாப்பிளைச்சாட்டி அழைப்பதும் நான் கர்ப்பமாகிச் சத்தியெடுக்கும் மாதத்தில் நீ யாரிட்ட புள்ளை வாங்கினாய்? என்று கேட்டு அடித்ததும் என்னால் மறக்க முடியவில்லை. இருந்தாலும் இனிமேல் இப்படி நடக்க மாட்டேன் என்று சிவராமன் சத்தியம் செய்தால் நான் சேர்ந்து வாழ விரும்புகிறேன்.” என்று கூறினாள்.

வள்ளியும் பக்கத்திலிருந்து தலையாட்டினாள். “நீங்கள் கேட்பது எல்லாம் நியாயமானதுதான் றஞ்சனி! ஆனால் சிவராமன் இதற்கெல்லாம் சம்மதிப்பான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?” என்றேன்.

“அவன் ஒத்துவரமாட்டான்” என்றாள் வள்ளி.

“ஏன் வள்ளி அப்படி சொல்கிறீர்கள்?”

“அவன் தாய் சொல்றபடி செய்கிறவன். தாய் செல்லம்மா முகாம் முழுவதும் சொல்லித் திரிகிறாள், தன் மகனை றஞ்சனியுடன் பேச விடமாட்டாளாம்” என்றாள் வள்ளி.

“நீங்கள் சொல்வதையும் ஏனோ தானோ என்று விட முடியாது. ஆனாலும் றஞ்சனியையும் சிவராமனையும் வலுக்கட்டாயமாகச் சேர்த்து வைக்க முயற்சி செய்வது எனக்கு விருப்பமில்லை. குடும்ப வாழ்க்கை என்பது என்னவென்று அறியாத வயதில் திருமணம் முடித்த இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வது உடனே சாத்தியப்படாது. எனவே பல தடவைகள் சந்தித்துக் கதைப்பதன் மூலம்தான் சரியான முடிவுகளை எடுக்க முடியும். அதுவரை றஞ்சனி தன் குழந்தையை வளர்க்க எமது கழகத்தால் ஆன சில உதவிகளைச் செய்கிறேன். றஞ்சனி! நான் கூறுவது சரியா அல்லது நீங்கள் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?”

“சிவராமன் என்னைத் தேடி வரும்வரை நான் அம்மாவுடனேயே இருக்கிறேன்.” என்றாள் றஞ்சனி.

வள்ளியும் றஞ்சனியின் முடிவை ஏற்றுக் கொண்டாள்.

இப் பிரச்சனைக்குரிய தொடர் நடவடிக்கை தொடர்ந்தது.

ஆறு மாதங்களின் பின்பு சிவராமன் வேறு ஒரு முகாமிலுள்ள ஒரு

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

பெண்ணுடன் சேர்ந்து வாழ்கிறான் என்ற தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்து அந்த வாரத்திற்குள்ளேயே றஞ்சனியைச் சந்திக்க முயற்சி செய்தேன். ஒருநாள் இரவ 7.00 மணிக்கு காரையூர் முகாம் தலைவர் தொலைபேசியில் கூறிய செய்தியைக் கேட்டு அதிர்ந்துபோனேன். றஞ்சனி தன் உடம்பில் மண்ணெண்ணையை ஊற்றித் தீவைத்துத் தற்கொலை செய்து கொண்டாள்.

இளம் வயதுத் திருமணங்கள் நிலைத்து நின்றதில்லை. 50 வீதம் தற்கொலையும் 45 வீதம் மணமுறிவிலும்தான் முடிந்துள்ளது. முகாம் சூழ்நிலையும், பெற்றோரின் கவலையீனமும், தமிழ்நாட்டில் உள்ள கலாசாரச் சீரழிவும், சினிமாவும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறையும் ஈழத் தமிழரின் இடம் பெயர் வாழ்க்கையில் ஆறாத புண்களாக, இப்படியான சீரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் துப்பாக்கிக் குண்டு பட்டு மரணிப்பதைவிட அகதி வாழ்க்கை மோசமானது. அணுவணுவாக உடலாலும் உள்ளத்தாலும் சித்திரவதைப்பட்டுக் கொண்டு ஏக்கத்துடன் வாழும் எம்மவர் இன்னும் இந்திய அதிக முகாம்களில்.

தொடர்ந்து வரும்...

# ஜெயலலிதாவின் புத்தாண்டு நம்பிக்கைகள்!!

தமிழக முதல்வர் ஜெயலலிதா தற்போது ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத்தில் ஓய்வெடுத்து வருகிறார். அங்கே அவருக்குத் திராட்சைத் தோட்டமும் வேறு சொத்துக்களும் உண்டு.

இரண்டு நாட்களுக்கு முன்பு தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும் ஆந்திர முதல்வருமான சந்திரபாபு நாயுடு வீட்டில் அவருக்கு மதிய உணவு. அவருக்கும் நாயுடுவுக்கும் எட்டாம் பொருத்தம் அப்படியிருக்கையில் திடீரென்று என்ன உறவு?

அதில்தான் சூட்சுமம் அடங்கியிருக்கிறது. புரட்சித் தலைவியைப் பொறுத்தவரை அவரது அடுத்த குறி புதுடெல்லிதான். பிரதமராக வேண்டும் அல்லது குறைந்த பட்சம் துணைப் பிரதமராக வேண்டும்.

சமீபத்தில் நடந்து முடிந்த அ.இ.அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்தில் கூட, பல தலைவர்கள் "இதய தெய்வம் அகில இந்தியாவையும் கட்டி ஆளவேண்டும். அதற்கான தகுதி அனைத்தும் இருக்கிறது" எனப் புகழ்ந்து தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்த, ஜெயலலிதாவும் பெருந்தன்மையாக அந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொண்ட அதே நேரம் "எந்த இலக்கையும் அடையலாம் கடுமையாக உழைத்தால்" என்று அறிவுரை வேறு பகர்ந்தார்.

ஆக புதுடெல்லியில் செங்கோலோச்சுவதே அவருடைய கனவு என்பதை அவர் மீண்டும் உறுதிப் படுத்துகிறார். அந்தச் செய்தியினை அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைத் தவிர பொது மக்களும் சரி மற்றக் கட்சித் தலைவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற காரணத்தினால்தான் இப்படித் தவணை முறையில் தனது அபிலாஷைகளை வெளிப்படுத்தி வருகிறார் ஜெயலலிதா.

பழைய பகைமையினை மறந்து சந்திரபாபு நாயுடுவை அவராகவே வலியச் சென்று சந்தித்தது கூட புதுடெல்லி செல்வதன் ஓர் அம்சம்தான்.

சில மாதங்களுக்கு முன்பு சோனியா காந்தியைத் தாக்கிக் காரசாரமாக அறிக்கை விட்டுக் கொண்டிருந்தபோது பாரதீய ஜனதா அணியில் தான் சேரப் போவதில்லை என்றும், மூன்றாவது அணி ஒன்றை அகில இந்திய அளவில் உருவாக்கப்போவதாகவும் கூறியிருந்தார் ஜெயலலிதா.

தெலுங்கு தேசம். உத்திர பிரதேசத்தில் முலாயம் சிங்கின் சமாஜ்வாடி கட்சி அல்லது மாயாவதியின் பகுஜன் சமாஜ், மஹாராஷ்ட்டிராவில் சரத் பவாரின் காங்கிரஸ் ஜனநாயக முன்னணி போன்ற அமைப்புக்களுடன் சேர்ந்து ஓர் அணியை அமைத்து, அதற்குத் தலைவராகவோ, துணைத் தலைவராகவோ ஆகிவிடலாம். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்த அணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது. மூன்றாவது அணி ஆதரிக்கும் கூட்டே ஆட்சி அமைக்கும், அப்போது தனக்கும் முக்கிய பொறுப்பு மத்தியில் கிடைக்கும் என்றுதான் முதலில் ஜெயலலிதா கணக்குப்போட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால் பின்னர் மதமாற்றத் தடைச் சட்டம், நரேந்திர மோடிக்கு வாழ்த்து, அவரின் பதவியேற்பு விழாவில் பங்கேற்றது போன்ற நடவடிக்கைகளெல்லாம் ஜெயலலிதா மிக வேகமாகப் பாரதீய ஜனதாவை நோக்கி முன்னேறி வருகிறார் என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. சந்திரபாபு நாயுடு சமீப காலமாக முரண்டு பிடித்து வருகிறார். ஜனநாயகக் கூட்டணியினை வெளியிலிருந்துதான் தெலுங்கு தேசம் ஆதரிக்கிறது. குஜராத் கலவரங்களுக்குப் பொறுப் பேற்று நரேந்திர மோடி பதவி விலக வேண்டும் என்று குரல் கொடுத்ததும் அக் கட்சிதான்.

மோடி பதவி விலகவில்லை. தெலுங்கு தேசமும் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளவில்லை என்பது வேறு விசயம். ஆனாலும் குஜராத்திற்குப் பிறகு, நாங்கள் இந்துத்துவ கொடியினை உயர்த்திப் பிடிப்போம் என்ற ரீதியில் பாரதீய ஜனதாவினர் பேச, தெலுங்கு தேசம், தி.மு.க. 'ஐக்கிய ஜனதா தளம் போன்ற கட்சிகள் "அப்படி ஏதாவது நடந்தால் நாங்கள் கூட்டணியை விட்டு விலகிவிடுவோம்" என எச்சரித்திருக்கிறார்கள்.

சந்திரபாபு நாயுடு ஒன்றும் தீவிர இந்துத்துவ எதிர்ப்பாளரில்லை. தனது மாநிலத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருக்கும் முஸ்லிம்களின் வாக்குகளை ஒரேயடியாக இழந்துவிட அவர் தயாராக இல்லை, அவ்வளவுதான்.

ஆந்திராவில் முக்கிய எதிர்க் கட்சி காங்கிரஸ் என்பதால் அதை அடக்கி வைப்பதற்காகவே அவர் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருக்கிறார் என்பதுதான் பொதுவான கணிப்பு.

தேவையானால் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாவை எதிர்க்கத் தயங்கமாட்டார் எனவும் கூறப்படுகிறது.

இத்தகைய பின்னணியில்தான் ஜெயலலிதா சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்திருக்கிறார். புதுடில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் தானாகவே சென்று நாயுடுவைச் சந்தித்துப் பேசி "நான் உங்களுடன் நிறையப் பேச வேண்டும், ஹைதராபாத் வருகிறேன். அப்போது நேரம் ஒதுக்குங்கள்" என ஜெயலலிதா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மூன்றாவது அணி முயற்சி என்கின்றனர் சிலர். ஆனால் மேலே குறிப்பிட்டிருப்பதைப் போன்று பா.ஜ.க.வுடன் வலிந்து சென்று உறவைப் புதுப்பித்துக் கொள்ளத் துடிக்கும் அவர் மூன்றாவது அணி குறித்து யோசிப்பாரா என்பது கேள்விக்குறியே.

தவிரவும் உத்திரப் பிரதேச முதல்வர் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதியோ, நாயுடுவோ, ஜெயலலிதா புதுடில்லி அரசியலில் முக்கியத்துவம் பெற எடுக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பார்களா என்பதும் கேள்விக் குறியே.

இன்னொரு புறம் சரத் பவார், முலாயம் சிங் போன்றோர் காங்கிரஸை முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட்டு பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள முன் வருவார்களா என்பதும் சந்தேகமே.

வேறொரு கோணமும் இருக்கிறது. பா.ஜ.க.வுடன் திரைமறைவில் மோதிக் கொண்டிருக்கும் நாயுடுவைச் சமாதானப்படுத்த அமைதித் தூதுவராக ஜெயலலிதாவே புறப்பட்டுச் சென்றிருக்கலாம். அப்படிச் செய்து பா.ஜ.க.வின் நல்லெண்ணத்தைப் பெற அவர் முயற்சிக்கலாம்.

அதெல்லாம் ஒன்றுமில்லை, தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தி.மு.க.வைக் கழற்றிவிட பா.ஜ.க. தயங்குகிறது. 1998ல் நடந்த நிகழ்வுகளை மறக்காத அக் கட்சித் தலைமை, ஜெயலலிதா தலைகீழாக நின்றாலும் கூட அவரைத் தங்கள் அணியில் மீண்டும் இணைத்துக் கொள்ள இன்றைய சூழலில் தயாராக இல்லை, எனவே நாயுடு தன் சார்பாக வாதாட வேண்டும் என ஜெயலலிதா மனுப் போட்டிருக்கிறார் என்று சில விளக்கங்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயல் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனோ டான்சி வழக்கின் மீதான இறுதித் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் வர இருக்கும் வேளையில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே நாயுடுவின் உதவியை நாடுகிறார் என்று கூறியிருக்கிறார்.

எப்படியோ ஜெயலலிதா தனது இலக்குகளை அடைய அயராது உழைக்கும் அரசியல்வாதி என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

சந்திரபாபு நாயுடுவைக் கிருஷ்ணா நீர்ப் பிரச்சினை தொடர்பாக மோசடிப் பேர்வழி என்று சட்டமன்றத்திலேயே வர்ணித்தவர் அவர்.

நாயுடுவின் மாமனார் தெலுங்கு தேச நிறுவுனர் என்.டி. ராமராவின் இரண்டாவது மனைவி லஷ்மி சிவபார்வதிக்கும் நாயுடுவிற்கும் மோதல் எழுந்த போது பார்வதியை ஆதரித்துப் பேசியவர் ஜெயலலிதா.

ஒரு கட்டத்தில் நாயுடுவின் ஆதரவாளர்கள் பார்வதியின் மீதும் ஜெயலலிதாவின் மீதும் ஒரே மாதிரி கடுமையான தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தனர். இரு பெண் அரசியல்வாதிகளுக்குமிடையே கொடுக்கல் வாங்கலெல்லாம் இருந்ததாகச் செய்திகள் உண்டு. சந்திரபாபு நாயுடுவிற்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் இடையே நெருக்கமான உறவு இருப்பதாக வேறு கூறப்படுகிறது.

இத்தனை இருந்தும் ஜெயலலிதா வலியப் போய் அவரைப் பார்க்கிறார். தான் ஒரு காலத்தில் எதிர்த்த பா.ஜ.க.வுடன் உறவை ஏற்படுத்திக்கொள்ளப் பல்வேறு நடவடிக்கைகளில் இறங்குகிறார் என்பதெல்லாம் அவரது விடா முயற்சிக்கு எடுத்துக்காட்டுகள் தாம்.

கருணாநிதியைப் பொறுத்தவரை அவர் கையில் ஏதுமில்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேற்றப்படும் நாளைக் கவலையுடன் எதிர்நோக்கியிருக்கிறார். அவரால்

**கானகன்**

ஆகக்கூடியது எதுவுமே இல்லையே, தன்னளவில், தன் குடும்பத்தைப் பொறுத்த அளவில் பிரச்சினை ஏதும் வராவிட்டால் சரி அவருக்கு, அவ்வளவுதான்.

ஆண்டிப்பட்டியில் துவங்கிய 2002ம் ஆண்டு, ஜெயலலிதாவிற்குத் தொடர்ந்து வெற்றிகளையே ஈட்டிக் கொடுத்திருக்கிறது. அதைவிடவும் அடுத்த இரண்டு ஆண்டுகள் நல்ல செய்திகளைக் கொடுக்கும் என அவர் நம்புகிறார்.

மற்றக் கட்சிகளும் தலைவர்களும் அவரை நம்பத் தயாராக இருக்கின்றார்களா என்பதைப் பொறுத்தே அவரது எதிர்கால வெற்றிகள் அமையும். ○




STUDY IN

London, U.S.A., Cyprus, Canada, Singapore, Ireland, Australia, Japan, Malaysia & India.

- Basic Qualification G.C.E.O/L.
- All courses available in any field.
- Easy Payment for accommodation.
- Part time jobs guaranteed.

UK-only 500 £ down payment.

Jan/Feb Batch now on process.

For free assessment contact us:

M.S. Lanka

Recruitment & Travels (Pvt) Ltd.

379 2/2, (2nd Floor) Galle Road, Wellawatte, Colombo 06.

(Opposite Delmon Hospital & Nations Trust Bank)

(Office) Tel: 074-513442, 074-517836, 074-519157

Mobile: Mr. A.H.M. Mansoor 0777-374314

Fax: 074-518928 E-mail: mslanka@wow.lk Web: www.mslanka.com


## சூடு பிடிக்கத் தொடங்கும் உலகக் கோப்பை 2003

இன்னும் ஒரு மாத காலத்தில் தென்னாபிரிக்காவிலும், சிம்பாப்வேயிலும் ஆரம்பமாக இருக்கும் கிரிக்கெட் உலகக் கிண்ணம்–2003 இல் பங்கு பற்றும் 12 நாடுகளும் போட்டிக்கான ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளன. உலகளாவிய ரீதியில் கிரிக்கெட் இரசிகர்களுக்கிடையே உலகக் கிண்ணம் தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதிக்கமைய டிசம்பர் 31ம் திகதிக்கிடையில் பங்கு பற்றும் சகல நாடுகளும் தமது 15 பேர் கொண்ட இறுதி அணியின் பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாட்டில் உள்ளன. அதற்கமைய, இப் பந்தி எழுதும்வரை நான்கு நாடுகள் தமது உலகக் கிண்ண அணியினை அறிவித்து விட்டன. அந்த அணிகள் தொடர்பில் ஒரு சிறு ஆராய்வு:-

மேற்கிந்தியத் தீவுகள்- இலங்கையில் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன்ஷிப் போட்டியின் போது உடல் நலம் பாதிக்கப்பட்ட நட்சத்திர துடுப்பாட்டக்காரர் லாரா மேற்கிந்தியத் தீவுகள் அணியின் உலகக் கிண்ண இறுதி அணியில் இடம்பெற்றுள்ளார். லாராவின் பிரசன்னம் இல்லாமலேயே இந்தியச் சுற்றுலாவின் போது 7 போட்டிகள் தொடரில் 4 போட்டிகளை வென்றதன் மூலம் தொடரினை வென்று புத்தெழுச்சி பெற்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள்அணி லாராவின் வருகையுடன் மேலும் பலம் பெற்று எதிரணிகளுக்குச் சவாலாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

### அணி விவரம்

கார்ல் ஹூப்பர் (காப்டன்), ரிட்லி ஜேகப்ஸ், கிரிஸ் கெயில், வேவல் ஹைன்ட்ஸ், பிரையன் லாரா, மார்லன் சாமுவேல்ஸ், ராம் நரேஷ் சர்வான், சிவநாரயண் சந்தர்பால், ரிகார்டோ பாவெல், பெட்ரோ காலின்ஸ், கோரே கோலிமோர், மெர்வின் தில்லான், வாஸ்பார்ட் டிரேக்ஸ், ஜெர்மைன் லாசன், நிக்சன் மெக்லீன்.

### சிம்பாப்வே அணி விபரம்

ஹீத் ஸ்ட்ரீக் (அணித் தலைவர்), மார்க் வெர்மியூலென், டியன் இப்ராஹிம், ஆன்டி ஃபிளவர், கிராண்ட் ஃபிளவர், கய் விட்டல், கிரெய்க் விஷார்ட், டிரெவிஸ் ஃபிரென்ட், டடென்டா டைபு, டக்ளஸ் மாரில்லியர், டக்ளஸ் ஹோன்டோ, பிரையன் மர்ஃபி, ஹென்றி ஒலோங்கா, ஆர்னால்டஸ் பிளிக்நாட், சியான் எர்வின்.

சிம்பாப்வேயின் உலகக் கிண்ண அணியில் அதன் முன்னாள் தலைவர் கேம்பல் இடம்பெறவில்லை. காயம் காரணமாக ஹீத் ஸ்ட்ரீக் விளையாடாத வேளையில் அணித் தலைவராக கேம்பல் கடமையாற்றிய போதும் இறுதியாக விளையாடிய 10 ஒரு நாள் போட்டிகளிலும் அவர் பிரகாசிக்கத் தவறியதால் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது. கடந்த உலகக் கிண்ணப் போட்டியிலே சிம்பாப்வே அணி வெகு சிறப்பாக விளையாடி 'சுப்பர் சிக்ஸ்' நிலைக்குள் வந்தமை நினைவு கொள்ளத் தக்கதாகும்.

### தென் ஆபிரிக்கா

இம் முறை உலகக் கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்குக் கூடுதல் வாய்புள்ளதாகக் கிரிக்கெட் ஆய்வாளர்களால் கருதப்படும் நாடாகிய தென் ஆபிரிக்க அணியில் அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கேரி கேர்ஸ்டன் மீண்டும் இடம் பிடித்துள்ளமை முக்கிய அம்சமாகும். நீண்ட கால அனுபவமுடைய கேர்ஸ்டன் இடம்பெற்றிருப்பது இளம் வீரர்களின் மீது சுமத்தப்பட்டிருக்கும்அழுத்தத்தை வெகுவாகக் குறைக்கும் என நம்பலாம்.

### அணி விவரம்

ஷான் பொல்லாக் (காப்டன்), மார்க் பௌஷர் கேர்ஸ்டன், ஹெர்ஷல் கிப்ஸ், போதா திப்நார், ஜாக்ஸ் காலிஸ், ஜான்டி ரோட்ஸ், லான்ஸ் குளூஸ்னர், நிக்கி போயே, ஆன்ட்ரு ஹால், மகாயா என்டினி, ராபின் பீட்டர்சன், ஆலன் டொனால்ட், சார்ல் லாங்வெல்ட், மோன்டில் ஜோன்டேகி.

மேலே குறிப்பிட்ட மூன்று அணிகளுடன் இலங்கை அணியும் தனது பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளது. (ஸ்போர்ட்ஸ் பகுதியைப் பார்க்கவும்) ■

# ஏவாள் மீண்டும் பிறக்கிறார்

**கு**ளோனிங் முறையில் முதல் குழந்தை பிறந்துள்ளதாக விஞ்ஞானிகள் அறிவிப்பு



குளோனிங் (பல படியாக்கம்) மூலம் மனித உயிர்களை உருவாக்குவது மானுட விழுமியங்களுக்கு முரணானதா என்ற சர்ச்சை ஒரு புறமும், குளோனிங் மூலம் 'மனிதன்' உருவாக்கப்படுவதில் உள்ள ஆபத்துக்கள் தொடர்பான சர்ச்சை ஒரு புறமுமாக நிகழ்ந்து கொண்டிருக்க, பல படியாக்கத்தின் மூலம் பெண் குழந்தை ஒன்றைப் பிறக்கச் செய்துள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ரேலியன் பிரிவு என அழைக்கப்படும் ஒரு பிரிவைச் சேர்ந்த பிரெஞ்சு விஞ்ஞானியான பிரிகைட் பாய்சலையர் இந்த குளோனிங் குழந்தை குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இக் குழந்தை தொடர்பான முழு விபரத்தையும் அவர் வெளியிடவில்லை. அவை விரைவில் அறிவிக்கப்படும் எனக் கூறியிருக்கிறார்.

இக் குழந்தை குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டதுதான் என்று விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டால், குளோனிங் முறையில் உருவாகும் முதல் குழந்தை இதுவாகத்தான் இருக்கும்.

ஏற்கெனவே, கன்றுக்குட்டி, ஆட்டுக்குட்டி, பன்றி போன்றவை குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே உள்ள ஒருவரைப் போன்றே விஞ்ஞானிகளின் உதவியோடு மற்றொரு மனிதனை உருவாக்குவதுதான் குளோனிங் ஆகும். ஆணும் பெண்ணும் இணைந்து குழந்தையை உருவாக்குவதற்குப் பதிலாக ஆண் அல்லது பெண்ணின் உயிரணுவை எடுத்து, ஆண் அல்லது பெண்ணின் மரபணுவுடன் அதைச் சேர்த்து அதிலிருந்து குழந்தையை உருவாக்கி அதைப் பெண்ணின் கர்ப்பப் பையில் வைக்கின்றனர் விஞ்ஞானிகள். இவ்வாறு பிறக்கும் குழந்தை, அது யாருடைய மரபணுவில் இருந்து உருவானதோ அவரைப் போன்ற தோற்றத்துடன் இருக்கும். நேற்றுப் பிறந்ததாகக் கூறப்படும் பெண் குழந்தை அதன் தாயைப் போலவே இருக்கும்.

ஆனால் அத்தகைய குழந்தையின் மன வளர்ச்சி, சுபாவம், செயற்பாடுகள் எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது என்று இன்டியானாவில் உள்ள மரபணுவியல் பேராசிரியர் வில்லியம் கூறுகிறார்.

இப்போது பிறந்திருப்பதாகக் கூறப்படும் குளோனிங் குழந்தை மற்ற மனிதர்களைப் போலத்தான் இருக்கும் என்று எப்படிக் கூற முடியும் என்கிறார் அவர்.

ரேலியன் மதப் பிரிவு என்பது அமெரிக்காவில் செயற்படும் ஒரு விந்தையான பிரிவினர் ஆவர். இவர்களது முயற்சியில்தான் இப்போது முதல் முறையாகக் குளோனிங் முறையில் குழந்தை பிறந்துள்ளது. வேற்றுக் கிரக வாசிகள் மூலமே உலகில் மனிதன் பிறந்ததாக இம் மதப் பிரிவினர் நம்புகின்றனர்.

இந்தக் குளோனிங் குழந்தைக்கு ஏவாள் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைக்கான உரிமை தொடர்பில் அதனை உருவாக்கிய நிறுவனம் உத்தியோக பூர்வமாக விண்ணப்பம் செய்ததையடுத்து உலகெங்கிலும் இருந்து கண்டனங்கள் எழுந்துள்ளன. ■

## "அம்மாவைச் சுடுகிறார் அப்பா" குழந்தையின் கடைசி நேரக் கதறல்

**அ**மெரிக்காவிலுள்ள அந்த நகரின் பொலிஸ் நிலையத்தில் அலறியது தொலைபேசி.

"தயவு செய்து உடனே வாங்க, அம்மாவைச் சுட்டுக் கொல்ல அப்பா தயாராயிட்டாரு..." அழுது கொண்டே கூறினாள் 8 வயதுச் சிறுமி மிச்சேல்.

நிலைமையைச் சட்டென்று புரிந்துகொண்ட பொலிசார், "இதோ வந்துடறோம்மா.. நீ அங்கேயே இரு, டெலிபோனை வெச்சுடாதே.." என்றனர்.

அவளது தந்தை எர்னஸ்ட் ஹெர்னான்டெஸ் (40), மனைவி டோஷா வாஸெர்பர்கரை (29) கொல்வதாக மிரட்டிக் கொண்டிருந்தார். பயத்தில் நடுங்கியபடி அவர்களது மகன் மைக் (4). பொலிஸுக்கு மிச்சேல் செய்த தொலைபேசியில் சிறிது நேரம் நிசப்தம் நிலவியது.

திடீரென்று அந்த வீட்டில் இருந்த ஒரு பெண்ணின் குரல், "மிச்சேல் பொலிசுக்குப் போன் செய்கிறாள்..." என்று சொல்வது மறுமுனையில் இருந்த பொலிசாருக்குக் கேட்டது. விபரீதத்தைப் புரிந்துகொண்ட பொலிசார் ஹெர்னான்டெஸ் வீட்டுத் தொலைபேசி எண்ணைத் தெரிந்து கொண்டு, அந்தக் குழந்தையுடன் தொடர்புகொள்ள முயன்றனர்.

இம் முறை எடுத்தது குழந்தை அல்ல. அவளது தந்தை. "யார் அழைத்தார்கள்?" என்று அதட்டினார். சிறிது நேரத்தில் பேச்சே இல்லை. அடுத்த முறை பொலிஸார் தொலைபேசி செய்த போது, மறுமுனையில், 'பதில் சொல்லும் இயந்திரம்' (ஆன்ஸரிங் மெஷின்) பேசியது.

ஒன்பதே நிமிடத்தில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கதவைத் தட்டினர். பலனில்லை. கதவை உடைத்துப் பார்த்தனர். உள்ளே, நால்வரும் துப்பாக்கிக் குண்டுக் காயங்களுடன் இறந்து கிடந்ததைத்தான் அவர்களால் பார்க்க முடிந்தது.

அமெரிக்காவின் சிவில் சமூகத்தினரிடையே நிலவும் துப்பாக்கிக் கலாசாரம் இவ்வாறு ஏராளமான வீட்டு வன்முறைகளுக்கு வழி வகுக்கிறது. ●



# இன்டர்நெட் காதல்கள்

## பிடிவாதக்காரி!

**நா**ன் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு நிறையத் தோழிகளும் நண்பர்களும் உண்டு. நாங்கள் எங்கே போனாலும் கும்பலாகப் போய் விட்டு வருவோம். என் தோழிகளுக்கெல்லாம் எங்கள் கும்பலில் பாய்ஃப்ரெண்ட்கள் இருக்கிறார்கள். எனக்குத்தான் இல்லை.

இது எனக்குச் சில சமயம் பொறாமையாக இருக்கும். ஆனால் அவர்களுடைய கொஞ்சல்களை என்னால் வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது. ஒரு தடவை ஒரு தோழியின் பிறந்த நாள் பார்ட்டிக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு அழகான பையனைப் பார்த்ததும் அவனை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்படி என் தோழியை நச்சரித்தேன்.

நானாகப் போய்ப் பேச்சுக் கொடுக்க எனக்குக் கூச்சமாக இருந்தது. அவளும் அறிமுகப்படுத்தி வைத்தாள். அவன் பெயர் அஜய். அவனும் கல்லூரி மாணவன்தான். என் வயதுதான். பெயருக்காகப் புன்னகைத்துவிட்டு நான் நகர்ந்துவிட்டேன்.

"அவனோடு இன்னும் நாலு வார்த்தை பேசினால் என்ன குறைந்தா போய்விடுவாய்? அவன் என்ன நினைத்துக் கொள்வான்?" என்று தோழி பிறகு என்னிடம் கோபித்துக் கொண்டாள். அவனை ஈ-மெயிலில் மடக்கலாம் என்று இரகசியமாக அவனுடைய ஈ-மெயில் முகவரியை அவளிடம் வாங்கிக் கொண்டேன்.

அது யாஹூ முகவரி என்பதால் சாட்டிற்கும் அஜய் அதைத்தான் பயன்படுத்துவான் என்று ஊகித்தேன். இரண்டு நாட்களில் அவனை ஆன்லைனில் பிடித்தேன். இரண்டாவது முறையாக என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். "ஓ, ஹாய் சொல்லிவிட்டு ஓடிப் போன பெண்தானே, ஞாபகம் இருக்கிறது" என்றான் அஜய்.



நாங்கள் நேரில் சந்திக்கவில்லை என்றாலும் தினமும் சாட் செய்தோம். சில வாரங்கள் கழித்து ஃபோனிலும் பேசினோம். முதலில் சும்மா அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம். பிறகு அது போரடித்துப் போய் ஒருவரை ஒருவர் ஓயாமல் சீண்டிக் கொண்டோம். எப்போதாவது எனக்கு மூட் சரியில்லை என்றால் அவன்தான் நல்ல நண்பன் போல ஆறுதல் சொல்வான்.

நாங்கள் சாட் செய்ய ஆரம்பித்து இரண்டு மாதங்கள் கழித்து அவன் "நாம் நேரில் சந்திப்போம்" என்றான். எனக்கும் ஆசைதான். ஆனால் நான் ரெடியாக ஒப்புக் கொண்டால் நான் அலைவதாக நினைத்துக் கொள்வான். எனவே "அப்புறம் பார்க்கலாம்" என்று தொடர்ந்து வெறுப்பேற்றி வந்தேன்.

நாளாக ஆக அவன் தொந்தரவு தாங்கவில்லை. நானும் பிடிவாதமாகவே இருந்தேன். அஜய் எங்கள் இருவருக்கும் தெரிந்த நண்பர்கள் மூலம் 'தற்செயலாக' சந்திக்க முயற்சி செய்தான். இதை நான் முன்பே எதிர்பார்த்ததால் நான் சாமர்த்தியமாக என் நண்பர்களின் பார்ட்டிகள், சினிமாக்களைத் தவிர்த்தேன்.

அப்புறம் திடீரென்று ஒரு நாள் காணாமல் போனான் அஜய். மூன்று நாள் ஆனதும் எனக்குப் பொறுமை போய்விட்டது. அவனை அறிமுகப்படுத்தி வைத்த என் தோழியை விசாரித்தேன். அவளுக்கும் ஒன்றும் தகவல் தெரியவில்லை. அவனுக்கு "சாரி" சொல்லி இரண்டு, மூன்று ஈ-மெயில்கள் அனுப்பிப் பார்த்தேன். அதற்கும் பதில் இல்லை.

நாம் இந்த அளவுக்குப் பிடிவாதம் பிடித்திருக்கக் கூடாது என்று எனக்கு என் மீதே கோபம் வந்தது. நான்காவது நாள் நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத சம்பவம் நடந்தது. அஜய் என் வீட்டுக்கே வந்துவிட்டான்! ஒன்றுமே நடக்காதது போல் சிரித்துக் கொண்டு "ஹாய்" சொன்னான். "நீ சொல்லாவிட்டால் உன் இடத்தை என்னால் கண்டுபிடிக்க முடியாதா" என்றான்!

எங்கள் இரண்டு பேராலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. சாட்டில் அவன் எனக்கு வைத்த செல்லப் பெயர்களை வைத்து குஷியாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். நான் எல்லாவற்றுக்கும் வெட்கமாக "சீ போடா!" என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அஜய் மாதிரி ஒரு ஜொள்ளு பார்ட்டியை என் வாழ்க்கையில் நான் பார்த்ததில்லை. அதற்குப் பிறகு எங்கள் கும்பலில் எனக்கும் ஒரு ஜோடி கிடைத்தது என்று சொல்லவே தேவையில்லை! இதுதான் என் காதல் கதை! ■

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்களில் அநேகமானவர்கள் அவ்வப்போது அனுப்பி வைத்த மடல்களைக் கருத்திற் கொண்டு 'முரசு குறுக்கெழுத்துப் போட்டி' இவ்வாரம் முதல் ஆரம்பமாகின்றது. உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 01

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | ■ |
| 5 | | ■ | 7 | 8 |
| | ■ | 10 | | |
| ■ | 13 | | ■ | |
| 16 | ■ | 17 | 18 | |
| ■ | 20 | | | ■ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 11.01.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-01**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல. - 1772**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

### இடமிருந்து வலம்

(1). அரசும் புலிகளும் இணங்கியுள்ள ஆட்சி முறை.
(5). வன்னிப் பகுதியில் உள்ள புனித ஸ்தலம்.
(7). போதை தரும்.
(10). கை குழம்பியுள்ளது.
(13). வல்லவனுக்கு இதுவும் ஆயுதம், மாறி யுள்ளது.
(16). இதன் அடக்கம் தேவை.
(17). துக்கத்தின் வெளிப்பாடு குழம்பியுள்ளது.
(20). கலைமானுக்கு இது அழகு. குழம்பியுள்ளது.

### மேலிருந்து கீழ்

(1). போர்.
(2). குளம்.
(4). தலைமுடி வளர இதன் எண்ணெயைத் தேய்த்துக் கொள்பவரும் உண்டு.
(8). ஆணுமில்லை. பெண்ணுமில்லை. தலைகீழ்.
(10). தலைநகரம்.
(18). நெருப்பில்லாமல் இது வராது. தலைகீழ்.

"நடுராத்திரியில யூனிஃபோர்ம் மாட்டிக்கிட்டு எங்கே கிளம்பறீங்க?"
"நம்ம கபாலி திருடக் கிளம்பறப்ப நான் எதிரே வந்தால்தான் சகுனம் நல்லாயிருக்குனு சொல்றான்!"





"என்ன சார்... சீரியஸா பேசிட்டு இருக்கறப்ப அப்பப்ப சிரிக்கிறீங்க."
"ஸாரி சார்... டி.வி.யில நியுஸ் வாசிச்சுட்டு இருந்தேன். அப்படியே பழக்கம் ஆயிடுச்சு!"



## வல்லவிக்கு வல்லவன்

நகருக்கு மிகத் தொலைவில் ஒதுக்குப்புறமாக ஓர் இளம் பெண்ணைக் காரில் அழைத்துக்கொண்டு போனான் ஒருத்தன்.

ஆள் இல்லாத இடத்தில் தனிமையில் காருக்குள் ஒரு பெண்ணை வைத்துக்கொண்டு ஒரு இளைஞன் என்ன செய்வானோ அதைச் செய்ய முயற்சித்தான் அவன்.

அப்போது அவள் சொன்னாள்: "நான் உன்னிடம் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். நான் ஒரு விலைமாது. எனக்கான தொகை இரு நூறு ரூபாய்."

என்ன செய்வது. பணத்தைக் கொடுத்துக் காரியத்தைச் சாதித்துக் கொண்டான் அவன்.

கொஞ்ச நேரம் கழித்து, "சரி கிளம்பலாமா" என்று கேட்டாள் அவள்.

அப்போது அவன் சொன்னான்: "நான் உன்னிடம் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும். நான் ஒரு டாக்ஸி டிரைவர். இங்கே இருந்து நகரத்துக்குப் போக இரு நூற்றைம்பது ரூபாய் ஆகும்."



## உனக்கே தெரியும்

ஒரு பெண் கடைத்தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தாள். ஒரு கடையில் இருந்த கிளி இவளைப் பார்த்து, "ஏய் நீ குரங்கு மாதிரி இருக்கே" என்றது. இவளுக்கு செம கோபம். திரும்பும்போதும் இவள் தலையைப் பார்த்ததுமே அந்தக் கிளி, "ஏய், நீ குரங்கு மாதிரி இருக்கே..." என்றது.

நேராகக் கடைக்காரனிடம் போனாள். "உன் கிளியை ஒழுங்கா இருக்கச் சொல்லு. இல்லை, அதோட கழுத்தை நெரிச்சுக் கொன்று போடுவேன்" என்றாள்.

"இனிமே அது அப்பிடிச் சொல்லாம நான் பார்த்துக்கிறேன், நீங்க போங்கம்மா..." என்றான் கடைக்காரன். அடுத்தநாள் அந்தப் பெண் அதே கடை வழியாகப் போனாள். இவளைப் பார்த்ததும் அந்தக் கிளி, "ஏய்" என்றது.

"சொல்லு சொல்லு" என்று கோபமாக அந்தப் பெண் கிளியைப் பார்த்துக் கத்தினாள்.

அதற்கு "க்" என்றது அந்தக் கிளி!



"ஹலோ! வணக்கம்... நான் சம்பந்தம் பேசறேன்...!"



"போன்லயெல்லாம் சம்பந்தம் பேச முடியாது.. நேர்ல வாங்க பேசலாம்...!

# இந்தவாரம் உங்கள் பலன்

05.01.2003 தொடங்கி 11.01.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

**தனு** - சூரியன், **மகரம்** - புதன், **இடபம்** - இராகு,சனி, **கர்க்கடகம்** - வியாழன், **விருட்சிகம்** - வெள்ளி, செவ்வாய், கேது, சந்திரன் மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் முயற்சி பலிதம், பொருள் வரவு, மன மகிழ்ச்சி, குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி. மாணவர் கல்விச் சிறப்பு, உயர்கல்வி வாய்ப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

### இடபம்
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) பலவித நன்மை, அன்னியர் உதவி, கௌரவம், தேகாரோக்கியச் சிறப்பு, இனசன விரோதம், உத்தியோகக் கலக்கம், பதவி மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல: 6.

### மிதுனம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) பொருள் விரயம், பெரியோர் உதவி, மறைமுக எதிர்ப்பு, பிரயாண மிகுதியுண்டு. உத்தியோக கஷ்டம்; மேலதிகாரிகளின் தொல்லை. மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### கர்க்கடகம்
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) மனக்குறை அதிகம், குடும்ப சுகம் பாதிப்பு, வெளியிட வாழ்க்கை, வீண் செலவு, பொருள் வரவு மந்தம் உண்டு, உத்தியோகப் பேறு, பதவி மாற்றம், மாணவர் கல்வியில் உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம், செலவு மிகுதி, உறவினர் பகை, வெளியிட வாழ்க்கை, பொருள் வரவு மந்தம், உத்தியோக கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, பரீட்சையில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

### கன்னி
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) முயற்சி பலிதம், பொருள் வரவு, இனசன நன்மை, காரியானுகூலம், உத்தியோக கஷ்டம், மேலதிகாரிகளின் தொல்லை. மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

### துலாம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் உயர்ச்சி, பொருள் வரவு, இனசன நன்மை, உயர்ந்த நிலை, உத்தியோக முன்னேற்றம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வியில் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளால் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

### விருட்சிகம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் மந்தம், பொருள் விரயம், செலவு மிகுதி, பிரயாணக் கஷ்டம், பெரியோர் பகை, உத்தியோக முயற்சி பலிதம், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 4.

### தனு
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் பேறு, உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் நன்மை, பொருள் வரவு, பெரியோர் உதவி உத்தியோகச் சிறப்பு, இடமாற்றம். மாணவர் கல்வியில் மாற்றம் நன்மை, விவசாயிகள். வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 7.

### மகரம்
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) இனசனப் பகை, பொருள் விரயம், தொழில் மந்தம், உறவினரால் கஷ்டம், உத்தியோகக் கலக்கம். மேலதிகாரிகள் பகை. மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### கும்பம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் கலக்கம், பொருள் வரவு மந்தம், பெரியோர் உதவி, வீண் குறை கேட்டல், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகளால் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

### மீனம்
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மந்தம், இனசன நன்மை, பொருள் பேறு, முயற்சி பலிதம், வெளியிடப் பயணம், செலவு மிகுதி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


♥ குரங்கிலிருந்து பிறந்த மனிதன் குரங்கு வேலைகள் பார்த்துக் கொண்டிருக்கும்போது குரங்குகள் மட்டும் மனிதனின் வேலையைப் பார்க்கக் கூடாதா என்ன? குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போல் என்று பழமொழி கூறுவதுண்டு. இங்கே குரங்குகளின் கையில் பூமாலை அல்ல, கம்பியூட்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் லப் டப் கம்பியூட்டர். இவற்றை வைத்து இந்தக் குரங்குகள் என்ன செய்யப் போகின்றன?

பட உதவி: எம். ஸல்மி - றிபாத், பஸ்யால.


## குரங்கு வேலை

◀ வெவ்வேறு நாடுகளில் நாளாந்தம் பஷன் ஷோக்கள் நடக்கின்றன. மொடல் அழகிகள் வண்ண வண்ண ஆடைகளில் மேடையேறிப் போவார்கள்.

அழகு சாதன உற்பத்தி நிறுவனங்களும் ஆடை அலங்கார நிறுவனங்களும் தமது புதிய உற்பத்திகளை பஷன் ஷோக்கள் மூலமே பெரும்பாலும் அறிமுகப்படுத்துவதுண்டு. அவற்றில் ஏகப்பட்ட வித்தியாசங்களைக் காணக் கூடியதாக இருக்கும் புதுப் புது டிசைன்கள், சந்தைக்கு வரும் முன்னர் மொடல்கள் மூலம் மேடைக்கு வந்து போகும். இது அப்படியொரு வித்தியாசமான ஆடையலங்கார முயற்சி தான்.




அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331



அனேகமான வாசகர்கள் இதுவரை கண்டிராத ஆடையலங்கார முயற்சி என்று கருதலாம். ஐரோப்பிய மொடல் அழகி ஒருவர் வாழைப்பழத்துக்குள் தன்னைத் திணித்துக் கொண்டதுபோல் ஒரு அட்டகாசமான பஷன்.

## வாழைப்பழ அழகி



▲ வீதி ஓரங்களில் பிச்சை எடுப்பதற்கு அப்பால் தனக்குத் தெரிந்த ஏதேனும் ஒரு கலையால் வித்தை காட்டி வாழ்க்கை ஓட்டுபவர்கள் மிக அதிக அளவில் வாழும் நகரங்களில் பங்களாதேஷ் தலைநகரமான டாக்காவும் ஒன்று. டாக்கா நகரில் சிறுவர்கள், வளர்ந்தோர், பெண்கள் என்ற வேறுபாடில்லாமல் இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான வித்தை காட்டிகள் வாழ்கிறார்கள். பெரும்பாலானவை கண்கட்டி வித்தை போல் மக்களை ஏமாற்றும் செயல்கள்தான். ஆனால் சில நேரங்களில் சிலர் நம்ப முடியாத அதிசயங்களை அசாதாரணமான ஆபத்துக்களுக்கு மத்தியிலும் நிகழ்த்திக் காட்டுகிறார்கள்.

படத்தில் இருப்பவரும் அப்படியொரு நபர்தான். இவரது பெயர் அக்தருஸ்ஸமான். இவர் டாக்கா வீதியில் தனது தொழிலை நடத்துகிறார். தன் கைவசம் ஏராளமான பாம்புகளை வைத்துக்கொண்டிருக்கும் இவர் அவற்றை வாய்க்குள் திணித்து விழுங்கி, சில நிமிடங்களில் மீண்டும் அவற்றை வெளியில் எடுத்துக் காட்டுகிறார். சில்லறைக் காசுகள் கூலியாகக் கிடைக்கிறது. இவரிடம் இருக்கும் பாம்புகளை மட்டுமல்ல வேறு எவரும் சிறிய விசப்பாம்புகளைக் கொண்டுபோய் இவர் கையில் கொடுத்தாலும் இதே வித்தையை அச்சமின்றிக் காட்டுகிறார் இந் நபர்.

## வாழ்வதற்காக....

பட உதவி: அப்துல் ரசூல் - நிந்தவூர்.



## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் ஆகீசன் விஜயராஜ் 29.12.2002

லண்டன் ILFORD இல் வசிக்கும் விஜயராஜ்-சௌதினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஆகீசன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடினார்.

அன்புச் செல்வம் ஆகீஸ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, லண்டன் உதயராஜ் பெரியப்பா குடும்பத்தினர், சீலன் பெரியப்பா குடும்பத்தினர், செல்வம் மாமா குடும்பத்தினர், டலஸ் மாமா குடும்பத்தினர், றெஜி மாமா குடும்பத்தினர், ஜெனா மாமா குடும்பத்தினர், கஜன் மாமா, அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், DOHA சிறி மாமா, இலங்கை ரவி மாமா குடும்பத்தினர், சுரேஸ் மாமா குடும்பத்தினர், பாலு பெரியப்பா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்-ரவி மாமா (இலங்கை)



## 6வது பிறந்தநாள் வாழ்த்து

### உ.பவித்திரா

### 01.01.2003

புத்தாண்டுப் புதுமையிலே பூத்து, புது மலராய்ப் பூரித்து புத்தம் புது ஆண்டில், உதயராஜா அவர்களின் செல்வப் புதல்வி பவித்திரா தனது ஆறாவது பிறந்த நாளை 01.01.2003 அன்று HORAWA போத் தோட்டத்தில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

பவித்திராவை (திவ்யா) அன்பு அப்பா, தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார் தங்கைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆதி விநாயகர் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்- அப்பா உதயராஜா - இந்தியா.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச. 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.